புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஏப்ரல் 2, 2015 | புரட்சி 14 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00

## "எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்"

# சேலம் மாவட்டத்தில் 9 நாள் எழுச்சிப் பரப்புரை





"எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்" என்ற முழக்கத்தை முன் வைத்து சேலம் மேற்கு மாவட்டத்தின் சார்பாக ஐந்து நாட்கள் பரப்புரைப் பயணம் நடைபெற்றது. பயணத்தின் தொடக்க விழா பொதுக் கூட்டம் மார்ச் 21ஆம் தேதி மாலை 6 மணிக்கு தாரமங்கலத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியக்குமார் தலைமையேற்க, காவை. இளவரசனின் 'மந்திரமா தந்திரமா?' நிகழ்ச்சி நடைபெற்றது. பரப்புரைப் பயணத்தை விளக்கி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரை யாற்றினார்.

**மார்ச்–22 :** நங்கவள்ளி அருகே உள்ள மசக் காளியூரில் மாலை 7 மணிக்கு பரப்புரை நடை பெற்றது. இதில் தோழர்கள் நங்கவள்ளி அன்பு, சேலம் பிரபு பயணத்தை விளக்கி உரையாற்றினர். சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார்.

**மார்ச்–23 :** மேட்டூர் ஆர்.எஸ். பகுதி வைதீஸ்வரா பள்ளி அருகில் மாலை 6 மணிக்கு பரப்புரை நடைபெற்றது. பயணத்தை விளக்கி நங்கவள்ளி அன்பு உரையாற்றினார். இரவு 8 மணிக்கு ஆர்.எஸ். பகுதி என்.எஸ்.கே. நகரில் பரப்புரை நடைபெற்றது.

**மார்ச்–24 :** மேட்டூர் அணை சிறிய பூங்கா அருகில் மாலை 5 மணிக்கு பரப்புரை நடைபெற்றது. பயணத்தை விளக்கி சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் உரையாற்றினார்.

மேட்டூர் அணை தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் இரவு 7 மணிக்கு பரப்புரை நடை பெற்றது. பயணத்தை விளக்கி சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியக்குமார் ஆகியோர் உரையாற்றினர்.

**மார்ச்–25 :** கொளத்தூர் தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் மாலை 6 மணிக்கு பரப்பரை நடைபெற்றது. பயணத்தை விளக்கி தோழர்கள் டைகர் பாலன், சூரியக்குமார், காவை சித்துசாமி, பெரியார் பெருந்தொண்டர் பட்டுக்கோட்டை சதாசிவம் ஆகியோர் உரையாற்றினர்.

பயணம் நடைபெற்ற ஐந்து நாள்களிலும், பறை முழக்கம், வீதி நாடகம், மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் ஜாதி ஒழிப்பு மற்றும் பகுத்தறிவு பாடல்களை பாடினர்.

"எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்" என்ற திராவிடர் விடுதலைக்கழகத்தின் முழக்கத்துடன் கருப்பு பனியன் அணிந்து தோழர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி: சி. கோவிந்தராஜ்**

**(பயணத் தொடர்ச்சி அடுத்த இதழில்)**

### 'சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம்' நடத்துகிறது

## சூலூரில் தாலி நீக்கம்; மாட்டுக்கறி விருந்து

சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம் சார்பில் சூலூரில் ஏப்.3ஆம் தேதி தாலி நீக்குதல் மற்றும் மாட்டுக் கறி உணவு விருந்து நடைபெறுகிறது. சூலூர் எஸ்.ஆர்.எஸ். திருமண மண்டபத்தில் (கலங்கல் பாதை) காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை நடக்கும் நிகழ்வில் சுயமரியாதை கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சிகளோடு நிகழ்ச்சி தொடங்குகிறது. தாலியில்லாமல் வாழும் இணையர்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்கள். தாலி வந்ததா? வரவழைக்கப்பட்டதா? என்ற கருத்தரங்கில் புலவர் செந்தலை கவுதமன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றுகிறார்கள். தாலி நீக்கும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

## பரப்புரைப் பயண நிறைவு கூட்டங்கள்

'எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்' என்ற முழக்கத்தை முன் வைத்து, திராவிடர் விடுதலைக் கழகம் சென்னை, ஈரோடு, சேலம், மயிலாடுதுறையிலிருந்து புறப்பட்டு, பரப்புரைப் பயணங்களை நடத்தியது. சென்றவிடமெல்லாம் மக்கள் ஆதரவை வழங்கி கருத்துகளைக் கேட்டனர். பயணக் குழுவின் நிறைவு நாளில் பொதுக் கூட்டங்கள் நடந்தன. அதன் விவரம்:

**சத்திய மங்கலம்:** பரப்புரைப் பயண நிறைவு நாள் பொதுக்கூட்டம் சத்திய மங்கலம் வடக்குப் பேட்டையில் 27.03.2015 மாலை நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு ஜி.கே.மூர்த்தி தலைமை தாங்கினார். முன்னிலை மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி, மாவட்ட செயலாளர் அர்சுணன், சத்தி அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி மற்றும் சுபாசு.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை யாற்றினார். முன்னதாக தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி, தலைமைக் குழு உறுப்பினர் ஈரோடு ரத்தினசாமி, மாநில அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் ப. சிவக்குமார் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் "திராவிடர் கலைக்குழு"வினரின் வீதி நாடகம் நடைபெற்றது. முடிவில் தாசரிபாளையம் முருகேசன் நன்றி கூறினார்.

**மயிலாடுதுறை:** பரப்புரைப் பயண நிறைவு நாள் பொதுக்கூட்டம் நாகை மாவட்டம் மயிலாடுதுறை சின்னகடை வீதியில் 26.03.2015 மாலை நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை யாற்றினார். முன்னதாக தலைமைக் கழகப் பேச்சாளர் முனைவர் ஜீவானந்தம், எழுத்தாளர் வே.மதிமாறன் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் துரை.தாமோதரனின் 'மந்திரமல்ல! தந்திரமே'! அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான பொது மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

**சித்தோடு:** ஈரோடு தெற்கு மாவட்ட பரப்புரைப் பயணத்தின் நிறைவு பொதுக் கூட்டம் 24.03.2015 அன்று மாலை 7 மணிக்கு சித்தோட்டில் மிக எழுச்சியோடு கழக ஆதரவாளர் இரா. முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் காவை இளவரசனின் 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சி நடந்தது. அதைத் தொடர்ந்து தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். தலைமைக் கழக தலைமைக் குழு உறுப்பினர் ஈரோடு இரத்தினசாமி மற்றும் வடக்கு மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியாக ஆசிரியர் சிவக்குமார் நன்றியுரை கூற நிகழ்ச்சி முடிவுற்றது. இந்நிகழ்வில் செல்வராஜ், கழக வெளியீட்டு புத்தகங்கள் ரூ.1200/-க்கு விற்பனை செய்தார். துண்டேந்தியதில் ரூ.600/- வசூலானது.

**தலையங்கம்**

# கருத்துரிமைக்கு ஆதரவாக ஒரு தீர்ப்பு!

சமூக வலைத் தளங்களில் ஆட்சியாளர்களுக்கு எதிராக கருத்துக்களை பதிவு செய்வதை முடக்கி சிறையில் தள்ளும் கொடூரமான கருத்துரிமையை பறிக்கும் தகவல் தொழில்நுட்ப 66(ஏ) சட்டத்தை உச்சநீதிமன்றம் இரத்து செய்து விட்டது. 2008 ஆம் ஆண்டு அன்றைய அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி கொண்டு வந்த சட்டம் இது. அப்போது எதிர்கட்சியாக இருந்த பா.ஜ.க. எதிர்த்தது. இப்போது ஆட்சிக்கு வந்துவிட்ட பா.ஜ.க. உச்சநீதிமன்றத்தில் இந்த சட்டத்துக்கு ஆதரவாகவே வாதாடியது. அதிகாரத்துக்கு வந்த பிறகு தங்களது ஊழல் முறைகேடுகள் அம்பலமாகிடக் கூடாது என்பதே ஆட்சியாளர்களின் நோக்கம்; அதற்காக எந்த அடக்குமுறை சட்டங்களையும் அவர்கள் கையில் எடுப்பார்கள்.

சிவசேனைத் தலைவர் பால்தாக்கரே மரணத்தையொட்டி மும்பையில் முழு அடைப்பு திணிக்கப்பட்டபோது அதை எதிர்த்து வலைதளத்தில் கருத்து தெரிவித்த கல்லூரி மாணவி ஷாகின் மீது இச்சட்டம் பாய்ந்தது. அவர் கைது செய்யப்பட்டார். அவரது கருத்துக்கு விருப்பம் தெரிவித்ததற்காக மற்றொரு மாணவி கைது செய்யப்பட்டார். இதேபோல் உ.பி. ஆளும் கட்சியான சமாஜ்வாதி கட்சியின் அமைச்சரான ஆசம்கான் என்பவரை விமர்சித்ததற்காக 12 ஆம் வகுப்பு மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்த கொடூர சட்டப் பிரிவுக்கு எதிராக 21 வயது சட்டக் கல்லூரி மாணவி ஸ்ரேயா சிங்கால் வழக்கு தொடர்ந்து இப்போது வெற்றி பெற்றிருக்கிறார். அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் அடிப்படை உரிமையான கருத்துரிமைக்கு எதிரானது இந்த சட்டம் என்று உச்சநீதிமன்றம் தெளிவாகக் கூறி, சட்டத்தையே இரத்து செய்து விட்டது. இந்தத் தீர்ப்பு இணையதளத்தில் பதிவிடுவோருக்கான உரிமை என்ற எல்லையையும் தாண்டி நாட்டில் தற்போது பரவிவரும் ‘பார்ப்பன-பாசிச’ சிந்தனைக்கும் எதிரானது என்றே கூற வேண்டும்.

இந்தத் தீர்ப்பு, கருத்துரிமை குறித்து விரிவாக விவாதித்துள்ளது. கருத்துகளை வெளிப்படுத்தும் முறைமைகளை மூன்று வகையாக பிரித்துக் காட்டியிருக்கிறது. ஒன்று ஒரு கருத்தை முன் வைத்து நிகழும் விவாதங்கள்; இரண்டாவது – இதுவே சரியான கருத்து என்று வலியுறுத்துவது; மற்றவர்களுக்கு எடுத்துரைப்பது; மூன்றாவது வகை – “தன்னுடைய கருத்து மட்டுமே சரியானது, அதை மற்றவர்களும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்; அதற்காக மற்றவர்களை தூண்டுவது” – இந்த மூன்றாவது வகையினர் அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையைக் கோர முடியாது என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கிறது. ஒரு பிரச்சினையை விவாதிப்பதற்கும் ஒரு கருத்தை உறுதியாக ஆதரிப்பதற்கும் அவை விரும்பக் கூடியதாகவோ அல்லது பெரும்பாலோர் ஏற்க வேண்டும் என்றோ அவசியம் இல்லை; பெரும்பாலோர் ஏற்கவியலாத கருத்தாக இருந்தாலும் அதை விவாதிக்கவும் வலியுறுத்தவுமான உரிமையே அடிப்படை உரிமைக்கான உயிர்நாடிஎன்று உச்சநீதிமன்றம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

பெண்கள் முன்னேற்றத்துக்கான தடை; ஜாதி ஒழிப்புக்கான கருத்துகள்; மதமாற்றம்; இவை குறித்து ஒரு பிரிவினர் கருத்து; வேறு ஒரு பிரிவினருக்கு ‘எரிச்சல்’ ஊட்டுவதாக இருக்கலாம். அதன் காரணமாகவே அந்தக் கருத்தை வெளியிடும் உரிமையைப் பறிக்க முடியாது என்று குறிப்பாக உச்சநீதிமன்றம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

பார்ப்பன மதவெறி சக்திகள் தங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் கருத்துகளை அனுமதிக்கக் கூடாது என்று கலவரங்களை நடத்துகிறார்கள். தொலைக்காட்சி நிலையங்களில் குண்டுகளை வைக்கிறார்கள்; மாட்டுக்கறி விருந்து, தாலி நீக்கும் நிகழ்ச்சிகளை அனுமதிக்கக் கூடாது என்று காவல்துறைக்கு மனு போடுகிறார்கள். பெரியார் இயக்கக் கூட்டங்களை அனுமதிக்கவே கூடாது என்கிறார்கள். காவல் துறையும் பல நேரங்களில் இந்த மதவெறி சக்திகளுக்கு ஆதரவாகவே செயல்படுகின்றன.

பெரியார் இயக்கம் எந்த ஒரு கருத்தையும் மக்கள் மீது திணிப்பது இல்லை. நாள்தோறும் மணிக்கணக்கில் மேடைகளின் வழியாக மக்களிடம் பேசி வந்த பெரியார், தனது உரையின் இறுதியில், “எனக்கு சரியென்று பட்டதை நான் கூறினேன்; உங்கள் பகுத்தறிவைக் கொண்டு சிந்தியுங்கள்; சரி என்று பட்டால் ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லை என்றால் தள்ளி விடுங்கள்” என்று கூறியே, தனது ஒவ்வொரு உரையையும் நிறைவு செய்வார். மக்களுக்கு முடிவெடுக்கும் கருத்துரிமையை பெரியார் இயக்கம் இப்படித்தான் வழங்கியது. மாறாக பார்ப்பனப் பாசிசம் மாற்றுக் கருத்துகளை முடக்குவதையே நோக்கமாகக் கொண்டது. அதற்காக எந்த எல்லைக்கும் போவார்கள்.

ஒன்றை உறுதியாகக் கூறுகிறோம் – சட்டங்களின் பாதுகாப்போடு மட்டுமே சமூக மாற்றத்துக்கான ஒரு இயக்கம் செயல்பட முடியாது என்பதை உணர்ந்துதான் பெரியார் இயக்கம் களத்தில் நிற்கிறது. தேவைப்பட்டால் சட்டங்களின் அடக்குமுறைகளை எதிர்கொண்டு அதற்கான விலையையும் தந்து வருகிறது. எனவே அச்சுறுத்தலால் இந்த இயக்கத்தின் பயணத்தை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. ஆனாலும், நீதிமன்றங்களின் இத்தகைய தீர்ப்புகளை மதவாத சக்திகளின் மிரட்டலுக்கு அடிபணியும் அரசு நிர்வாகமும் காவல்துறையும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

# தாலி - கட்டுவது தமிழர் பண்பாடா?

சர்வதேச மகளிர் தினத்தன்று “தாலி பெண்களை பெருமைப்படுத்துகிறதா? சிறுமைப்படுத்துகிறதா?” என்ற தலைப்பில் ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சி விவாதம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. இதற்கான முன்னோட்டம் வெளியான நிலையில், இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தை சேர்ந்தவர்கள் அந்த தொலைக்காட்சி நிலையத்திற்கு படையெடுத்தனர். வாசலில் நின்றிருந்த ஒளிப்பதிவாளரை அடித்து நொறுக்கியதோடு, விலை உயர்ந்த ஒளிப்பதிவு சாதனத்தையும் நாசம் செய்தனர். தாலி இந்துக்களின் அடையாளம் என்று கூறி இந்த விவாதத்தை நடத்தக் கூடாது என்று காலித்தனத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு வந்த பெண் செய்தியாளர் ஒருவரையும் கடுமையாக தாக்கியுள்ளனர். இதுதான் இவர்களின் அடையாளம்.

அந்த விவாதம் ஒளிபரப்பாவதற்கு முன்பே மதவெறி, சாதிவெறி தலைக்கேறி ருத்ரதாண்டவம் ஆடி முடித்துள்ளனர். கருத்துரிமைக்கு எதிராக இந்த வலதுசாரி பிற்போக்கு கும்பல் தொடர்ந்து கட்டாரி வீசி வருகிறது. அதன் தொடர்ச்சியே இது. அனைந்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் தனது அறிக்கையில் பொருத்தமாக குறிப்பிட்டுள்ளதுபோல தாலி குறித்து விவாதிக்கவே கூடாது என்பதுதான் இவர்களது நிலை. விவாதித்தால் அதன் புனிதம் கெட்டுவிடுமாம். ‘எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என்ற வள்ளுவ நெறியே முற்போக்கு தமிழ் மரபு. அதன்படி தாலி குறித்து கொஞ்சம் வாதிக்கலாம். தாக்குதல் நடத்திய மூடர்கள் நினைப்பதுபோல தாலி என்பது திருமணத்தின்போது மணமகன், மணமகள் கழுத்தில் கட்டுவது மட்டுமல்ல. தமிழ் இலக்கியங்களின் வழி சிந்தித்தால் தாலி என்பது ஒரு பொதுவான அணிகலனே ஆகும். இன்னும் சொல்லப் போனால் பெண்களைவிட ஆண்களோடு அதிகம் தொடர்புடையதுதான் தாலி.

பெற்றோர்கள் சிறுவர்களுக்கு ஐம்படைத் தாலி அணிவிக்கும் வழக்கம் இருந்துள்ளது. இதற்கான குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. சங்கு, சக்கரம், வாள், வில், தண்டு என ஐந்து விதமான படைக்கருவிகளை செய்து அதை ஒரு கயிற்றில் தொடுத்து ஐம்படைத் தாலி என்ற பெயரில் சிறுவர்களுக்கு அணிவிக்கும் பழக்கம் இருந்ததாக புறநானூறு 77 ஆம் பாட்டின் 7 ஆம் வரியிலும், அகநானூறு 54 ஆம் பாட்டின் 18 ஆம் வரியிலும், திணைமாலை நூற்றி ஐம்பதில் 66 ஆம் பாட்டில் 3 ஆவது வரியிலும், மணிமேகலையின் மூன்றாம் காதையில் 138 ஆம் வரியிலும், கலிங்கத்துப் பரணியில் 244 ஆவது பாட்டிலும் கூறப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் இந்த ஐம்படைத் தாலி அகற்றப்பட்டது. புறநானூறு 77 ஆவது பாட்டில் போர்க்களத்திற்கு வந்தவனைப் பார்த்து இவன் இன்னும் ஐம்படைத் தாலியை அகற்றாத சிறுவனாக இருக்கிறானே என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இன்றைக்கு இந்தப் பழக்கம் வழக்கொழிந்துவிட்டது.

தாலி என்கிற சொல்லே பனை ஓலை என்கிற வார்த்தையிலிருந்துதான் வந்திருக்கிறது. தாலமாகிய பனை ஓலையினால் செய்யப்பட்டதே தாலி. இன்னார் மகனுக்கு இன்னார் மகளை இன்னார் சம்மதத்துடன் இன்னார் முன்னிலையில் இந்த நாளில் இந்த நேரத்தில் கல்யாணம் செய்து கொள்வதாக பனை ஓலையில் எழுதி, அதை மணமகளின் கழுத்தில் மணமகன் கட்டியதாக குறிப்புகள் உள்ளன. இப்போதும்கூட முகூர்த்த ஓலை எழுதுவது என்பது சில பகுதிகளில் உள்ளது. ஆனால், இந்த ஒப்பந்தம் இப்போது தாளில்தான் எழுதப்படுகிறது.

பழம் பெருமையை பாதுகாப்பதாக கூறிக் கொள்பவர்கள் இப்போது பனை ஓலையையா கட்டிக் கொள்கிறார்கள்? பல திருமணங்களில் பொன்னில் தாலி செய்யப்படுவதில்லை. ஒரு விரலி மஞ்சளை கயிற்றில் கட்டுகிற பழக்கமும் சிலரிடம் உள்ளது. பழந்தமிழர் மரபில் தாலி கட்டும் பழக்கம் உண்டா என்று 1954 ஆம் ஆண்டில் ஒரு பெரிய விவாதமே நடந்துள்ளது. இதைத் துவக்கி வைத்தவர் கவிஞர் கண்ணதாசன். இந்த விவாதத்தில் ம.பொ.சி. மட்டும்தான் பழங்காலத்திலேயே தமிழர்களிடம் தாலி கட்டும் பழக்கம் இருந்தது என்று கூறினார். வரலாற்று அறிஞர் அப்பாதுரையார், கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் தாலி குறித்த பேச்சே இல்லை என்றும், பெரும் புலவர் மா. இராஜ மாணிக்கனார், பழந்தமிழர்களிடம் தாலி என்ற வழக்கு இல்லவே இல்லை என்றும் உறுதிபடக் கூறினர். தமிழ்நாட்டில் கிடைத்த தொல் பொருள்களில் தாலி இல்லவே இல்லை.

சங்க இலக்கியப் பாடல்களில் பெண்கள் கழுத்தில் கட்டும் தாலி குறித்த குறிப்பு எதுவும் இல்லை. சிலப்பதிகாரத்தில்தான் இதற்கான குறிப்பு வருகிறது. சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்துப் பாடலில் மங்கல அணி என்கிற வார்த்தை வருகிறது. தாலி ஒருபுறமிருக்கட்டும். திருமண முறை காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே வந்திருக்கிறது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் ஒரு காலத்தில் இரவில் தான் திருமணம் செய்து வந்தனர். இன்னமும்கூட இந்த வழக்கம் சில பகுதிகளில் உள்ளது. பழங்குடி மக்களாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிற திராவிட தொல்குடி மக்களிடையே தாலி கட்டும் பழக்கம் இப்போதும்கூட இல்லை. ஆனால், ஆர்.எஸ்.எஸ். கணக்குப்படி இவர்களும் இந்துக்கள்தான்.

நீலகிரி மாவட்டத்தில் வாழும் தொதுவர், கோட்டர் இன மக்களிடையே தாலி கட்டும் பழக்கம் இல்லை. தெலுங்கு பேசும் தொல்குடி மக்களான ஏட்டர், ஏனாதிகள், ஏறக்கொல்லர், மலையாளம் பேசும் தொல்குடி மக்களான செருமார், முக்குருவர், பலியர், அருணடர் போன்றோரிடத்தும், கன்னடம் பேசும் காப்பிலியர், கொரகர், காடுகுரும்பர், மொகயர் போன்ற மக்களிடமும் தாலி கட்டும் வழக்கம் இல்லை.

தமிழ் மக்கள் ஒரு காலத்தில் திருமணம்கூட செய்து கொள்ளாமல் குடும்பமாக வாழ்ந்துள்ளனர். “பொய்யும், வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப” என்பது தொல்காப்பிய சூத்திரம். இதன் பொருள் என்னவென்றால், ஆணும், பெண்ணும் களவு அறத்தின்படி குடும்பமாக வாழ்ந்து வந்தனர். ஆடவர்கள் பெண்களை கைவிட்டு அந்தத் திருமணத்திற்கு சான்று ஏதுமில்லை என்று கூறிய நிலையில்தான் திருமணம் என்ற ஒரு ஏற்பாட்டை செய்தனர் என்பது இதன் எளிய பொருள். கணவன் இறந்துவிட்டால் இளம் மனைவி வேறொருவரை திருமணம் செய்து கொள்வது இயல்பாகவே இருந்து வந்தது. வருணாச்சிரம ஆதிக்கம் கெட்டிப்பட்ட பிறகுதான் விதவைத் திருமணம் என்பது தடை செய்யப்பட்டு, இயல்பாக மறு திருமணம் செய்து கொள்பவர்களை அறுத்துக் கட்டுபவர்கள் என்று இழிவுபடுத்தும்போக்கு தோன்றியது.

**நன்றி: ‘தீக்கதிர்’ 11.3.2015 இதழில் மதுக்கூர் இராமலிங்கம் எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.**

# தி.க. தலைவரின் பேட்டியும் நேர்மையற்ற 'பாண்டேக்களும்'!

திராவிடர் கழகத் தலைவர் - தமிழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான கி.வீரமணி அவர்களின் நேர்முக பேட்டியை (மார்ச் 21, இரவு 10 மணி) 'தந்தி' தொலைக்காட்சியில் பார்த்தவர்கள் பலரும், அத்தொலைக்காட்சி பேட்டியாளரின் நேர்மை குறித்து கேள்விகளை எழுப்பவே செய்வார்கள். பாண்டே என்ற பெயரில் 'தந்தி' தொலைக்காட்சியில் விவாதங்களையும் நேர்முகப் பேட்டிகளையும் நடத்தி வரும் அவரது முதிர்ச்சியற்ற அரைவேக்காட்டுத்தனமான கேள்விகள், விவரமறிந்தவர்களை முகம் சுளிக்கவே வைக்கிறது.

'பெரியார் ஒரு சகாப்தம்; ஒரு திருப்புமுனை' என்று இரண்டே சொற்றொடர்களில் அறிஞர் அண்ணா படம் பிடித்தார். பெரியார் கொள்கைகளோடு முரண்பட்ட தலைவர்கள்கூட பெரியார் ஏற்றுக் கொண்ட இலட்சியத்தில் அவரது உண்மையான பங்களிப்பில் நேர்மையில் சந்தேகம் எழுப்பியது கிடையாது. பார்ப்பனர்கள் தங்களின் 'பிதாமகராக' ஏற்றுக் கொண்ட மறைந்த இராஜகோபலாச்சாரியாரையே இதற்கு உதாரணமாகக் கூற முடியும். பார்ப்பனரல்லாத வெகு மக்களின் மானத்துக்கும் உரிமைக்கும் களமாடியவர் பெரியார். மாறுபட்ட பல்வேறு அரசியல் சூழல்களில் தனது சமுதாய இலக்கை முன்னெடுப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு சூழலுக்கேற்ற நிலைப்பாடுகளை மேற்கொண்டு வந்தவர் பெரியார். பெரியாரை விமர்சிக்கும் அறிவாளர்கள், சமூக ஆய்வாளர்கள், சிந்தனை முதிர்ச்சியாளர்கள், இயங்கியல் பார்வையோடு பெரியாரை மதிப்பீடு செய்கிறார்கள். ஆனால் சமூகம் பற்றியோ அரசியல் குறித்தோ எந்த ஆழமான பார்வையும் இல்லாமல் 'ஏட்டிக்குப் போட்டி' பேசிக் கொண்டு பார்வையாளர்களுக்கு 'வித்தை காட்டும்' குடுகுடுப்பைக்காரராக பாண்டே என்ற பார்ப்பனர் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணியிடம் 'விதண்டா வாதம்' செய்து, தன்னைத் தீவிர 'ஆர்.எஸ்.எஸ்.' பக்தராக அடையாளம் காட்டிக் கொள்ள பாண்டே துடிப்பது பற்றி நமக்கு கவலை இல்லை. ஆனால், பேட்டியை ஒளிபரப்புவதில் நேர்மை இருக்க வேண்டும் அல்லவா?

வீரமணி அவர்களின் பேட்டி பதிவு செய்யப்பட்டு, பிறகு 'தணிக்கை' செய்து ஒளிபரப்பப்பட்டிருக்கிறது. 'நேர் அலை' நிகழ்ச்சி அல்ல. பேட்டியில் வீரமணி அவர்கள் தெரிவித்த கருத்துகளை உண்மைக்கு மாறானவையாக சித்தரிக்க முயற்சித்திருக்கிறார். அதற்கு ஒரு நயவஞ்சக நாடகத்தை அரங்கேற்றினார். இடையிடையே 'பெரியார்-அம்பேத்கர்' கருத்துகளை வெட்டி சிதைத்து, எழுத்துகளாக பின்னணி குரல்களுடன் 'கிளிப்பிங்' ஆக போட்டார். உண்மையில் பேட்டி அளித்த வீரமணி அவர்களுக்கு தனது கருத்தை மறுக்கும் எழுத்து வடிவங்கள் 'கிளிப்பிங்குகளாக' ஒளிபரப்பப்படுகிறது என்பதே தெரியாது. பேட்டியாளருக்கு நேர்மை இருக்குமானால், இதே பெரியார்-அம்பேத்கர் கருத்துகளை பேட்டியின் போதே எடுத்துக்காட்டி, பேட்டியாளரின் கருத்தையும் கேட்டிருக்க வேண்டும். அதுதான் ஊடக அறம்; நேர்மை. இப்படி எழுத்து வடிவங்களில் போடப்பட்டவை கூட திரிபும்-புரட்டலுமாகவே இருந்தது. உதாரணத்துக்கு இரண்டை சுட்டிக் காட்டுவோம்.

'பார்ப்பனர்களையும் பாம்பையும் கண்டால் முதலில் பார்ப்பானை அடி' என்று பெரியார் கூறியதாக ஒரு தவறான தகவல் உலா வந்து கொண்டிருக்கிறது. உண்மையில் பெரியார் அப்படி எங்கேயும் சொல்லவில்லை; அது ஒரு வடநாட்டு பழமொழி என்று வீரமணி விளக்கம் அளித்தார். அப்போது, "பார்ப்பனர்களை தமிழ்நாட்டிலிருந்து விரட்டி அடிக்க வேண்டும்" என்று பெரியார் பேசியதாக ஒரு 'கிளிப்பிங்' போடப்பட்டது. பார்ப்பானையும் பாம்பையும் ஒப்பிட்டு பெரியார் எந்த கருத்தையும் கூறவில்லை என்ற வீரமணி அவர்களின் கருத்துக்கு இது எப்படி மறுப்பாக முடியும்! சரி; பார்ப்பனர்களை தமிழ்நாட்டிலிருந்து விரட்டி அடிக்க வேண்டும் என்று எந்தப் போராட்டத்தையாவது பெரியார் நடத்தியிருக்கிறாரா? அப்படித் தனது தொண்டர்களைத் தூண்டி விட்டதாக எந்த ஒரு சம்பவத்தையாவது எடுத்துக் கூற முடியுமா? காந்தியை கோட்சே என்ற பார்ப்பனர் சுட்டபோதுகூட வடமாநிலங்களில் பார்ப்பனர்களுக்கு எதிராக வன்முறைகள் வெடித்த காலத்தில் பெரியார் வானொலியில் பேசி, அமைதி காக்கச் சொல்லி, எந்த ஒரு கலவரமும் வந்துவிடக் கூடாது என்று பார்ப்பனர்களை தமிழகத்தில் பாதுகாத்த தலைவர். இந்த வரலாறு பாண்டேக்களுக்கு தெரியுமா?

அம்பேத்கர் - மாட்டுக்கறி சாப்பிட வேண்டாம் என்று தலித் மக்களிடம் கூறியதாகவும், தி.க. - அம்பேத்கர் பிறந்த நாளில் ஏன் மாட்டுக்கறி விருந்து நடத்துகிறது? என்றும் ஒரு கேள்வி மூலம் தனது அறியாமையை வெளிப்படுத்தினார் பாண்டே. 'அம்பேத்கர், எப்போது அப்படி கூறினார்?' என்று வீரமணி கேட்டார். உடனே, 'கிளிப்பிங்' போடுகிறார் பாண்டே. அதில், "செத்த மாடுகளை தூக்கச் சொன்னால் தூக்காதீர்கள்; செத்த விலங்குகளை சாப்பிடாதீர்கள்" என்று தலித் மக்களுக்கு அம்பேத்கர் கூறுவதாக எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. செத்த விலங்குகளைக்கூட சாப்பிடும் நிலையில் அன்றைக்கு சமூகம் இருந்திருக்கிறது. அந்த நிலையில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு அம்பேத்கர் விடுத்த வேண்டுகோள் அது. 'செத்த விலங்குகளை சாப்பிடாதீர்' என்று அம்பேத்கர் பொதுவாக கூறுவதை, 'மாட்டுக்கறியே சாப்பிட வேண்டாம்' என்று கூறியதாக பாண்டே திரிக்கிறார்.

மூடநம்பிக்கைகளை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கும் பெரியார் இயக்கத்தின் மூத்த தலைவர் வீரமணி, ஏதோ, 'எண் ஜாதகத்தில்' நம்பிக்கையுள்ளவர்போல, அவரது 'கார் எண்' குறித்து எல்லாம் பாண்டே கேள்வி எழுப்புகிறார். இது, அவரது "சிறுபிள்ளைத்தனத்தையே" அம்பலப்படுத்துகிறது. "இராமனை எதிர்த்த பெரியார், ஏன் இராமசாமி என்று பெயர் வைத்துக் கொண்டார்; சாமியே இல்லை என்று கூறும் நீங்கள், அப்பா, அம்மா இல்லை என்று கூறுவீர்களா? இந்தியாவை எதிர்க்கும் நீங்கள் ஏன் இந்தியாவில் வாழ வேண்டும்?" - இப்படிப்பட்ட 'மடத்தனமான' கேள்விகளைக்கூட பாண்டே நேரமிருந்தால் கேட்டிருப்பார். அவரது கேள்வித்தரம் அவ்வளவுதான்! ஒரு முறை தொலைக்காட்சி விவாதத்தில் நடந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது.

"சம்பூகன் என்ற சூத்திரன், கடவுளை நேரிடையாக தவம் செய்தான் என்பதற்காக, பார்ப்பனர்கள் வேண்டுகோளை ஏற்று சம்பூகன் தலையை இராமன் வெட்டினான். இதுதான் இவர்களின் இராமராஜ்யம்?" என்று கூறியபோது, ஒரு இந்து முன்னணி இளைஞர், இப்படி ஒரு கேள்வியை கேட்டார்: "இராமாயணத்தையே ஏற்றுக் கொள்ளாத நீங்கள், ஏன் இராமாயணத்திலிருந்து ஏன் உதாரணம் காட்டுகிறீர்கள்?" இப்படிப்பட்ட ஆட்கள்கூட தொலைக்காட்சி விவாதத்துக்கு வந்து விடுகிறார்கள்; என்ன செய்வது?

இந்து முன்னணி இளைஞரின் இந்த அபத்தங்களையும் விஞ்சி நிற்கிறார் பாண்டே.

பாமர மக்களுக்காக நாட்டு - உலக நடப்புகளை எளிமையான செய்திகளாக்கி, எழுதப் படிக்கத் திணறியவர்களையும் 'தினத்தந்தி' நாளேட்டுக்கு வாசகர்களாக்கிய பெருமை ஆதித்தனாருக்கு உண்டு. அவரது நிறுவனத்திலிருந்து வரும் ஒரு தொலைக்காட்சி - இத்தகைய நேர்மைக் குலைவையும், ஊடகச் சீரழிவுகளையும் அனுமதிக்கலாமா! வண்மையாகக் கண்டிக்கிறோம்.

– **இரா**

# பெண்ணுரிமையை மறுப்பதில் கைகோர்க்கும் மதங்கள்

பார்ப்பன சனாதன மத சக்திகள், இஸ்லாமியர்களை எதிரிகளாகக் கட்டமைத்து, அவர்களை தேச விரோதிகளைப்போல சித்தரிக்கிறார்கள். தங்களின் மதவாத அரசியலைக் கட்டமைக்க ஏதேனும் ஒரு எதிரியை அடையாளப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இவைகள் அரங்கேற்றப் படுகின்றன. ஆனால், பெண்கள் பிரச்சினையில் இவர்களின் குரல் பல நேரங்களில் ஒன்றாகவே ஒலிப்பதைக் கேட்க முடிகிறது. சென்னையில் காதலர் தின எதிர்ப்பில் இந்து மகாசபைக்காரர்களோடு சில இஸ்லாமிய அமைப்புகளும் இணைந்து கொண்டன. அவர்கள் காதலர் நாளுக்கு எதிராக ஒட்டிய சுவரொட்டிகளைக் காண முடிந்தது. இஸ்லாமிய மக்கள் கல்வி, வேலை, பொருளாதார வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாக, அவர்கள் வாழ்நிலை மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதற்கு நியாயமான குரல் கொடுக்க வேண்டிய அதே நேரத்தில் மதம் சார்ந்த பல பிற்போக்கு கொள்கைகளை நாம் சுட்டிக்காட்டி எதிர்க்க வேண்டியதும் அவசியமாகிறது. இது தொடர்பாக ஒரு செய்தியை சுட்டிக்காட்டியாக வேண்டும்.

பம்பாயிலிருந்து வெளிவரும் 'அவதான்மா' என்ற உருது நாளிதழின் ஆசிரியர் சிரின்தால்வி. இந்தியாவில் ஒரு நாளிதழின் ஆசிரியராக இருக்கும் ஒரே முஸ்லிம் பெண்ணும் இவர்தான். இவர், இப்போது ஆசிரியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, மத உணர்வை புண்படுத்தியதாக அடுக்கடுக்கான வழக்குகளுக்கு உள்ளாகி, உயிருக்கு அச்சுறுத்துதல் காரணமாக தலைமறைவாக இருக்கிறார். அப்படி அவர் செய்த 'குற்றம்' என்ன? பாரீஸ் நகரத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையான 'சார்லி ஹெப்டோ', அல்லாவைப் பற்றிய கேலிச் சித்திரம் வெளியிட்டதற்காக அந்த அலுவலகத்தில் மதத் தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தி, பலரைக் கொலை செய்தது உலகம் முழுதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. அது குறித்து 'அவதான்மா' நாளேட்டில் ஒரு கட்டுரை எழுதிய சிரின்தால்வி, பாரீஸ் நாளேடு வெளியிட்ட கார்ட்டூன் படத்தை வெளியிட்டு விளக்கமளித்திருந் தார். இத்தனைக்கும், அந்த கார்ட்டூன் வெளி யிட்டதை விமர்சித்து எழுதப்பட்டதே அக்கட்டுரை. கருத்து விளக்கத்திற்காக அந்த 'கார்ட்டூனை' வெளியிட்டாலும், அது எதிர்விளைவுகளை உண்டாக்கி விடக் கூடும் என்று பின்னர் அவரே உணர்ந்த காரணத்தால், அடுத்த நாள் இதழிலேயே முதல் பக்கத்தில் அதற்கு வாசகர்களிடம் மன்னிப்பும் கோரி இருந்தார். இவ்வளவுக்குப் பிறகு, பம்பாய் மதத் தீவிரவாதக் குழுவினர் சிலர் அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தனர். மத உணர்வுகளுக்கு எதிராக உள் நோக்கத்தோடு செயல்பட்டதாக இந்திய தண்டனை சட்டம் '295ஏ' பிரிவின் கீழ் மகாராஷ்டிராவின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து அவர் மீது காவல் நிலையங்களில் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதே கார்ட்டூனை மும்பையில் வேறு பல ஏடுகள் வெளியிட்டாலும், இவர் ஒரு பெண் என்பதால் இவரை மட்டுமே குறி வைத்து மிரட்டப்படுவதாகவும், இஸ்லாமிய மதத்துக்குள்ளே தாராளமான சிந்தனையாளர்களிடமிருந்தோ 'மத சகிப்புத் தன்மை' வேண்டும் என்று பேசுவோரிடமிருந்தோ ஒருவர்கூட இந்தப் பெண்ணுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வரவில்லை. அவர் தனித்து விடப்பட்டார். ஜன.17 ஆம் தேதி கார்ட்டூன் வெளியிடப்பட்டது; ஜனவரி 18ஆம் தேதி இவர் மன்னிப்பும் கேட்டு விட்டார்; ஜனவரி 19ஆம் தேதி நாளிதழ் வெளியிடுவதே நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த நிலையில் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறி, பம்பாய் உயர்நீதிமன்றத்தை அணுகியுள்ளார் தல்வி. தனது வீட்டைப் பூட்டிவிட்டு, மாறுவேடங்களில் தலைமறைவாக பதுங்கி வாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக வழக்கு மனுவில் குறிப்பிட்டுள்ளார். தன் மீது பதியப்பட்ட அத்தனை வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரியும், மாநில அரசு தன்மீது கடும் நடவடிக்கை எடுக்காமல் தடுக்க வேண்டும் என்றும் மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால், மகாராஷ்டிரா அரசின் வழக்கறிஞர் சந்திப் ஷிண்டே, இந்த மனுவை விசாரணைக்கு ஏற்கக் கூடாது என்று வாதிட்டுள்ளார். மகாராஷ்டிராவில் பா.ஜ.க., சிவசேனா ஆட்சி நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. சங்பரிவாரங்கள் மதசகிப்புத் தன்மையற்றவர்கள் குற்றச்சாட்டு, இவர்களுக்கும் பொருந்தாதா என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டியிருக்கிறது. இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு ஆதரவாக மகாராஷ்டிராவில் பா.ஜ.க., சிவசேனா ஆட்சியும் செயல்படுகிறது.

DATE OF PUBLICATION 02.04.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# வழிபாட்டு உரிமையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்!



சேலம் திருமலைகிரி சிவன் மற்றும் பெருமாள் கோயிலில் தலித் உள்ளிட்ட அனைத்து ஜாதி மக்களுக்கும் வழிபாட்டு உரிமையை உறுதிப்படுத்திட, 144 தடை உத்தரவை திரும்ப பெற்றிட தமிழக அரசை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகில், 17.03.2015 செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது. விடுதலை சிறுத்தைகள் கட்சி நாவரசன் தலைமை தாங்கினார்.

தோழர்கள் பி.தங்கவேலு (மார்க்சிஸ்ட்), ஏ.மோகன் (சி.பி.அய்), கோ.மோகனசுந்தரம் (சி.பி.அய்-எம்.எல்.), டேவிட், தி.வி.க., பாவேந்தன் வி.சி.க. ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக தலைவர் கொளத்தூர் மணி, தங்கவேல், (சட்டமன்ற உறுப்பினர்-மார்க்சிஸ்ட்), மூ.வீரபாண்டியன், (சி.பி.அய்), ஏ.எஸ்.குமார், (சி.பி.அய்-எம்.எல்.) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், மேற்கு மாவட்ட தலைவர் கொளத்தூர் சூரியகுமார், மேற்கு மாவட்ட செயலாளர் மேட்டூர் கோவிந்தராஜ், சேலம் கிழக்கு மாவட்ட துணைத்தலைவர் ஏற்காடு பெருமாள், மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆத்தூர் மகேந்திரன், இளம்பிள்ளை நகர செயலாளர் தங்கராஜ், கழக தலைமைக்குழு உறுப்பினர் மேட்டூர் சக்திவேல் உள்ளிட்ட கழகத்தின் 100க்கும் மேற்பட்ட தோழர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, திராவிடர் விடுதலைக் கழகம் ஆகிய அமைப்புகளின் சார்பில் 500க்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# வரலாற்று ஆய்வு மய்யத்தில் ‘ஆரிய’ ஆதரவுக் குரல்

இந்திய வரலாற்று ஆய்வு மய்யத்தின் சார்பில் புதுடில்லியில் மார்ச் 27ஆம் தேதி ‘நிறுவனர் நாள்’ கூட்டம் நடந்தது. அமெரிக்காவில் ‘வேதம்’ கற்றுத் தரும் டேவிட் ஃபிராலெ என்பவர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றுப் பேசினார். கூட்டத்தில் ‘சங்பரிவார்’ அமைப்பினர் கூடியிருந்தனர். ஃபிராலெ தனது உரையில், “ஆரியர் படை எடுத்து வந்தார்கள்” என்ற கருத்தே தவறானது என்று கூறினார். புராதன இந்தியப் பெருமைகள் இந்தியாவில் பாடத் திட்டத்தில் சேர்க்கப்படாததையும் அவர் குறை கூறினார். “பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் மார்க்சிய வரலாற்று ஆசிரியர்களும்தான் ‘ஆரிய படை எடுப்பு’ என்ற தவறான கோட்பாட்டை கண்டுபிடித்தார்கள். இந்தியாவின் கல்வியாளர்களே பழம் பெருமைகளை மறந்துவிட்டு, ‘ஆரிய படை எடுப்பு’ என்றெல்லாம் நடக்காததைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்” என்று பேசிக் கொண்டிருந்தார். அப்போது வரலாற்று ஆய்வு மய்யத்தின் உறுப்பினரும் செயலாளருமான கோபிநாத் இரவீந்திரன், இந்த பார்ப்பனிய அமெரிக்கரின் உரையிலிருந்து சில கேள்விகளை எழுப்பினார். குறிப்பாக ஆரிய படையெடுப்பு குறித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். பல்வேறு இன கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் வாழும் நாடு இந்தியா. இதன் பன்முகத் தன்மைக்கு மாறாக ஒற்றைக் கலாச்சாரத்தைத் திணிக்கக் கூடாது என்று கூறியபோது, ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கூச்சல் போட்டு பேச்சை முடிக்கக் கோரினார். அப்போது, பார்வையாளர் வரிசையில் இருந்த மய்யத்தின் தலைவரும், ஆர்.எஸ்.எஸ்.காரருமான ஒய். சுதர்சன் ராவ் மேடைக்குச் சென்று, “ஆரியப் படை எடுப்பு என்பது பொய்; அதற்கு தொல்பொருள் சான்று ஏதும் கிடையாது” என்ற கூறி செயலாளர் ரவீந்திரன் கருத்தை மேலும் வெளிப்படுத்த விடாமல் தடுத்தார். இந்திய வரலாற்று ஆராய்ச்சி மய்யம், ‘ஆரிய மய்யமாகவே’ செயல்படத் தொடங்கியிருப்பதோடு, மாற்றுக் கருத்துகளை அனுமதிக்கவே மறுக்கிறது. ‘இந்து’ நாளேடு (மார்ச் 28) இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

# நாமக்கல்லில் சட்ட விரோத கோயில் இடிப்பு!



அரசு மருத்துவமனை வளாகத்தில் சட்ட விரோதமாக கட்டப்பட்ட கோயில் கழக தோழர்களின் முயற்சியால் இடித்து அப்புறப்படுத்தப் பட்டது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவமனை வளாகத்தில் புதியதாக ஒரு வினாயகர் கோயில் கட்டப்பட்டு வந்தது. இந்த தகவலை அறிந்த கழகத் தோழர்கள், மாவட்ட செயலாளர் வைரவேல் தலைமையில் அந்த கோயிலை இடித்து ஆக்கிரமிப்புகளை அகற்ற வலியுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்தனர்.

**கழக தோழர்கள் முயற்சிக்கு வெற்றி!**

மேலும் 26.03.2015 அன்று அரசு மருத்துவமனை நிலத்தை ஆக்கிரமித்த மருத்துவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். அந்த புகாரைத் தொடர்ந்து மருத்துவமனை நிர்வாகமே இரவோடு இரவாக அந்த கோயிலை இடித்து கட்டுமான பொருட்களையும் அப்புறப்படுத்தினர்.

இந்த முயற்சிக்கு பள்ளிபாளையம், திருச்செங்கோடு பகுதி கழகத் தோழர்கள் பெரிதும் உழைத்தனர்.

# விருத்தாசலத்தில் கழகப் பொதுக் கூட்டம்




15.03.2015 அன்று மாலை 3 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொடியேற்றுவிழா நடைபெற்றது. கழக கொடியை கழக தலைவர் கொளத்தூர் மணி ஏற்றிவைத்தார். இந் நிகழ்ச்சியில் கழக தலைமைக்குழு உறுப்பினர்கள் பால் பிரபாகரன், ஈரோடு ரத்தினசாமி, திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு, தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் பாரி.சிவக்குமார் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

கழக சார்பில் “தமிழ் இன உரிமை மீட்பு பொதுக்கூட்டம்” மாலை 6 மணிக்கு, விருத்தாசலம், வானொலித் திடலில் நடைபெற்றது. கழக தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். முன்னதாக மாலை 5 மணியளவில் துரை. தாமோதரன் ““மந்திரமா, தந்திரமா?” நிகழ்ச்சி நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்நாடு மாணவர் கழகம் ஆகிய அமைப்புகள் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 4th April 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஏப்ரல் 9, 2015 | புரட்சி 14 | முழக்கம் 13 | விலை: ரூ.3.00


## தாலியைப் பற்றி அம்பேத்கர்



சென்னைஅரசாங்கத்தின் ஆணைப்படி வெளியிடப்பட்ட மலபார் அஞ்சேங்கோ கெஜட்டின் பதிப்பாசிரியர் சி.ஏ. கின்னஸ், அய்.சி.எஸ். பின்வருமாறு சொல்கிறார்:

மருமக்கள் தாயம் என்ற முறையையும், மக்கள் தாயம் என்ற முறையையும் கடைப்பிடித்து வந்த எல்லாப் பிரிவு மக்களிடையிலும் வேறொரு திருமணச் சடங்கு முறை காணப்பட்டது. அந்தத் திருமண முறை, “தாலி கட்டுத் திருமணம்” என்று சொல்லப்பட்டது. மலையாளிகளின் திருமணப் பழக்கங்களில், இந்தத் தாலி கட்டுத் திருமணம் என்பது தனித்தன்மை வாய்ந்தது; புதுமையானது; வேறுபட்ட தன்மையுடையது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஒரு பெண் பூப்படைவதற்கு முன் அவள் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டுவதுதான் இந்தப் பழக்கத்தின் அடிப்படையாகும். அந்தப் பெண்ணின் ஜாதி அல்லது அவளைவிட உயர் ஜாதியைச் சேர்ந்த ஒரு மனிதனால் இந்தத் தாலி கட்டப்படுகிறது. அதற்குப் பிறகுதான் அந்தப் பெண் ‘சம்பந்தம்’ என்னும் மண ஒப்பந்தம் செய்வதற்குரிய உரிமையைப் பெறுகிறாள். தாலி கட்டுகிறவன் அல்லது மணவாளனுக்கு அந்தப் பெண்ணுடன் இணையும் உரிமையை வழங்குவதற்காகத்தான் ‘தாலி கட்டும் திருமணம்’ என்னும் சடங்கு நடத்தப்படுகிறது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. சத்திரியர்கள், அதற்கும் மேலாகப் பூதேவர்கள் என்று சொல்லப்பட்ட “பிராமணர்கள்” ஆகியோர் கீழ் ஜாதிப் பெண்களை முதலில் அனுபவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதுதான் இந்தச் சடங்கு முறையின் தோற்றுவாயாக இருக்கக்கூடும் என்று சிலர் கருதுகிறார்கள்.

**(டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் எழுதிய ‘காங்கிரசும் காந்தியும் தீண்டத்தகாதவர்களுக்குச் செய்ததென்ன?’ என்ற நூலின் பக்.205-206 (தொகுதி, பக்.101))**

**ஏப்ரல் 14, புரட்சியாளர் பிறந்த நாள்!**

## சென்னை தோழர்களின் ஜாதி எதிர்ப்புப் பரப்புரைப் பயண எழுச்சி

# 6 மாவட்டங்கள்; 10 நாள்கள்; 40 கூட்டங்கள்

“பறிபோகிறது எங்கள் நிலம்; கொள்ளைப் போகிறது கனிம வளம்; ஒழிகிறது வேலை வாய்ப்பு ஓங்கி வளருது ஜாதி வெறி; எனவே எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்” என்ற பரப்புரைப் பயணம், சென்னை மண்டல திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் திருவள்ளூர், சென்னை, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் எழுச்சியுடன் நடைபெற்றது. இது சென்னை மண்டலம் நடத்தும் இரண்டாம் கட்டப் பரப்புரையாகும். பயணத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மார்ச் 20ஆம் தேதி சென்னை பெரம்பூர் பொதுக் கூட்டத்தில் தொடங்கி வைத்தார். பயணம் குறித்த செய்தி தொகுப்பு:

**பொன்னேரி :** 21.3.2015 காலை 10 மணியளவில் பொன்னேரி பெரியார் சிலை அருகிலும், பிற்பகல் 12 மணியளவில் மீஞ்சூர் மார்க்கெட் அருகிலும், மாலை 4 மணியளவில் மணலி அண்ணா சிலை அருகிலும், மாலை 5.30 மணியளவில் திருவொற்றியூர் பெரியார் சிலை அருகிலும் பரப்புரை நடைபெற்றது. பொன்னேரியில் திராவிடர் கழகத்தைச் சார்ந்த பன்னீர்செல்வம், வெள்ளைச்சாமி, ரகுபதி ஆகியோர் பங்கேற்று தோழர்களுக்கு தேநீர் வழங்கினர். மதிய உணவு மற்றும் இரவு உணவுக்கு துரை, ஏசுகுமார் ஆகியோர் ஏற்பாடு செய்தனர். திருவொற்றியூரில் புரட்சிகர தொழிலாளர் முன்னணியைச் சார்ந்த தாமரை பங்கேற்று உரை நிகழ்த்தினார். அதே அமைப்பைச் சார்ந்த மா.சேகர் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

**திருவான்மியூர்:** 22.3.2015 அன்று காலையில் திருவான்மியூர் பேருந்து நிலையம் அருகில் தொடங்கிய பரப்புரைப் பயணம், பிற்பகல் 12 மணியளவில் கேளம்பாக்கம் கடைவீதி அருகில் நடைபெற்றது. மதிய உணவைத் தொடர்ந்து மாலை 3.30 மணியளவில் திருப்போரூர் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 6 மணியளவில் மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலகம் அருகிலும் நடைபெற்றது. காலை உணவு குமரன் ஏற்பாடு செய்தார். இரவு உணவு ம.தி.மு.க. தோழர் சங்கர் ஏற்பாடு செய்தார். மதிய உணவு, மறுநாள் காலை உணவுக்கு இராயப் பேட்டை தோழர் சபரி ஏற்பாடு செய்தார். மாமல்ல புரத்தில் வழக்கறிஞர்கள் துரை அருண், திருமூர்த்தி பங்கேற்று உரை நிகழ்த்தினர். கு. அன்பு தனசேகர், மோகன், பிரகாசு, வேழவேந்தன் ஆகியோர் பயணக் குழுவினரோடு நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இரவு தோழர்கள் தங்குவதற்கு சபரி ஏற்பாடு செய்தார்.

**அனுமந்தபுரம் :** 23.3.2015 காலை 10 மணிளவில் அனுமந்தபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் பயணம் தொடங்கியது. அனுமந்தபுரத்தில் இதுபோன்ற பரப்புரையை தொடர்ந்து நடத்துங்கள் என்று பலரும் கேட்டுக் கொண்டனர். காலை 11.30 மணியளவில் கல்பாக்கம் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 3.30 மணியளவில் கடப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 6 மணியளவில் அம்பேத்கர் சிலை அருகிலும் பரப்புரை நடை பெற்றது. அம்பேத்கர் சிலைக்கு பயணக்குழுவினர் மாலை அணிவித்தனர். விடுதலை சிறுத்தைக் கட்சியைச் சார்ந்த நாவரசு, தயாளன் ஆகியோர் பங்கேற்றனர். மதிய உணவுக்கு கல்பாக்கம் முருகேசன் ஏற்பாடு செய்தார். தேம்பாக்கம் அப்பு, ஸ்ரீதர் ஆகியோர் தேனீர் வழங்கினர். பெருங்குடி பாலாஜி ரூ.1000 நன்கொடை வழங்கினார். இரவு உணவு மற்றும் தோழர்கள் தங்குவதற்கும், மறுநாள் காலை உணவுக்கும், புதுவை தி.வி.க. தலைவர் லோகு அய்யப்பன் ஏற்பாடு செய்தார்.

**கடலூர் :** 24.3.2015 காலை 10 மணியளவில் கடலூரில் பரப்புரை தொடங்கியபோது, காவல் துறை பரப்புரை நடத்த அனுமதி மறுத்தது. பொது மக்களிடம் துண்டறிக்கைகள் மட்டும் வழங்கப் பட்டன. கழகத் தோழர்கள் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரை சந்தித்து, பரப்புரைக்கு அனுமதி மறுத்ததை எடுத்துக் கூறி, தொடர்ந்து பரப்புரை தடையின்றி நடந்து வருவதை சுட்டிக் காட்டினார். காவல்துறை கண்காணிப்பாளர், பரப்புரைக்கு அனுமதி தந்தார். மாலை 5 மணியளவில் புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் அருகில் பரப்புரை திட்ட மிட்டபடி நடைபெற்றது. மாலை 6 மணிக்கு பரங்கிப்பேட்டை மார்க்கெட் அருகிலும், இரவு 8 மணிக்கு சிதம்பரம் காந்தி சிலை அருகிலும் பரப்புரைகள் நடந்தன. மதிய உணவு மற்றும் இரவு உணவை பெரியாரியல் முன்னணி ஒருங்கிணைப் பாளர் புதுச்சேரி தீனா ஏற்பாடு செய்தார். அந்த அமைப்பைச் சார்ந்த தீனா, கருணா, பரத், ஜெய்சங்கர், செந்தில் உள்ளிட்ட தோழர்கள் ஒருநாள் முழுதும் நிகழ்ச்சியில் பங்கேற்று குழுவினருடன் இணைந்து துண்டறிக்கைகளை வழங்கினர்.

### மனம் மாறிய பா.ஜ.க. தலைவர்

**புவனகிரி :** 25.3.2015 அன்று காலை 10 மணி யளவில் புவனகிரி எம்.ஜி.ஆர். சிலை அருகில் பரப்புரை தொடங்கியது. 11.30 மணியளவில் சேத்தியாதோப்பு பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 4 மணியளவில் வடலூர் நான்குமுனை சாலையிலும் நடைபெற்றது. (இந்த இடத்தில் பா.ஜ.க. மாவட்ட செயலாளர் வைரகண்ணன் என்பவர், பரப்புரைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஆதர வாளர்களை அலைபேசி வழியாக அழைத்தார். எவரும் வரவில்லை. பிறகு ஓரமாக நின்று கூட்டத்தைக் கேட்டார், தோழர் அய்யனார் - பயணத்தின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசியதைக் கேட்டார். இறுதியில் கருத்துகளைப் பாராட்டி கை குலுக்கினார். ரூ.100 நன்கொடையும் வழங்கினார். மாலை 6 மணியளவில் நெய்வேலி பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. இங்கு நைனார் குப்பம் சு.சிலம்பு என்ற தோழர், பயணக்குழுவினரை சந்தித்துப் பேசினார். அந்த ஊரில் கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு ஜாதி வெறியர்களால் 8 வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவத்தை தோழர்களிடம் விளக்கினார். தன்னுடன் 20 தோழர்கள் கழகத்தில் இணைந்து பணியாற்ற விரும்புவதாக தெரிவித்தார். காலை உணவுக்கு நாகை மாவட்ட செயலாளர் மயிலாடுதுறை மகேஷ் ஏற்பாடு செய்தார். இரவு

(6 ஆம் பக்கம்)

# மாட்டுக்கறி சாப்பிட்ட விவேகானந்தர்!

மகாராஷ்டிரா, அரியானாவில் பா.ஜ.க. ஆட்சிகள், மாட்டுக்கறி விற்பதோ சாப்பிடுவதோ தண்டனைக்குரிய குற்றம் என்று சட்டம் கொண்டு வந்துவிட்டன. மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்தியா முழுமையும் மாட்டுக்கறிக்கு தடை விதிக்கும் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கூறுகிறார். மகாராஷ்டிராவில் பார்ப்பன முதல்வர் தலைமையில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சி, பசுக்களை காளைகளை மட்டும் வெட்டக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறது. எருமைகளுக்கு இது பொருந்தாது. ‘எருமை’ சூத்திர, பஞ்சமப் பிரிவைச் சார்ந்தது. ‘பசு’, பிராமண, சத்திரியப் பிரிவு. பார்ப்பனர்கள் எப்போதும் எருமை மாடுகளை வளர்ப்பது இல்லை. பசு மாட்டைத்தான் வளர்ப்பார்கள். பார்ப்பனர்கள் மாட்டுக்கறியை சுவைத்து சாப்பிட்டதை, ஏராளமான சுலோகங்கள் வழியாக வேதங்கள் உறுதிப்படுத்துகின்றன. யாகங்கள் என்ற பெயரால் ஆரியர்கள் ஆடு மாடுகளை தீயில் போட்டுக் கொளுத்தியதாலும், அந்த உணவை விரும்பி சாப்பிட்டதாலும் விவசாயத்துக்குத் தேவையான கால்நடைகள் கிடைக்காமல் போயின. இந்த நிலையில்தான் புத்தர், யாகங்களுக்கும், ஆரிய பார்ப்பனர்களுக்கும் எதிராக மக்களை திரட்டினார். புத்த மார்க்கம் செல்வாக்குப் பெற்றதால், பார்ப்பனர்களின் வேத மதம் கடும் நெருக்கடிகளை எதிர் கொண்டது. இந்த நிலையில் புத்த மார்க்கத்தில் ஊடுருவி, அழித்த ஆரிய பார்ப்பனர்கள், புத்த மார்க்கம் வலியுறுத்திய மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்த கொள்கைகளை தங்கள் வசமாக்கிக் கொண்டனர். பார்ப்பனர்கள் மாட்டிறைச்சியை சாப்பிடாமல் நிறுத்தியதும் இந்தக் காலகட்டத்தில் தான். அம்பேத்கர் உள்ளிட்ட பல வரலாற்று ஆசிரியர்கள் இதைப் பதிவு செய்துள்ளனர். மாட்டுக்கறி உணவுப் பழக்கத்தை கைவிட முடியாமல் திணறியதால்தான் அதன் நினைவாக பார்ப்பனர்கள் மாட்டுப் பாலையும், மாட்டு ‘மூத்திரத்தை’யும் (கோமியானம்) உணவாக்கிக் கொண்டனர் என்று அம்பேத்கர் கூறுகிறார். பயன்படக்கூடிய எந்த விலங்கையும் எவரும் வெட்ட மாட்டார்கள். அவை பயன்படாத நிலையில் உணவுக்காக வெட்டப்படுகிறது. மாடுகளை வெட்டக் கூடாது என்று சட்டம் போடுகிறவர்கள் பயன்படாமல் போகும் அடி மாடுகளை எந்த வழியில் பாதுகாப்பது என்பது குறித்து கவலைப்படவில்லை. ஆங்காங்கே இந்த மாடுகள் கவனிப்பாரற்று, நோய்க்குள்ளாகி வீதிகளில் செத்து விழும் நிலைதான் உருவாகும். குடும்பத்தில் முதியவர்களையே புறக்கணிக்கும் சமூகம் இது; பயன்படாத மாடுகளையா பாதுகாக்கப் போகிறது?

சங்பரிவாரங்கள் போற்றும் இந்துமதத் துறவி விவேகானந்தர், மாட்டிறைச்சிப் பற்றிய தனது கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். ‘இராமன்-சீதை’ மாட்டிறைச்சியை விரும்பி உண்டனர் என்று கூறும் விவேகானந்தர், மாட்டிறைச்சி உணவை நிறுத்தியதால்தான், இந்த நாடு ஆண்மை இழந்து போனது என்றும் கூறுகிறார். 19ஆம் நூற்றாண்டு இறுதியில் வடமாநிலங்களில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, பஞ்சத்தில் மனிதர்கள், கால்நடைகள் ஏராளமாகப் பலியானபோது பார்ப்பனர்கள் பசு மாட்டைக் காப்பாற்ற ‘கோ ரக்ஷன் சமிதி’ என்ற அமைப்பை உருவாக்கி, விவேகானந்தரிடம் உதவி கேட்க வந்தனர். மனிதர்களைக் காப்பாற்றாமல் மாடுகளைக் காப்பாற்ற வந்துவிட்டீர்களா? என்று கடுமையாகப் பேசி அவர்களை விரட்டினார், விவேகானந்தர்.

விவேகானந்தரே மாட்டுக்கறி சாப்பிடுவதை எதிர்க்கவில்லை.

> “உடலை வருத்தி உழைக்கும் மக்கள் மாட்டுக் கறியை சாப்பிட அனுமதிக்க வேண்டும். அதே நேரத்தில் பக்தர்களாக வாழ விரும்புவோர் மாட்டுக்கறி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்” (விவேகானந்தர் உரை தொகுப்பு-தொகுதி 4).

> “ஒரு காலத்தில் ‘பிராமணர்கள்’ மாட்டுக்கறி சாப்பிட்டார்கள். ‘சூத்திரர்’களை திருமணம் செய்து கொண்டார்கள். ‘பிராமணர்’களுக்கு சூத்திரர்கள் மாட்டுக்கறி உணவை சமைத்தார்கள்” (விவேகானந்தர் உரை தொகுப்பு-தொகுதி 9).

> “நான் சொல்வதைக் கேட்டால் உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கும். நமது பழங்கால பழக்க வழக்கத்தின்படி மாட்டுக் கறியை சாப்பிடாதவன் நல்ல இந்துஅல்ல.” (He is not a good Hindu who does not eat beef) - (தொகுதி-3 - அமெரிக்காவில் கலிபோர்னியாவில் ‘ஷேக்ஸ்பியர் கிளப்பில்’ பிப்.2,1900 அன்று ஆற்றிய உரை).

- இப்படி ஏராளமான சான்றுகளை அடுக்கிக் காட்ட முடியும். இவை எல்லாவற்றையும்விட விவேகானந்தரே மாட்டிறைச்சி சாப்பிட்டார் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

அமெரிக்காவில், ‘உலக மதங்களின் நாடாளு மன்றம்’ என்ற அமைப்பு செயல்பட்டது (1893). அந்த அமைப்பில், விவேகானந்தர் ஆற்றிய உரையைத்தான் சங்பரிவாரங்கள் சிலாகித்துப் பெருமை பேசுகின்றன. இந்த நாடாளுமன்றத்தின் தலைவராக இருந்தவர் டாக்டர் ஜான் ஹென்றி பாரோஸ் எனும் பாதிரியார். அவர் எழுதிய ‘ஆசியாவில் கிறிஸ்தவர்களின் ஆக்கிரமிப்பு’ என்ற நூலில், கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

**“மதங்களுக்கான நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு முடிந்த பிறகு, நான் விவேகானந்தருடன் உணவு விடுதிக்கு சாப்பிடச் சென்றேன்; அந்த உணவு விடுதி, நிகழ்ச்சி நடந்த ‘ஆர்ட் இன்ஸ்டிடியூட்’ என்ற நிறுவனத்தின் தரைதளத்தில் இருந்தது. ‘என்ன சாப்பிடுகிறீர்கள்? என்று கேட்டேன். ‘எனக்கு மாட்டிறைச்சி கொடுங்கள்’ என்று விவேகானந்தர் கேட்டார்”** என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் மட்டுமல்ல, சேரன்மாதேவி குருகுலத்தில், ‘பிராமணர்’களுக்கு மட்டும் தனி இடத்தில் சாப்பாடு போட்டு, பெரியாரின் எதிர்ப்பைச் சந்தித்த வ.வே.சு. அய்யர், இலண்டனுக்கு படிக்கச் சென்றபோது, பொருளாதார சிக்கனம் கருதி, ‘மாட்டிறைச்சி’யை சாப்பிட்டதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். வைதீகத்தில் ஊறித் திளைத்தப் பார்ப்பனர்கள்கூட, தங்களின் நலன் என்று வரும்போது எந்த சாஸ்திர மீறலுக்கும் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால், உழைக்கும் மக்களின் உணவை, அவர்களின் தொழிலை தடைப்படுத்துகிறார்கள்.

## வழிகாட்டும் நெறியில் 48ஆவது பிரிவு கூறுவது என்ன?

இந்த நிலையில், அரசியல் சட்டத்தின் வழிகாட்டு நெறிகளில் (Directive Principles of State Policy) 48ஆவது பிரிவு - பசுக்களையும் கன்றுகளையும் வதை செய்யக் கூடாது என்று குறிப்பிட்டிருப்பதாக மாட்டுக்கறி தடையை நியாயப்படுத்தும் ‘சங் பரிவாரங்கள்’ கூறுகின்றன. ‘தினமணி’ நாளேடும், தனது தலையங்கத்தில் இதை குறிப்பிட்டுள்ளது. வழிகாட்டும் நெறி என்பது எதிர்காலத்தில் அரசுக்கான கொள்கை வழிகாட்டி! அதில்கூட ‘வதை செய்யக்கூடாது’ என்ற சொற்றொடரைத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உண்மையில் பசு, இந்துக்களால் வணங்கப்படும் தெய்வம் என்ற கண்ணோட்டத்தில் வழிகாட்டும் நெறி இதைக் குறிப்பிடவில்லை. அத்துடன், பசு மாட்டை மட்டுமேதான் வெட்டுவதற்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் கூறவில்லை. இந்த வரலாற்று உண்மைகளை சங்பரிவாரங்களும் பார்ப்பன ஊடகங்களும் திட்டமிட்டு மறைத்து வருகின்றன.

இந்தப் பிரச்சினை குறித்து அரசியல் நிர்ணய சபையில் 14.11.1949 அன்று விவாதிக்கப்பட்டது. இந்த விவாதங்கள் குறித்த பதிவுகள் அரசியல் நிர்ணய சபை விவாதங்களின் 11ஆவது தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. 48ஆவது பிரிவில் இடம் பெற்றுள்ள வாசகம் இதுதான். “வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புக்கு நவீன அறிவியல் முறை குறித்து முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். குறிப்பாக உயர்ரக கால்நடைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பசுக்கள், கன்றுகள் மற்றும் பால் தரும் விலங்குகள், பாரம் இழுக்கும் கால் நடைகள் ஆகியவற்றைக் கொல்வதை தடுப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும்” என்று 48ஆவது பிரிவு கூறுகிறது. கால்நடைகள் பாரம் இழுக்கும் விலங்குகள் உள்பட. அனைத்து பயன்படக்கூடிய விலங்குகளுக்குமான பாதுகாப்பு குறித்துதான் இந்தப் பிரிவு பேசுகிறது. ஆனால், அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றிருந்த சில மதவாதிகள், மதத்தின் கண்ணோட்டத்தில் ‘பசு’வை தெய்வமாகக் கருதி அதை வெட்டக் கூடாது என்ற கருத்தை இந்த பிரிவுகளுக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என்று விரும்பினார்கள். எனவே இந்த வாசகங்கள் மதத்தின் கண்ணோட்டத்தை ஏற்காமல் நீர்த்துப் போகச் செய்துவிட்டன என்று தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்து, இரண்டு உறுப்பினர்கள் இதற்கு திருத்தங்களைக் கொண்டு வந்தனர். ஒருவர் பேராசிரியர் சிவன்லால் சக்சேனா; மற்றொருவர் சேக்கோவிந்ததாஸ். இந்துக்கள் புனித தெய்வமாகக் கருதும் பசுக்களை கொல்லக் கூடாது என்ற சொற்றொடரை இணைக்க வேண்டும் என்று சேக்கோவிந்ததாஸ் கொண்டு வந்த திருத்தத்தை அரசியல் நிர்ணய சபை ஏற்கவில்லை. இப்படி ஒரு பிரிவை சேர்த்ததே - உறுப்பினர்கள் விரும்புவது போல மதக் கண்ணோட்டத்தில் அல்ல; பயன் பாட்டுக் கண்ணோட்டத்தில்தான் என்று அரசியல் நிர்ணய சபை இதற்கு விளக்கமளித்தது.

“We have particularly substituted this article for, the article which other members wanted from a religious point of views; It is now simply a utilitarian measure”-என்பதுதான் அரசியல் நிர்ணய சபை தந்த விளக்கம்.

அதனால்தான் விவசாயத்துக்கு பயன்படாமல், பால் கறப்பது நின்று போன பயன்படாத அடி மாடுகளை வெட்டி உணவாக்கலாம் என்ற பயன்பாட்டுக் கண்ணோட்டத்தில் (utilitarian measure) உணவாகவும் ஏற்றுமதிப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. ஒட்டுமொத்த கால்நடைகளிலும், ‘பசு’ மட்டுமே ‘புனிதம்’ என்றும் அதை வெட்டக் கூடாது என்றும் மதவாதக் கண்ணோட்டத்தில் சட்டம் போடும் ‘இந்துத்துவா’ ஆட்சியாளர்கள், இதற்கு நேர்மாறாக பயன்பாட்டுக் கண்ணோட்டத்தில் உருவான வழிகாட்டு நெறியின் 48ஆவது பிரிவை தங்களுக்கு ஆதரவாக எடுத்துக் கூறுவது மிகப் பெரும் மோசடி ஆகும். பயன்படக்கூடிய கால்நடைகளை நோயிலிருந்து காப்பாற்றத் தேவையான மருத்துவ உதவிகளை மருத்துவ வல்லுனர்களின் துணையோடு வழங்கிட வேண்டும் என்று அரசியல் சட்டத்தின் 7ஆவது அட்டவணையில் மாநிலங்களுக்கான அதிகாரப் பட்டியலின் 15ஆவது பிரிவு கூறுகிறது.

ஒட்டுமொத்த பயன்தரத்தக்க கால்நடைகளை பாதுகாப்பது வேறு; பயன்படாத நிலையிலும் பசு மாட்டை மட்டுமே வெட்டக் கூடாது; அது இந்துக்களில் புனித தெய்வம் என்று கூப்பாடு போடுவது வேறு;

ஜாதி கவுரவம் என்ற பெயரில், வேறு ஜாதி இளைஞரை காதலித்த அல்லது திருமணம் செய்த “குற்றத்துக்காக” பெற்ற மகளையே வெட்டிப் பலியிடும் ‘மனித வதைகள்’ இங்கே நடக்கின்றன. இதைச் செய்பவர்களும் இந்துக்கள்தான்! இதைத் தட்டிக் கேட்பதற்கோ, தடைச் சட்டம் கொண்டு வருவதற்கோ குரல் கொடுக்காத ‘பார்ப்பன பரிவாரங்கள்’, பசுமாடுகளை வெட்டக் கூடாது; சாப்பிடக் கூடாது; விற்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வருகிறார்கள். இந்த அவமானகரமான இழிவுகள், இந்தப் ‘புண்ணிய’ பூமிகளில் மட்டுமே நடக்கும்.

# வறுமை ஒழிப்புக்கு தடையாக நிற்கும் ஜாதியமைப்பு

இந்தியாவில் ஜாதிய கட்டமைப்பு குறித்து ஊடகங்களோ, அரசியல் கட்சிகளோ, இயக்கங்களோ விவாதிக்கக்கூட தயாராக இல்லை. சமூகத்தில் ஆழமாக புரையோடிப் போயிருக்கும் ஜாதியத்தை தகர்க்காமல், எத்தனை பொருளாதாரத் திட்டங்களையும் அறிமுகப்படுத்தினாலும் வறுமையை ஒழித்துவிட முடியாது என்ற கருத்தை பெரியார் இயக்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது பல்வேறு ஆய்வுகளும் இதே கருத்தை உறுதி செய்து வருகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, வளர்ச்சிக்கான பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. அப்போது சமூகவியலாளர்கள், மானுடவியலாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள் வறுமை ஒழிப்புக்கான திட்டங்களை தீட்டுவது குறித்து, தொடர்புடைய பல்வேறு சமூகப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தனர். அத்தகைய ஆய்வு நடத்திய நார்வே நாட்டைச் சார்ந்த குன்னர்மிர்தால் என்ற சமூக ஆய்வாளர் 'ஏசியன் டிராமா' என்ற ஆய்வு நூலை 1968இல் எழுதினார். வறுமைக்கான பிரச்சினையை வறுமை என்ற எல்லைக்கோட்டுக்குள் நின்று பார்க்க முடியாது. இந்திய சமூகத்தில் இறுகிப் போய் நிற்கும் 'ஜாதிய கட்டமைப்புடன்' அதை இணைத்துப் பார்க்க வேண்டும் என்ற கருத்தை முன் வைத்த அவர், ஜாதிய கட்டமைப்பே வறுமையை உறுதிப் படுத்திக் கொண்டிருக்கிறது என்று தமது ஆய்வில் நிறுவினார்.

இதில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய அம்சம், இந்த ஆய்வு நூல், நோபல் பரிசைப் பெற்றது என்பதாகும். இப்போது இதேபோல் மற்றொரு ஆய்வு நூல் வெளி வந்திருக்கிறது. இந்தியாவில் நிலை கொண்டுள்ள வறுமை (Persistence of Poverty in India) என்ற நூலை நந்தினி கூப்து, ஜொனாத்தன் பாரி என்ற ஆய்வாளர்கள் தொகுத்துள்ளனர். பல்வேறு ஆய்வு கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த நூல் குறித்த விரிவான திறனாய்வு, 'இந்து' ஆங்கில நாளேட்டில் (ஏப்.5, 2015) வெளிவந்திருக்கிறது. இந்தியா முழுதும் பல்வேறு மாநிலங்களில் இதற்காக பல ஆண்டுகாலம் செலவிட்டு இந்த ஆய்வு நூல் விரிவாக தொகுக்கப்பட்டுள்ளது. ஜாதி அடிப்படையிலான சமூக கட்டமைப்பும் அதனடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஜாதித் தொழில்களும் ஏழ்மையும் நெருக்கமாக பின்னிப் பிணைந்து நிற்கிறது. ஏழைகளின் மேம்பாட்டை இலக்காகக் கொண்ட திட்டங்கள், அதன் இலக்கில் தோல்வி அடைந்துவிட்டன. நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் சென்றாலும், வறுமையில் வாழும் மக்கள் நிலை மேலும் மோசமாகிக் கொண்டிருப்பதற்கு ஜாதி யமைப்பே காரணம் என்று ஆய்வு அழுத்தமாக எடுத்துரைக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வறுமையை ஒழிப்பதில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றத்தைக் கொண்டு வரவில்லை என்பதை புள்ளி விவரங்களுடன் உறுதிப்படுத்துகிறது. விவசாயம் முடக்கப்பட்ட நிலையில் இப்போதும் விவசாயக் கூலிகளாகவே உழலும் தலித் மற்றும் ஆதிவாசிகள்தான் வறுமைப் பிடிக்குள் பெருமளவில் சிக்குண்ட மக்களாக இருக்கிறார்கள்.

சென்னை குடிசைப் பகுதியில் ஏழ்மையில் வாழும் வயதில் மூத்தவர்கள் நிலை குறித்து பல ஆண்டுகாலம் ஆய்வு நடத்திய இலண்டன் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பென்னி வெரா - சார்கோ என்ற பெண் ஆராய்ச்சியாளர், தனது கட்டுரையில் நிறுவியுள்ள முடிவுகள் வழமையாக முன் வைக்கப்படும் கருத்துகளை மறுக்கின்றன. மக்கள் தொகை அதிகரிப்பு காரணமாக முதியவர்கள், குறிப்பாக அவர்களில் பெண்கள் எண்ணிக்கையில் அதிகம் இருந்தாலும், அது அவர்களின் வறுமை ஒழிப்புக்கோ வளர்ச்சிக்கோ உதவிடாமல், வாழ்நிலையை மேலும் மோசமாக்கி யுள்ளது. சமூக நலத் திட்டங்கள், சமூகப் பாதுகாப்பு களை அரசு கை கழுவி, 'வர்த்தக சந்தை'க்குள் கொண்டு வந்தது - நெருக்கடிகளுக்கு மற்றொரு காரணம். அரசு பள்ளிகளை, அரசு மருத்துவமனை களை வசதி படைத்தவர்களும் நடுத்தரப் பிரிவினரும் முற்றிலுமாக புறக்கணித்ததால் ஜாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்டு, வறுமையில் உழலும் மக்களுக்கு மட்டுமே அவை அடைக்கலம் வழங்கும் இடங்களாகிவிட்டன.

தமிழ்நாட்டில் காவிரி பாசனப் பகுதிகளில் நடத்தப்பட்ட விரிவான ஆய்வுகளும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளது. இந்த ஆய்வு வேறு ஒரு முக்கிய கருத்தை முன் வைக்கிறது.

1960ஆம் ஆண்டுகளிலிருந்து இந்தப் பகுதியில் திராவிடர் இயக்கமும், இடதுசாரி கட்சிகளும் ஜாதி கட்டமைப்பு, ஜாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இயக்கம் நடத்தியதால்தான், இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்தது. விவசாயம் மற்றும் உள்ளூர் தொழில் வளர்ச்சியும் பெருகியது. அரசுகளையும் ஒதுங்கி நிற்காமல் முனைப்பாக செயல்பட வைத்தது இதற்கான காரணம் ஜாதியத்தை எதிர்த்து நடத்தப்பட்ட இயக்கங்கள்தான் என்று பதிவு செய்கிறது இந்த ஆய்வு. (The working of democratic forces since mid-1960s through the Dravidian and Left Parties has led to "a general rise in living standards... with modest agricultural growth, local industrialisation and an active role for the state.")

- ஜாதிய கட்டமைப்பைத் தகர்க்காமல், அதன் இறுக்கத்தைக் குலைக்காமல் பொருளாதாரத் திட்டங்களால் மட்டும் எந்தத் தாக்கத்தையும் உருவாக்க முடியாது என்பதை உறுதியாக நிலைநாட்டுகின்றன ஆய்வுகள்! பெரியாரும் அவரது இயக்கமும் இடது சாரிகளும் நடத்திய ஜாதி எதிர்ப்பு இயக்கத்தின் சமூகத் தாக்கத்தையும் பதிவு செய்கிறது; இந்த உண்மைகளை கருத்தில் கொள்ள மறுத்து பெரியாரை சிறுமைப்படுத்திட துடிக்கிறார்கள் நவீன பார்ப்பனியர்கள்!

## 'ஏ' பிரிவு பணியில் ஒரு பிற்படுத்தப்பட்டோர்கூட இல்லை!

தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினராக இருப்பவர் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கார்வேந்தன். அவரது பேட்டியை தமிழ் 'இந்து' நாளேடு, ஏப்.5, 2015இல் வெளியிட்டிருக்கிறது. அதில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு மத்திய அரசுப் பதவிகளில் முழுமையாகப் புறக்கணிக்கப்படுவதை சுட்டிக்காட்டியிருக்கிறார். 1993ஆம் ஆண்டு முதல் 27 சதவீத இடஒதுக்கீடு அமுலில் இருந்தாலும் 'ஏ' பிரிவு அதிகாரிகளாக ஒரு பிற்படுத்தப்பட்டவர்கூட இதுவரை நியமனமாகவில்லை. அனைத்து துறைகளிலும் பார்த்தால் பூஜ்யம் சதவீதத்திலிருந்து 10 சதவீதம் பேர் மட்டுமே உள்ளனர். 'ஏ', 'பி', 'சி' பிரிவுகளில் பல பதவிகள் காலியாக இருந்தும் நிரப்பப்படவில்லை. நிரப்புவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்படவும் இல்லை.

மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இதே நிலைதான். மத்திய அரசின் கேந்திரவித்யாலயா பள்ளிகள் மற்றும் இந்திய இராணுவ அமைச்சகத்தின் சைனிக் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு வழங்கப்பட்டாலும், இதுவரை, பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு வழங்கப்படவே இல்லை. எத்தனையோ முறை பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வேண்டுகோள் விடுத்தும் பலனில்லை. அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 15(5)க்கு புறம்பாக அவை செயல்படுகின்றன.

பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் பிற்படுத்தப்பட்ட ஊழியர்களின் உரிமைகளைக் காக்க பணியாளர் நலத்துறை அமைச்சகம் வலியுறுத்தும் வழி காட்டும் முறைகள் பின்பற்றப்படுவதுமில்லை. இதன்படி, பிற்படுத்தப்பட்ட ஊழியர்களுக்காக தனி ஒருங்கிணைப்பு அதிகாரி, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலிருந்து நியமிக்கப்பட வேண்டும்; குறைந்தது ஆண்டுக்கு இருமுறை ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டும்; பிற்படுத்தப்பட்ட ஊழியர்களுக்காக அனைத்து வசதிகளுடன் தனி அலுவலக அறை ஒதுக்கித் தரவேண்டும்; பணி நியமனங்களுக்கான குழுவில் ஒரு பிற்படுத்தப்பட்ட பிரதிநிதி இடம்பெற வேண்டும். ஆனால், பல பொதுத் துறை நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் இதில் எந்த ஒரு வழிகாட்டுதலையும் பின்பற்றவில்லை என்று கூறியிருக்கிறார், எஸ்.கே. கார்வேந்தன். தலித் மக்களுக்கு எதிராக, தமிழ்நாட்டில் தொடை தட்டி கிளம்பும் பிற்படுத்தப்பட்ட ஜாதிக் கட்சிகள், மத்திய அரசில், இப்படி, உரிமைகளை இழந்து நிற்பதற்காக போராட முன் வருவதில்லை. 27 சதவீத இடஒதுக்கீடு அமுலுக்கு வந்து 22 ஆண்டுகள் ஓடிய நிலையிலும் 'ஏ' பிரிவு அதிகாரியாக ஒரு பிற்படுத்தப்பட்டவர் கூட வர முடியாமல் பார்ப்பன உயர்ஜாதி ஆதிக்கவாதிகள் தடுத்து வருவதை கருத்தில் கொள்ளாமல் பார்ப்பனியத்தைக் காப்பாற்றும் சங்பரிவாரங்களுக்கு வெட்கமில்லாமல் 'ஜால்ரா' தட்டுகிறார்கள், இந்த பிற்படுத்தப்பட்ட ஜாதிக் கட்சியினர்!

## கார்ப்பரேட் நலனுக்கு கைப்பற்றப்படும் நிலங்கள்

அரசு நிலம் கையகப்படுத்தும் சட்டத்துக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில் 'சிறப்புப் பொருளாதார மண்டலம்' என்ற திட்டத்துக்காக அரசு ஏற்கெனவே கையகப்படுத்திய 18,024 எக்டேர் நிலங்கள் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றன என்ற தகவல்கள் வெளி வந்துள்ளன. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தொழில் தொடங்கும் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு வரி விலக்கு - மின்சாரம் - தண்ணீர் என்று ஏராளமான சலுகைகளை வாரி வழங்கியும், இதில் தொழில் தொடங்கிய நிறுவனங்கள் பலவும் வெளியேறி விட்டன. ஆனாலும், இதற்காக 20 மாநில அரசுகள் கைப்பற்றிய நிலங்கள் எந்தப் பயன்பாடுமின்றி கிடக்கின்றன.

இதில், குஜராத் முதலிடத்திலும், மகாராஷ்டிரா இரண்டாவது இடத்திலும், தமிழ்நாடு மூன்றாமிடத்திலும் உள்ளன. 10,714 எக்டேர் நிலங்கள் இந்த மாநிலங்களில் கைப்பற்றப்பட்டு, வீணாகக் கிடக்கின்றன. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 27.95 எக்டேர் நிலங்கள்! விவசாயிகளிடமிருந்து அவர்களின் கடும் எதிர்ப்புகளை மீறி இந்த நிலங்கள் கைப்பற்றப் பட்டது குறிப்பிடத்தக்கது. மத்திய அரசு 438 சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு பூர்வாங்க அனுமதி வழங்கியது. இதில் 347 மண்டலங்கள் முறையாக தொடங்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், செயல்பாட்டுக்கு வந்தவை 199 மட்டுமே. ஏற்கெனவே சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக விவசாயிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலங்களே பயன்படுத்தப் படாமல் கிடக்கும்போது, மேலும் ஏன் நிலத்தைப் பறிக்கிறீர்கள் என்று மதுரை விவசாயிகள் கேட்கிறார்கள். விவசாயத்துக்குப் பயன்படாத வறண்ட நிலங்கள் இருக்கும்போது அதை எடுக்காமல், விவசாயத்துக்கு பயன்பட்டு வரும் வளமான நிலங்களை 1480 ஏக்கர் அளவுக்கு கரிசல்கலான் பேட்டை, சுவாமி மல்லப்பேட்டை போன்ற மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து அரசு கைப்பற்றுகிறது. இதை எதிர்த்து 50க்கும் மேற்பட்ட போராட்டங்களை விவசாயிகள் நடத்தியுள்ளனர்.

கார்ப்பரேட் நலன்களுக்காகவே ஆட்சி நடக்கிறது. அதில், பார்ப்பன மேலாதிக்கமும் இணைந்து நிற்கிறது. (தகவல்: டைம்ஸ் ஆப் இந்தியா, மார்ச். 27).

## தமிழகம் எதிர்நோக்கும் ஆபத்து

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலுக்குமுன் 'இந்துத்துவா' மதவெறி நடவடிக்கைகளை தீவிரப்படுத்திட, பா.ஜ.க., சங் பரிவாரங்கள் திட்டமிட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ஜாதி அடிப்படையில் மக்களை அணி திரட்டி, அதை இந்துக்களின் வாக்கு வாங்கியாக மாற்ற வேண்டும் என்பதே பா.ஜ.க. தலைவர் அமித் ஷா, தமிழ்நாட்டுக்காக வகுத்துள்ள தேர்தல் உத்தி. இது குறித்து பெயர் சொல்ல விரும்பாத பா.ஜ.க. தலைவர், கூறுகையில் : "உ.பி. மாநிலத்தைப் போல், 'இந்து-முஸ்லிம்' என்ற அடிப்படையில் பிளவு ஏற்படுத்துவது தமிழகத்தில் சாத்தியமல்ல என்பதால், ஜாதியமைப்புகளை ஊக்குவித்து அவர்களிடம் இந்து பழம் பெருமைகளை எடுத்துக்

(4 ஆம் பக்கம்)

# சென்னை மண்டல பரப்புரைப் பயண காட்சிகள்











(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறி, பல்வேறு ஜாதியமைப்புகளையும் ஒருங்கிணைத்து வாக்கு வங்கிகளாக்க திட்டமிட்டுள்ளோம். இதற்கு எங்கள் கூட்டணியில் இடம் பெறும் கட்சிகளை பயன் படுத்துவோம்" என்று கூறினார். இஸ்லாமியர்களை மீண்டும் இந்து மதத்துக்குள் கொண்டு வரும் முயற்சிகளில் பா.ஜ.க. முன்னணி அமைப்புகள் தீவிரம் காட்டி வருகின்றன. கடந்த மார்ச் 2ஆம் தேதி பொள்ளாச்சியில் 55 முஸ்லிம்களை மீண்டும் 'இந்து'க்களாக மாற்றும் நிகழ்வை இந்து முன்னணி நடத்தியுள்ளது.

பா.ஜ.க., சங்பரிவாரங்களின் செயல்பாடுகளை தமிழகத்தில் முடுக்கிவிட ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர் கேசவ விநாயக் என்பவர் தமிழ்நாட்டுக்கு கூடுதல் செயலாளராக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே அமைப்பு செயலாளராக உள்ள எஸ்.மோகன் ராஜுலு என்பவருடன் இணைந்து இவர் செயல்படுவாராம். தமிழகத்தில் காலூன்ற ஜாதி வெறியையும் மதவெறியையும் தூண்டிவிட்டு, தமிழகத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்லும் ஆபத்துகளை முறியடிக்க பெரியார் கொள்கை கைத்தடியை தமிழகத்தின் முற்போக்கு இயக்கங்கள் கையில் எடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

## இடஒதுக்கீடு: உச்சநீதிமன்றம் 'குறுக்குசால்' ஓட்டுகிறது

2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் அவசர அவசரமாக ஜாட் சமூகத்தினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் காங்கிரஸ் ஆட்சி சேர்த்தது. உச்சநீதிமன்றம், மத்திய அரசின் இந்த உத்தரவை அண்மையில் இரத்து செய்து விட்டது. இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. காரணம், டெல்லி, அரியானா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் 'ஜாட்' சமூகத்தினர் ஆதிக்க நிலையிலேயே இருந்து வருகிறார்கள். விரிவாக ஆய்வு நடத்திய மண்டல் ஆணையம் 'ஜாட்' சமூகத்தினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவில்லை. பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையமும் வாக்கு அரசியலுக்காக இந்தப் பிரிவினரை, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தது. அதே நேரத்தில், இடஒதுக்கீடு தொடர்பான வழக்குகள் வரும்போதெல்லாம், வழக்கிற்கு தொடர்பே இல்லாமல், இடஒதுக்கீட்டையே கேள்விக்குள்ளாக்கி, கருத்துகளை தெரிவிப்பது உச்சநீதிமன்றத்தின் வழக்கமாகி விட்டது. இந்த வழக்கிலும் உச்சநீதிமன்றம் இதேபோல் விவாதத்துக்குரிய பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறது. நீதிபதிகள் ரஞ்சன் கோகோய் மற்றும் ரோகின்டன் எஃப். நாரிமன் ஆகியோர் இந்த வழக்கில், பிற்படுத்தப்பட்ட தன்மையை அடையாளப்படுத்துவதற்கு ஜாதி என்ற ஒற்றை அளவுகோல் மட்டுமே போதுமா? என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள்.

தீர்ப்பில், "உண்மையிலேயே பிற்படுத்தப்பட்டோராக கருதப்பட வேண்டிய சமூகப் பிரிவுகள் இருக்கின்றன. இந்தப் பிரிவினரின் தொடர்ச்சியான பின்தங்கிய நிலையை ஆராய, ஜாதி என்ற அடையாளத்தையும் தாண்டி மதிப்பீடு செய்ய வேண்டும்" என்று எழுதியுள்ளார்கள். திருநங்கைகள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க தகுதியானவர்கள் என்றும் நீதிமன்றம் கூறுகிறது. இடஒதுக்கீட்டை ஒழிக்கக் காத்துக் கொண்டிருக்கும் பார்ப்பன உயர்ஜாதியினர், இத்தீர்ப்பை மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளார்கள். திருநங்கைகளுக்கு தனி இடஒதுக்கீடு செய்வதில் தவறில்லை; அவர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கச் சொல்வதுதான் பிரச்சினை. பார்ப்பனர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று, 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டில், சில மாதங்களுக்கு முன்பு நீலிக்கண்ணீர் வடித்து கட்டுரை எழுதிய 'கிழக்குப் பதிப்பக' உரிமையாளர் பத்ரி சேஷாத்திரி இப்போது நீதிபதிகளின் இந்தக் கருத்தை வரவேற்று, அதே ஆங்கில நாளேட்டில் எழுதியிருக்கிறார். இடஒதுக்கீடு என்பது, ஏதோ, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசு வழங்கும் 'சலுகை' என்பது போலக் கருதி, இந்த 'சலுகை'யை எவ்வளவு காலத்துக்கு வழங்க முடியும் என்பதுபோல் நீதிபதிகள் தீர்ப்பு எழுதுவது சரியான பார்வை அல்ல. இது ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமை. 'நலத் திட்டம்' என்று சுருக்கிப் பார்க்க முடியாது.

உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை விமர்சித்து, டெல்லி பல்கலையின் சமூகவியல் துறை பேராசிரியர் சதிஷ் தேஷ்பாண்டே 'இந்து' ஆங்கில நாளேட்டில் (மார்ச் 27) ஒரு கட்டுரை எழுதியுள்ளார். ஜாதி ஏற்றத் தாழ்வுகளை சமன் செய்வதற்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களை முழுமையான குடி மக்களாக்குவதற்கும் கொண்டுவரப்பட்ட இந்த இடஒதுக்கீட்டை 'சலுகைத் திட்டமாக' நீதிமன்றம் கருதுவது சரியான பார்வை அல்ல. எந்தெந்த ஜாதிப் பிரிவினர், பிரதிநிதித்துவம் பெறாதவர்களாக இருக்கிறார்களோ, அவர்களைக் குறிப்பாகக் கண்டறிந்து, அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்கும்போதுதான் அவர்கள் முழுமையான குடிமக்களுக்கு உரிய நிலையை எட்டுகிறார்கள். தற்போதுள்ள இடஒதுக்கீடு முறையில் உள்ள குறைகளை சரி செய்து, அனைத்து ஜாதிப் பிரிவினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கான ஆக்கப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து ஜாதியினருக்கும் சமமான பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படுவதே இடஒதுக்கீட்டின் நோக்கம் என்ற கருத்தை சதிஷ் தேஷ்பாண்டே அந்த கட்டுரையில் முன் வைத்துள்ளார். வரவேற்கப்பட வேண்டிய சரியான கருத்து!

– இரா

# ஈரோடு, ஏற்காட்டில் பரப்புரைப் பயண எழுச்சி



"எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்" என்னும் தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கடந்த 20.03.2015 அன்று பரப்புரைப் பயணம் தொடங்கி நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக ஈரோடு வடக்கு மாவட்டத்தில் கடந்த 25.03.2015 அன்று காலை 10.00 மணிக்கு பவானி அந்தியூர் பிரிவு, மதியம் 12 மணிக்கு சித்தார், மாலை 3 மணிக்கு அம்மாபேட்டை என பரப்புரைப் பயணம் நடைபெற்றது. பரப்புரைக்கு ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் தோழர் நாத்திகஜோதி தலைமையில், ஈரோடு மாவட்ட செயலாளர் அருச்சுணன், பவானி கோட்ட பொறுப்பாளர் வேணுகோபால், அம்மாபேட்டை ஒன்றிய அமைப்பாளர் வேல்முருகன், நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், குமாரபாளையம் நகரத் தலைவர் தண்டபாணி, குமாரபாளையம் வெங்கட், பவானி வினோத், தோழியர்கள் மைவிழி, கமலம் ஆகியோர் பயணத்தில் கலந்து கொண்டு ஜாதி ஒழிப்பு பாடல்களை பாடியும், துண்டறிக்கைகள் கொடுத்தும் "ஜாதியை ஒழிக்கும் வழிகள்" என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். பயணத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்கு ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திகஜோதி உணவு ஏற்பாடு செய்திருந்தார்.

25.03.2015 அன்று இரவு 7 மணிக்கு குருவரெட்டியூர் ரங்கநாதன் நினைவு அரங்கத்தில் ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் க.சு.வேலுச்சாமி உரையாற்றினார். அம்மாபேட்டை ஒன்றிய அமைப்பாளர் வேல்முருகன் நன்றி கூறினார். தோழர்களுக்கு குருவரெட்டியூர் நாத்திக ஜோதி இல்லத்தில் அசைவ உணவு ஏற்பாடு செய்திருந்தார்.

26.03.2015 அன்று காலை 10 மணிக்கு வெள்ளித் திருப்பூரில் தொடங்கிய பரப்புரை, மதியம் 12.00 மணிக்கு அந்தியூர், தவிட்டுப்பாளையம் பகுதியில் நடைபெற்றது. பயணத்தில் நாத்திக ஜோதி அருச்சுணன், வேணுகோபால், கீழ்வானி தோழர்கள் அர்ஜுன், யுவராஜ், கவின், கோகுல்ராஜ், பூர்ணச்சந்திரன், விமல், கோபி, ஆனந்தராஜ், அலிங்கியம் சிவக்குமார், நம்பியூர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர்களுக்கான மதிய உணவுக்கு அந்தியூர் தோழர் மாதேஷ் ஏற்பாடு செய்திருந்தார்.

மாலை 3.00 மணிக்கு கீழ்வானி பகுதியில் பரப்புரை நடைபெற்றது. இரவு 7 மணிக்கு கோபி செங்கோட்டையன் நகரில் கோபி கோட்ட அமைப்பாளர் ஆனந்தராசு தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், காவை இளவரசனின் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து பவானி கோட்ட அமைப்பாளர் வேணுகோபால் உரையாற்றிய பின், மோகன் நன்றி கூறினார். தோழர்களுக்கான இரவு உணவை தோழர் ஆனந்தராஜ் ஏற்பாடு செய்திருந்தார்.

### ஏற்காட்டில் பரப்புரை




சேலம் மண்டலம் சார்பில் 9 நாள்கள் பரப்புரைப் பயணம் நடந்தது. ஏற்கெனவே 5 நாள் பரப்புரைப் பயண செய்திகள், 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வெளிவந்துள்ளது. பயணத்தின் தொடர்ச்சியான செய்திகள்:

ஏற்காடு ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பரப்புரை 29.03.2015 ஞாயிறு அன்று ஏற்காடு பேருந்து நிலையத்தில் காலை 11 மணிக்கு நடைபெற்றது.

மேட்டூர் டி.கே.ஆர் கலைக்குழுவினரின் பறை இசையுடன் பரப்புரை நிகழ்ச்சி துவங்கியது. தொடர்ந்து மேட்டூர் ஜி.பி., ஆத்தூர் மகேந்திரன் ஆகியோரின் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி சிறப்புடன் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் இடையே ஏற்காடு பெருமாள் மற்றும் மேட்டூர் ஆசிரியர் மா.தேவதாஸ் ஆகியோர் இப்பயணம் குறித்து விளக்கிப் பேசினர்.

மாலை 3 மணிக்கு ஏரிப் பூங்கா அருகில் பறை இசையுடன் தொடங்கி, ஜாதி ஒழிப்புப் பாடல்கள் பாடப்பட்டன. தோழர்கள் கிருஷ்ணன், பிரபு ஆகியோரின் வீதி நாடகம் நடைபெற்றது. தலைமைக் கழக பேச்சாளர் கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வு ஏற்காடு ஒன்றியத் தலைவர் கு. சரவணன் தலைமையில் நடைபெற்றது. ஏற்காடு இரா.கார்த்திகேயன் மாவட்ட பொறுப்பாளர்கள் இலுப்பூர் சக்தி, சேலம் டேவிட் மற்றும் சேலம் நகரத் தோழர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். ஏற்காடு ஞான சேகரன், நிகழ்விற்கு ஒலிபெருக்கி சிறப்பாக அமைத்துக் கொடுத்து உதவினார்.

## வினாக்கள்... விடைகள்...!

✦ திருவெண்ணெய் நல்லூர் அருகே முருகன் கோயில் 'வேல்' மீது குத்தியிருந்த எலுமிச்சம் பழம் ரூ. 24 ஆயிரத்துக்கு ஏலம் போனது. **– செய்தி**

அப்படியா! இந்த செய்தி, முருகனை முப்பாட்டனாக ஏற்றுள்ள கட்சிக்கு தெரியுமா? தெரிஞ்சிருந்தா அவுக ரூ. 24 இலட்சத்துகே ஏலம் எடுத்திருப்பாக!

✦ ஜெயலலிதா, ஊழல் வழக்கிலிருந்து விடுதலை பெற புதுக்கோட்டை கோயில்களில் யானைகள், குதிரைகள், பசுக்களுடன் கலெக்டர் முன்னிலையில் புரோகிதர்கள் 'கஜபூஜை' யாகம். **– செய்தி**

அப்படியே அக்ரி கிருஷ்ணமூர்த்தியையும் அதுல சேர்த்துக்குங்க... எதுக்கு அவருக்காக ஒரு தனிச் செலவு!

✦ இந்திய ரூபாய் நோட்டுக்களை இனி இந்திய காகிதங்களிலேயே அச்சிட வேண்டும். **– பிரதமர் மோடி**

ஏற்கெனவே நிறைய பேர் அப்படித்தான் அச்சிட்டுகிட்டு இருக்காங்க... நீங்கதான் அவர்களை 'கள்ள நோட்டு பேர்வழிகள்'ன்னு ஏத்துக்க மாட்டேங்குறீங்க!

✦ மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப்பட்டதாக நிதியமைச்சகத்திலிருந்து வெளியான ஆணையை நம்பவேண்டாம்; அது போலி ஆணை. **– நிதியமைச்சகம் அறிவிப்பு**

அப்ப, நிதியமைச்சகத்தை நிர்வாக வசதிக்காக 'போலி – உண்மை'ன்னு இரண்டாக பிரிச்சி வச்சிருக்காங்களா? நல்லாத்தான் இருக்கு!

✦ பசு மாடுகளின் புகைப்படங்கள் மற்றும் விவரங்களை காவல்துறைக்கு தெரிவிக்க வேண்டும். **– மகாராஷ்டிர காவல்துறை அறிவிப்பு**

ஆதார் அட்டை, மான்யமெல்லாம் கொடுத்து வங்கியில் பணம் போடுவாங்க போலிருக்கு!

✦ திருப்பதியில் வேற்று மதப் பிரச்சாரம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். **– மத்திய அமைச்சர் தத்தாத்ரேயா**

ஆனா, மாற்று மதக்காரன் கண்டுபிடிச்ச கணினி, இணையதளம், கண்காணிப்புக் காமிராக்களை எல்லாம் ஏத்துப்பீங்க...

✦ இராஜீவ் காந்தி ஒரு நைஜிரியா நாட்டுப் பெண்ணை திருமணம் செய்திருந்தால் அவரை காங்கிரஸ் கட்சித்லைவராக ஏற்றிருக்குமா? **– மத்திய அமைச்சர் கிரிராஜ்**

'அறை போட்டு' இப்படி எல்லாம் சிந்திக்குற அளவுக்கு மோடியின் அமைச்சர்கள் எந்த வேலையுமே இல்லாம இருக்குறாங்க போலிருக்கு!

## இரயில்வேயில் தமிழர் புறக்கணிப்புக்கு எதிராகப் போராட்டம்

சென்னை தென்னக இரயில்வே ஐ.சி.எப். நிர்வாகத்தை கண்டித்து 'தமிழர் எழுச்சி இயக்கம்' சார்பாக 20.03.2015 அன்று பட்டினிப்போராட்டம் நடைபெற்றது. அப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்களிடையே கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். "தென்னக தொடர்வண்டித்துறை மற்றும் இணைப்புப் பெட்டி தொழிற்சாலை வேலை வாய்ப்புகளில் தமிழ் மாணவர்களை புறக்கணிக்காதே! தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்புகளை மண்ணின் மைந்தர்களுக்கே வழங்கு" என வலியுறுத்தி இப்போராட்டம் நடை பெற்றது.

DATE OF PUBLICATION 09.04.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# தி.க., தி.மு.க., ம.தி.மு.க., வி.சி. தோழர்களின் வரவேற்பு!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தங்குவதற்கும், மதிய உணவு, இரவு மற்றும் மறுநாள் காலை உணவு அனைத்தும் வடலூர் கழகத்தோழர் கலியமூர்த்தி ஏற்பாடு செய்தார்.

**மங்களம் :** *26.3.2015 அன்று காலை 10 மணியளவில் மங்களம் கிராமத்தில் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. 11.30 மணியளவில் விருத்தாசலம் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. மாலை 3.30 மணியளவில் திட்டக்குடி பேருந்து நிலையம் அருகிலும், 5.30 மணிக்கு தொழுதூர் நான்கு முனை சாலை அருகிலும் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவுக்கு கடலூர் மாவட்ட அமைப்பாளர் பாரதிதாசன் ஏற்பாடு செய்தார். இரவு உணவுக்கு வெற்றிவேல், மதியழகன் ஏற்பாடு செய்தனர். இரவு தங்குவதற்கு தமிழ்வாணன் அவரது மகன் இராவணன், தனது பெரியார் பள்ளியில் ஏற்பாடு செய்தனர். கடலூர் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாலமுருகன் பரப்புரையில் பங்கேற்றார்.*

## பரப்புரை பயணத்திலிருந்து...

- மாமல்லபுரம், வடலூர், தொழுதூர், மாங்குளம் ஆகிய பகுதிகளில் சில ஜாதிய மதவாதிகள் காட்டிய எதிர்ப்புகளை முடியடித்து தோழர்கள் திட்டமிட்டபடி பரப்புரையை நடத்தினர். பத்து நாள் பயணத்தில் சிற்பி இராஜன், இரா. உமாபதி, பா.ஜான்மண்டேலா, ந. நாத்திகன், நா. பாஸ்கர், இராவணன், அண்ணாமலை, செந்தில், திருநாவுக்கரசு, டேனியல், கௌதம், அருண், நந்தா, கோவிந்தன், விழுப்புரம் அய்யனார் ஆகிய தோழர்கள் தொடர்ந்து பயணத்தில் பங்கேற்றனர்.
- செங்குட்டுவன், சுகுமார், ஏசுகுமார், பார்த்திபன், மனோஜ், மனோகர், கோ. சாக்ரடீசு, அசுரன், முழக்கம் உமாபதி ஆகியோர் இடையில் பயணக் குழுவினரோடு இணைந்து கொண்டனர்.
- ஒவ்வொரு கூட்டத்திலும் தோழர் நாத்திகன், ஜாதி ஒழிப்புப் பாடல்களை பாடினார். விழுப்புரம் மாவட்ட தோழர்கள் டேனியல், அருண் பறையடித்தனர். சிற்பி இராஜனின், 'மந்திரமல்ல தந்திரமே' என்ற அறிவியல் நிகழ்ச்சி மக்களின் கவனத்தை ஈர்த்தது. நிகழ்ச்சி முடிந்த பிறகும்கூட சிற்பி இராஜனிடம் பலரும் அய்யங்களை எழுப்பி விளக்கங்களைப் பெற்றனர். சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி, நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து வழி நடத்தினார். அனைத்துக் கூட்டங்களிலும் விழுப்புரம் அய்யனார் உரை நிகழ்த்தினார். அவரது உரைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. பரப்புரை வாகனத்தை கழகத் தோழர்கள் மனோஜ், கோவிந்தன் ஓட்டினர்.
- ஜான் மண்டேலா, செந்தில், இராவணன், செங்குட்டுவன், அண்ணாமலை, திருநாவுக்கரசு, கௌதம், நந்தா ஆகியோர் மிகச் சிறப்பாக சுட்டெரிக்கும் வெயிலிலும் கடை கடையாக ஏறி உண்டியல் வசூல்செய்தனர்.
- தமிழ்நாட்டை சூழ்ந்துள்ள முக்கிய பிரச்சினைகளை முன் வைத்து, ஜாதி எதிர்ப்புக்கு இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்த பயண துண்டறிக்கை, மக்களின் கவனத்தை ஈர்த்து ஆதரவைத் திரட்டித் தந்தது. துண்டறிக்கையை படித்த பலர், அதில் வெளியிடப்பட்டுள்ள தொடர்பு எண்கள் வழியாக தொடர்பு கொண்டு ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.
- பத்துநாள் பயணத்தில் கடை வசூல் மூலம் கிடைத்த தொகை ரூ.45,000. இதில் சிறு கடை, நடைபாதை கடைகள் நடத்தும் வியாபாரிகளின் ஆதரவே முக்கியமாக இருந்தது.
- பயண வாகனம் – ஜாதிய ஒடுக்குமுறை, பார்ப்பன ஆதிக்கம் பறிபோகும் தமிழர் உரிமைகள் குறித்த செய்திகள் விளக்கப் படங்களுடன் வடிவமைக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு ஊரிலும் மக்கள் இதை கூட்டம் கூட்டமாக பார்த்து படித்தனர்.
- பத்து நாள் பயணத்தில் முப்பதாயிரம் துண்டறிக்கைகளை மக்களிடம் பயணக் குழுவினர் கொண்டு போய் சேர்த்தனர்.
- குறைந்த விலையில் வெளியிட்ட கழக வெளியீடுகளான ஆறு நூல்களும் ரூ.14,400/-க்கு விற்பனையாயின.
- சில இடங்களில் காவல்துறை ஒத்துழைப்பு வழங்க மறுத்தனர். வேறு சில ஊர்களில் காவல்துறையினர் ஆர்வத்துடன் ஒத்துழைத்தனர். பெயர் சொல்ல விரும்பாத காவல்துறையை சேர்ந்த ஒருவர், பயணத்துக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினார்.
- மக்களின் ஆதரவு – எதிர்ப்பு – மவுனங்களுக்கிடையே பரப்புரைப் பயணம் நடந்தது. ஜாதிய ஒடுக்கு முறைகள் வெளிப்படையாக நடக்கும்போது அது குறித்து வாய் திறவாமல் முகத்தைத் திருப்பி நிற்கும் கட்சிகள் மற்றும் இயக்கங்களுக்கிடையே ஜாதி எதிர்ப்பை இயக்கமாக முன்னிறுத்தி மக்களிடையே கொண்டு சென்ற ஒரே அமைப்பு தமிழகத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் மட்டுமே என்பதை இந்தப் பயணம் மீண்டும் உறுதி செய்திருக்கிறது.
- "எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்" என்ற முழக்கம் அச்சிடப்பட்ட கருப்பு பனியன் சட்டைகளை பெரியார் படத்துடன் ஒரு இளைஞர் கூட்டம் அணிந்து கொண்டு, 10 நாள்கள் வேலை மற்றும் ஊதிய இழப்புகளை ஏற்றுக் கொண்டு, கொளுத்தும் வெய்யிலில் ஊர் ஊராக பயணித்து வந்ததை வியந்து பார்த்தவர்களையும் உளம் திறந்து பாராட்டியவர்களையும் பயணக்குழுவினர் சந்தித்தனர்.

**– நமது செய்தியாளர்**

**வேப்பூர் :** *27.3.2015 அன்று காலை 10 மணியளவில் வேப்பூர் மேம்பாலம் அருகிலும், காலை 11.30 மணிக்கு அடரி பேருந்து நிறுத்தம் அருகிலும் பரப்புரைப் பயணம் நடைபெற்றது. மாலை 4 மணியளவில் மாங்குளம் துவக்கப் பள்ளியில், மாணவ மாணவிகளிடையேயும், மாலை 6 மணியளவில் சிறுப்பாக்கம் பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. சிறுப்பாக்கம் வழக்கறிஞர் திருமூர்த்தி அவர்களின் சொந்த கிராமம் ஆகும். எனவே அவர் பயணக்குழுவுக்கு உதவிட சிறுப்பாக்கம் வந்திருந்தார். சிறுபாக்கத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் சென்னை தோழர்கள் குகானந்தன், மோகன், பிரகாசு, வழக்கறிஞர் துரை. அருண் ஆகியோர் பங்கேற்றனர். தோழர்கள் இரவு தங்குவதற்கும் மதிய உணவு, இரவு மற்றும் மறுநாள் காலை உணவுக்கும் வழக்கறிஞர் திருமூர்த்தி ஏற்பாடு செய்தார். காலை நிகழ்ச்சியில் தி.மு.க. தோழர்கள் ஜி.வெங்கடாசலம், எ.பாபு ஆகியோர் தோழர்களுக்கு தேநீர் வழங்கினர்.*

**நைனார்பாளையம் :** *28.3.2015 அன்று காலை 10 மணியளவில் நைனார்பாளையம் கடைவீதி அருகிலும் 11.30க்கு சின்னசேலம் பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. 4 மணிக்கு கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகிலும், மாலை 6 மணியளவில் மூரார்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. இதில் வழக்கறிஞர் திருமூர்த்தி, விழுப்புரம் மாவட்டத் தலைவர் வெற்றிவேல், க. இராமர் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். மதிய உணவுக்கு கல்லை ஆசைத்தம்பி ஏற்பாடு செய்தார். இரவு உணவு கழக ஆதரவாளர் அர.சண்முகம் ஏற்பாடு செய்தார். இரவு தங்குவதற்கும் மறுநாள் காலை உணவுக்கும் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்தனர்.*

### தி.மு.க. மாவட்ட செயலாளர் ஆதரவு

**சங்கராபுரம் :** *29.3.2015 அன்று காலை 10 மணியளவில் சங்கராபுரம் அண்ணாசிலை அருகில் விடுதலைக் கலைக் குழுவினரின் பறை முழக்கத்துடன் துவங்கிய பயணம் காலை 11.30க்கு பகண்டை கூட்ரோட்டில் நடைபெற்றது. மாலை 4.30 மணியளவில் மூங்கில் துறைப்பட்டு சர்க்கரை ஆலை அருகிலும், மாலை 6 மணிக்கு திருவண்ணாமலை காமராசர் சிலை அருகிலும் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவுக்கு மூங்கில் துறைப்பட்டு பன்னீர்செல்வம் ஏற்பாடு செய்தார். இரவு உணவுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த பாலசுந்தரம் ஏற்பாடு செய்தார். இரவு தங்கல் மற்றும் மறுநாள் காலை உணவுக்கு வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் செஞ்சி மஸ்தான் ஏற்பாடு செய்தார். இரண்டு நிகழ்விலும் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ச. பெரியார் வெங்கட், மாவட்ட அமைப்பாளர் செ.நாவாப்பிள்ளை, மாவட்டத் துணைத் தலைவர் கோ.சாக்ரடீசு, மா. நாகராஜ், மா.குமார், குப்புசாமி உள்பட தோழர்கள் பலரும் பங்கேற்றனர். க. இராமர் உரை நிகழ்த்தினார்.*

**சேத்துப்பட்டு-வந்தவாசி :** *30.3.2015 அன்று காலை 9 மணியளவில் தி.மு.க. வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் பயணக் குழுவை வரவேற்று, தோழர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். காலை 10.30 மணிக்கு சேத்துப்பட்டு பேருந்து நிறுத்தம் அருகிலும், பிற்பகல் 12 மணியளவில் வந்தவாசி தேரடி வீதியிலும், மாலை 3 மணியளவில் உத்திரமேரூர் பேருந்து நிலையத்திலும் நடைபெற்ற பரப்புரைப் பயணம், மாலை 5 மணிக்கு தாம்பரம் வந்தடைந்தது. தாம்பரம் நிறைவு விழா பொதுக் கூட்டத்துக்கு காவல்துறை கடைசி நேரத்தில் அனுமதி மறுத்ததால் நீதிமன்றத்தில் அனுமதி கோரி வழக்கு தொடரப் பட்டுள்ளது. கூடுவாஞ்சேரியில் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்த மாட்டுக்கறி உணவை முடித்துக்கொண்டு, பயணக்குழுவினர் சென்னை திரும்பினர்.*

**செய்தி தொகுப்பு: விழுப்புரம் அய்யனார்**

**தமிழ்நாடு அறிவியல் மன்றம் நடத்தும்**
**'குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம்'**

**10 வயது முதல் 15 வயது முடிய உள்ள குழந்தைகள் கலந்து கொள்ளலாம்.**

நாள்: 06.05.2015 முதல் 10.05.2015 முடிய 5 நாள்கள்

இடம் : திண்டுக்கல்


கட்டணம் : ரூ.1000 (ரூபாய் ஆயிரம் மட்டும்)

முன்பதிவு செய்ய: 9842448175 / 9688856151 / 9842626686

முன் பதிவு செய்ய கடைசி நாள் : 25.04.2015

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 9th April 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஏப்ரல் 16, 2015 | புரட்சி 14 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00


## பெரியார் இயக்கங்கள் கரம் கோர்த்து களமிறங்கும்

# பரப்புரை நிறைவு விழா எழுச்சி

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய 14 நாள் பரப்புரை நிறைவு விழா பொதுக் கூட்டத்தில், பெரியாரியலுக்கு எதிரான மிரட்டல்களை சந்திக்க, பெரியார் இயக்கங்கள் கரம் கோர்த்து களமிறங்கும் என்று தோழர்கள் சூளுரைத்தனர்.

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து, 14 நாள்கள் பரப்புரைப் பயணம் நடத்தியது. பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா பொதுக் கூட்டம், புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் விழாவாக தாம்பரத்தில் 14.4.2015 அன்று நடைபெற்றது.

காஞ்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் நடந்த இப் பொதுக் கூட்டத்துக்கு மு.தினேஷ் குமார் தலைமை தாங்கினார். சு.செங் குட்டுவன் வரவேற்புரையாற்றினார். முன்னதாக சம்பூகன் இசைக் குழு வினரின் இசை நிகழ்ச்சி நடை பெற்றது. தொடர்ந்து சென்னை மாவட்ட கழகச் செயலாளர் உமாபதி, விஜயகுமார், வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செய்தி தொடர்பாளர் வன்னியரசு, த.மு.மு.க. பொதுச் செயலாளர் ப. அப்துல்சமது, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரை யாற்றினர். பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு சான்றிதழ்கள், கருப்பு ஆடை வழங்கப்பட்டு பாராட்டப் பெற்றனர். பெரியார் மண்ணில் காலூன்ற துடிக்கும் பார்ப்பனிய சக்திகளுக்கு எதிராக ஒன்றுபட்டு போராடுவோம் என்று கூட்டத்தில் பேசிய அனைவரும் உறுதியேற்றனர். பெரியார் திடலில் திராவிடர் கழகம் திட்டமிட்ட பெண்ணுரிமை நிகழ்வான ‘தாலியகற்றுதலுக்கு’ தடைபோட, தமிழக அரசு மதவாத சக்திகளுக்கு ஆதரவாக செயல்பட்டதையும் பெரியார் திடலில் திராவிடர் கழகத் தோழர்கள் மீது தடியடி நடத்தியதையும் கூட்டத்தில் கண்டித்து உரை யாற்றினர். பெரியார் அமைப்புகள் வெவ்வேறு செயல் திட்டங்களை முன்வைத்து செயல்பட்டாலும், பெரியாரியலுக்கு சவால் வரும்போது அதை முறியடிக்க களமிறங்கி நிற்கும் என்று கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.

கூட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகம் மற்றும் திராவிடர் கழகத் தோழர்கள் பங்கேற்றனர். பெருந் திரளாக மக்கள் கூடியிருந்தனர். கூட்டம் எழுச்சியுடன் நடந்தது.

மாவட்டங்களில் பயணம் மேற்கொண்ட சென்னை கழகத் தோழர்கள், அதை முடித்துக் கொண்டு சென்னை நகரில் மூன்று நாள் பரப்புரை இயக்கங்களை நடத்தினர். அது குறித்த செய்தி தொகுப்பு:

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், ‘பறி போகிறது எங்கள் நிலம்; கொள்ளை போகிறது கனிம வளம்; ஒழிகிறது வேலை வாய்ப்பு; ஆனால், ஓங்கி வளருது ஜாதி வெறி; எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’’ என்று மூன்று நாள் பரப்புரைப் பயணம் நடைபெற்றது.

9.4.2015 மாலை 4.30 மணியளவில் சென்னை ஆரியபுரம் காமராசர் சாலையில் பரப்புரை நடை பெற்றது. மாலை 6.30 மணியளவில் தேனாம் பேட்டை திருவள்ளுவர் சாலையில் நடைபெற்றது. பெயர் சொல்ல விரும்பாத காவல்துறையைச் சார்ந்த அதிகாரி ஒருவர் தேனீர் செலவுக்கு ரூ.200 வழங்கினார். வழக்கறிஞர் துரை அருண் நிகழ்ச்சியில் பங்கேற்று உரை நிகழ்த்தினார். பகுதி தோழர்கள் சதீஷ், பழனி, பிரதீப், பாலா ஆகியோர் பங்கேற்றனர்.

11.4.2015 மாலை 5 மணியளவில் மேற்கு சைதாப் பேட்டை ஜோன்ஸ் ரோடு பேருந்துநிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் துரைராஜ், ராஜு ஆகியோர் தோழர்களுக்கு தேநீர் ஏற்பாடு செய்தனர். ரூ.300 நன்கொடை வழங்கினர்.

13.4.2015 மாலை 5.30 மணியளவில் டாக்டர் நடேசன் சாலை இலாயிட்ஸ் சாலை சந்திப்பில் பரப்புரை நடைபெற்றது. வெல்கம் சலூன் நிறுவனர் தயாளன், தோழர்களுக்கு தேநீர் ஏற்பாடு செய்தார். கழக ஆதரவாளர்கள் மாஸ்டர் தங்கப்பன், கி. சமரன், விசி ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். மாலை 6.30 மணியளவில் திருவல்லிக் கேணி பிவி. தெருவில் பரப்புரை நடைபெற்றது. இங்கு பரப்புரை நடைபெறும் போது பார்ப்பனர் ஒருவர் அவசர போலீசுக்கு தகவல் தந்து பரப்புரையை தடுக்க முயன்றார். தோழர்கள் அனுமதி பெற்றே இந்த பரப்புரை நடைபெறுகிறது என்று காவல்துறையினரிடம் தெரிவித்து, தொடர்ந்து பரப்புரையை நடத்தினர். பெண் ஒருவர் கழக வெளியீடுகளை வாங்கிக் கொண்டு இதுபோன்ற பரப்புரை தேவை என்று தோழர்களை பாராட்டிச் சென்றார். அன்பு தனசேகர் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.


தோழர் அருண் பறையடிக்க, நாத்திகன், ஆட்டோ சரவணன் ஆகியோர் ஜாதி ஒழிப்புப் பாடல்களை பாடினர். அனைத்து நிகழ்ச்சிகளையும் உமாபதி ஒருங் கிணைப்பு செய்தார். விழுப்புரம் அய்யனார் உரையாற்றினார்.

மூன்று நாள் நிகழ்வில் பா.ஜான் மண்டேலா, இராவணன், செந்தில், மனோகர், பிரகாசு, பார்த்திபன், அண்ணாமலை, பிரபா, இலட்சுமணன், ஓட்டுநர் அருண் ஆகியோர் பங்கேற்றனர். மூன்று நாள் பரப்புரையில் உண்டியல் வசூல். ரூ.12,500.

**செய்தி: அய்யனார்**

### தாம்பரம் காவல்துறையின் ‘அதிரடி’ ஆணை

## மாடு, ஆடு, கோழி உள்ளிட்ட எந்த இறைச்சி உணவையும் சாப்பிட்டால் கைது செய்வோம்!



10. இப்பொதுக்கூட்டத்தின் போது மாட்டிறைச்சியையோ அல்லது வேறு மாமிசங்களையோ (பிரியாணி என்ற பெயரில்) இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்கு விநியோகம் செய்ய இருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. அப்படி ஏதும் மாமிசங்கள் விநியோகம் செய்தால், சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

P. S. மனோகரன்
காவல் உதவி ஆணையாளர்,
தாம்பரம் சரகம். 16.4.15

பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா பொதுக் கூட்டம் கடந்த மார்ச் 30ஆம் தேதி நடக்க விருந்தது. கடைசி நேரத்தில் கூட் டத்துக்கு காவல்துறை அனுமதி மறுத்தது. தடையை எதிர்த்து காஞ்சிபுரம் மாவட்ட கழகத் தலைவர் செங்குட்டுவன், உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண் ஆகியோர் நேர்நின்று வாதாடி, கூட்டத்துக்கான அனுமதியைப் பெற்றனர். ஏப்.14 ஆம் தேதி கூட்டம் நடத்த நீதிமன்றத்தின் அனுமதி பெற்று கூட்டம் நடந்தது. காவல்துறை கூட்டத்தை நடத்த விடாமல் தடுக்க கடும் நெருக்கடிகளை உருவாக்கியது. 22 நிபந்தனைகளை எழுத்துபூர்வமாக காவல்துறை விதித்தது. அதில் ஒன்று, கூட்டத்தின் இறுதியில் மாட்டு இறைச்சியோ அல்லது வேறு எந்த இறைச்சி உணவோ பிரியாணியாக வழங்கக்கூடாது என்பதாகும். தமிழ்நாட்டில் மாட்டிறைச்சிக்கு சட்டப்படி தடை இல்லை. ஆனால், மாட்டிறைச்சிக்கு மட்டுமல்ல, கோழி, ஆடு உள்ளிட்ட எந்த இறைச்சி உணவையும் சாப்பிட அனுமதிக்க மாட்டோம் என்று காவல்துறை உதவி ஆணையாளர் மனோகரன் என்பவர் கையெழுத்திட்டு உத்தரவு பிறப்பித்திருந்தார். இது காவல்துறையின் அதிகார எல்லை மீறலை அப்பட்டமாக வெளிப்படுத்துவதாக இருந்தது.

## பாடு கண்ணே பாடு



பாடு கண்ணே பாடு – பாவேந்தர்
பாரதி தாசனார் பைந்தமிழ் பாட்டினைப்
பாடு கண்ணே பாடு
யாழோடும் குழலோடும் பறைமுழங்க
ஊரோடும் இசையோடும் பாடு.

அயர்வினை உன்னில் நீக்கும் – மின்
ஆற்றலை உடலில் சேர்க்கும்
துயருனை அண்டாது காக்கும் – வாழ்வில்
தூயநல் இன்பமே தேக்கும்

தீயதாம் அச்சத்தை ஓட்டும் – அஞ்சா
துணிவெனும் ஆயுதம் நீட்டும்
மாயையாம் மூடத்தைத் தீய்க்கும் – உன்னை
மாசற்ற மனிதனா யாக்கும்

மானுட அறிவினை பெருக்கும் – இன
மானமே குருதியில் கலக்கும்
ஊனினில் தமிழையே நாட்டும் – உரிமை
விடுதலை புரட்சியை மூட்டும்

கன்னல் பாகாய் வார்ப்பாய் – அமிழ்தாம்
கருத்தை மீட்டியே ஆர்ப்பாய்
அன்னைத் தமிழில் தீட்டிய – பாட்டை
ஆருயிர் ஊறிட பாடு!

– **குயில்தாசன்**

**ஏப்ரல் 29 புரட்சிக் கவிஞர் பிறந்த நாள்**

**தலையங்கம்**

## அஇஅதிமுக ஆட்சியின் அடக்குமுறை

பார்ப்பனர்களின் ஒடுக்குமுறை பண்பாடுகளை தமிழர்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்பதுதான் பார்ப்பனப் பாசிசம். மோடி ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகு, சட்டத்தையும் அதிகாரத்தையும் காட்டி அச்சுறுத்தி, பார்ப்பன பண்பாடுகளை திணிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். மோடி ஆட்சி மட்டுமல்ல, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியும் அதன் காவல்துறை செயல்பாடுகளும் மோடி ஆட்சியைவிட தீவிரமான மதவாத ஆட்சியாகவே செயல்பட்டு வருகிறது.

திராவிடர் கழகம் அவர்களுக்கு சொந்தமான பெரியார் திடலில் விரும்பியவர்கள் தாலியகற்றும், பெண்ணடிமைக்கு எதிரான ஒரு கருத்துப் பரப்புதலை நடத்துவதற்கு முன் வந்தால் அதை தமிழக அரசும் காவல்துறையும் ஏன் தடுக்க வேண்டும்?

இந்த நிகழ்வைக்கூட இப்போது நடத்த வேண்டிய நிலையை உருவாக்கியது யார்? ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சி, ‘சர்வதேச மகளிர் நாளில்’, ‘பெண்களுக்கு தாலி வேண்டுமா?’ என்ற ஒரு விவாத நிகழ்ச்சியை ஒளிபரப்பவிருந்தது. அதை ஒளிபரப்புவதற்கே எதிர்ப்பு தெரிவித்து ‘வெடிகுண்டு’களை வீசக் கிளம்பியது ஒரு கூட்டம். அதன் காரணமாக நிகழ்ச்சி ஒளிபரப்பாமல் நிறுத்தப்பட்டது.

கணவனுக்கு அடங்கிப்போய் ‘கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்’ என்று ஒரு பெண் வாழ்ந்தாக வேண்டும் என்றும், அதுவே ‘பண்பாடு’ என்றும் கட்டாயப்படுத்துகிற சமூகத்தில் பெண்களுக்கான நீதியையும் சமத்துவத்தையும் கோரும் உரிமைகளின் வெளிப்பாடுதான் ‘தாலி வேண்டாம்’ என்பது. இந்தக் கருத்தை மக்களிடம் எடுத்துச் சொல்வதற்கோ, விரும்புகிறவர்கள் பின்பற்று வதற்கோ உரிமைகள் கிடையாது என்று சட்டத்தைக் காட்டி அச்சுறுத்துவது என்ன நியாயம்?

தமிழ்நாட்டில் வாழும் ‘இந்துக்கள்’ அனைவருக்கும் தாங்களே பாதுகாவலர்கள் என்று அறிவித்துக் கொண்டு வெகுசில ‘மதவெறி சக்திகள்’ மிரட்டுகின்றன. அதற்கு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியும், அதன் காவல்துறையும் துணை போகிறது.

திராவிடர் கழகம் தொடர்ந்த வழக்கில், உயர்நீதிமன்ற நீதிபதி டி.அரிபரந்தாமன் வழங்கிய தீர்ப்பு மிகச் சரியானது!

தாலியை விரும்பாதவர்கள், அதை நீக்கிக் கொள்வது அவர்களுக்கான உரிமை என்ற கருத்துரிமைக் கண்ணோட்டத்தில் நிகழ்வுக்கு அனுமதித்தார். இந்த தீர்ப்பை எதிர்த்து அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, அவசர அவசரமாக இரவோடு இரவாக மேல்முறையீடு செய்து இந்த நிகழ்வை தடுத்து நிறுத்திடவே துடித்தது. ‘புதிய தலைமுறை’ தொலைக் காட்சியில் இந்த விவாதத்தை சில வன்முறை சக்திகள் வெடிகுண்டுகளை வீசி தடுத்தது. அதே ‘திருப்பணி’யை அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, ‘காவல்துறை’யை வைத்து தடுக்க முயற்சித்தது.

நீதிபதி டி.அரிபரந்தாமன் தீர்ப்பு வந்தவுடன், தடை ஆணை வராதபோது ‘தாலியகற்றும்’ பெண்ணுரிமைக்கான பரப்புரை நிகழ்வை திராவிடர் கழகம் அமைதியாக பெரியார் திடலில் நடத்தி முடித்தது. காலை 10 மணியளவில் மேல்முறையீட்டில் நீதிமன்றம் தடைவிதித்தவுடன் அனைத்து நிகழ்ச்சிகளையும் உடனே நிறுத்தி விட்டார்கள். இவ்வளவுக்கும் பிறகு, நாட்டு வெடிகுண்டு, கடப்பாறைகளுடன் வன்முறை கும்பலை, பெரியார் திடலுக்குள் – 144 தடை அமுலில் இருக்கும்போது, காவல்துறை அனுமதித்தது ஏன்? பெரியார் திடலுக்குள் இருந்த திராவிடர் கழகத் தொண்டர்கள் தற்காப்புக்காக இதை எதிர்கொள்ள வேண்டிய நிலையை உருவாக்கியதே காவல்துறைதான். இதைப் பயன்படுத்தி, திராவிடர் கழகத் தோழர்கள் மீது தடியடி நடத்தியிருக்கிறார்கள். 10க்கும் மேற்பட்ட தோழர்கள் பிணையில் வெளிவர முடியாத வழக்குகளில் சிறைபடுத்தப்பட்டிருக் கிறார்கள். சமூகத்தில் பெண்களின் அடிமைத்தனத்துக்கு எதிராக ஒரு கருத்துப் பரப்புதலை நடத்துவதற்காக இவ்வளவு ‘தண்டனை’யை அனுபவிக்கத்தான் வேண்டுமா?

தமிழ்நாட்டில் முதல்வராக இருந்த அறிஞர் அண்ணா, தாலி கட்டாத ‘புரோகிதர்’ இல்லாத திருமணம் செல்லும் என்று சுயமரியாதை திருமண சட்டத்தை நிறைவேற்றினார். கட்சியின் பெயரில் அண்ணாவை வைத்துக் கொண்டு, அண்ணா கொண்டுவந்த சட்டத்துக்கு எதிராகவே ஆட்சி செயல்படுகிறது என்றால், இது அண்ணா வழியில் நடக்கும் கட்சியும் அல்ல; அண்ணாவின் ஆட்சியும் அல்ல! அண்ணாவுக்கு துரோகம் செய்யும் ஆட்சி!

வரலாற்றில் அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வாழ்க்கையாக ஏற்றுக்கொண்டு, பரிதவித்த சமுதாயம், பெண்கள் சமுதாயம். கணவன் இறந்த தீயில் போட்டு மனைவியைக் கொளுத்தினார்கள். கணவன் இறந்த பிறகு, அவன் கட்டிய தாலியை அறுத்து, மொட்டை அடித்து, வளையல்களை உடைத்து, ‘முண்டச்சி’ என்று மூலையில் தள்ளி, குடும்பத்தாலே புறந்தள்ளப் பட்டார்கள். பெண் குழந்தை பிறந்தாலே பாவம் என்று அன்றும் இன்றும் கருவிலேயே அழிக்கிறார்கள். சொத்துரிமை மறுக்கப்பட்டது; படிப்புரிமை பறிக்கப்பட்டது.

இவையெல்லாம் அன்றைக்கு ‘மதம், பண்பாடு, பழக்க வழக்கம்’ என்ற பெயரால் திணிக்கப்பட்ட கொடுமைகள். இந்த அவலங்களுக்கு எதிராகக் கடுமையான போராட்டங்கள் நடந்த பிறகுதான் தடை சட்டங்கள் வந்தன. இந்தப் போராட்டங்களின் நீட்சிதான் ‘தாலி அகற்றும்’ நிகழ்வு.

‘மக்களின் முதல்வர்’ என்று அ.இ.அ.தி.மு.க.வினால் அழைக்கப்படும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா – ஒரு பெண். அவரது ஆட்சியில் பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதே குற்றமா? அதற்குப் பரிசு அடக்குமுறையா?

தமிழகத்தில் கருத்துரிமைக்கு எதிரான பார்ப்பன பாசிசம் காலூன்றத் தொடங்குவதும் அதற்கு ஆளும் கட்சியும் காவல்துறையும் துணை போவதும் தமிழகத்தை பின்னோக்கி இழுத்துச் செல்லும் ஆபத்தாகும். இந்த அடக்கு முறைகளுக்கு எதிராக மனித உரிமை, கருத்துரிமை, சமூக மாற்றம் மற்றும் பெண்ணுரிமைக்காக செயல்படும் இயக்கங்களும் ஜனநாயக சக்திகளும் வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்க முன்வரவேண்டும் என்ற திராவிடர் விடுதலைக் கழக சார்பில் வலியுறுத்துகிறோம்.

# கோல்வாக்கர் கருத்தை நகல் எடுத்து வழங்குவார்களா?

பெருமாள் முருகன் எழுதிய ‘மாதொரு பாகன்’ நாவல், திருச் செங்கோடு பெண்களின் ‘ஒழுக்கத் துக்கே’ சவால் விடுகிறது என்று கோவை ஈஸ்வரன் போன்ற கொங்கு வேளாள கவுண்டர் ஜாதித் தலைவர்கள், ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு, நாவலை முடக்கி, பெருமாள் முருகன் என்ற எழுத்தாளரையும் முடக்கி, மன்னிப்புக் கேட்கச் செய்தனர். குழந்தை இல்லாத மனைவி, திருச் செங்கோடு தேர்த் திருவிழாவில் வேறு இளைஞருடன் உறவு கொண்டு குழந்தைப் பெறும் வழக்கம் இருந்தது என்ற தொன்மக் கதையை முன் வைத்து எழுதப்பட்ட நாவல் இது. ஜாதி வெறியர்களின் இந்த மிரட்டலுக்கு இராம கோபாலன் போன்ற ‘சங்பரிவார்’ பார்ப்பனர்களும் சேர்ந்து கொண்டு இப்பிரச்சினையை ஊதிவிட்டனர். கேரளாவில் நம்பூதிரிப் பார்ப்பனர் களோடு உறவு கொண்டு ஏனைய ஜாதியினர் குழந்தைப் பெற்றுக் கொள்வதை பெருமையாகவே கருதினர். அப்படி ஒரு பழக்கம் - அங்கே நடைமுறையில் இருந்ததை அம்பேத்கரே எடுத்துக்காட்டி எழுதியிருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு தலைவராகவும் தத்துவ வழிகாட்டியாகவும் இருந்த கோல்வாக்கரே இதை உறுதி செய்திருப்பதோடு, அதை ஆதரித்தும் எழுதியுள்ள ஆவணம் ஒன்று கிடைத்திருக்கிறது.

குஜராத் பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் துறை மாணவர் களிடம் 1960 டிசம்பர் 7ஆம் தேதி கோல்வாக்கர் ஆற்றிய உரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

“இன்று கலப்பினங்களை உருவாக்கும் சோதனைகள் விலங்கு களின் மீதுதான் செய்யப்படுகின்றன. அத்தகைய சோதனைகளை மனிதர்கள் மீது செய்து பார்க்கும் துணிவு, நவீன விஞ்ஞானிகள் என்று சொல்லப்படுவோருக்குக்கூட இல்லை. இன்று மனிதர்களிடையே கலப்பினத்தை நாம் காண்கிறோம் என்றால், அது அறிவியல் சோதனையால் ஏற்பட்ட விளைவு அல்ல; கீழ்த்தரமான காமத்தின் விளைவு. இந்த விசயத்தில் நமது முன்னோர்கள் செய்திருக்கும் சோதனைகளைப் பார்ப்போம். கலப்பின சேர்க்கை வழியாக மனித இனத்தை மேம்படுத்தும் பொருட்டு வடநாட்டைச் சார்ந்த நம்பூதிரி ‘பிராமணர்கள்’ கேரளத்தில் குடிய மர்த்தப்பட்டார்கள். நம்பூதிரி குடும் பத்தின் முதல் மகன் வைசிய, சத்திரிய அல்லது சூத்திரப் பெண்ணைத்தான் மணக்க வேண்டும் என்ற விதி அன்று உருவாக்கப்பட்டது. இதைவிடத் துணிவான மற்றொரு விதி என்ன வென்றால் எந்த வர்க்கத்தைச் (ஜாதியை) சார்ந்த திருமணமான பெண்ணாக இருந்தாலும் அவளுடைய முதல் பிள்ளைக்கு ஒரு நம்பூதிரிதான் தகப்பனாக இருக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் அவனுடைய கணவன் வழியாக அவள், மற்ற பிள்ளைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி இருந்தது. இன்றைக்கு இந்தப் பரிசோதனையை ஒழுக்கக்கேடு என்று கூறுவார்கள். **இந்த விதி முதல் குழந்தைக்கு மட்டும்தான் என்பதால், அதனை ஒழுக்கக் கேடு என்று கூற முடியாது”** (எம்.எஸ். கோல்வாக்கர், ‘ஆர்கனைசர்’ ஏடு, ஜன.2, 1961, பக்.5)

(2004ஆம் ஆண்டு கோல் வாக்கரின் எழுத்துகளை 12 தொகுதி களாக வெளியிட்ட ஆர்.எஸ்.எஸ்., 5ஆவது தொகுதியில் 28-32 பக்கங் களில் இடம்பெற்றுள்ள உரை யிலிருந்து மேற்கண்ட வரிகளை நீக்கிவிட்டது. ஆனால், நூலகங் களில் பாதுகாக்கப்பட்டுள்ள ஆர்.எஸ்.எஸ்சின் அதிகாரபூர்வ வார ஏடான ‘ஆர்கனைசரில்’ இப்பகுதி இடம் பெற்றுள்ளது) - தகவல்: ‘புதிய ஜனநாயகம்’, பிப்.2015

கோல்வாக்கர் கூறும் இந்த இழிவான மரபுகளை எதிர்த்துத்தான் பெரியார் போராடினார். பெரியார் இயக்கத்தை சாடிக் கொண்டு, பா.ஜ.க.வுடன் கைகோர்க்கும் கொங்கு வேளாளர் சங்கம் உள்ளிட்ட ஆதிக்க ஜாதி சங்கங்கள், கோல்வாக்கரின் இந்தக் கருத்தையும் - பெருமாள் முருகன் நாவலில் ஒரு பகுதியை நகல் எடுத்து வழங்கியது போல் நகல் எடுத்து, திருச்செங்கோடு மக்களிடம் விநியோகிப்பார்களா? அப்போது திருச்செங்கோடு மக்கள் தம்மை இழிவுபடுத்துவது, ‘கோல் வாக்கர்’ பார்ப்பன மரபா? அல்லது அதை எதிர்த்துப் போராடிய பெரியார் இயக்கமா என்பதை தீர்மானிக்கட்டும்!

# நாகூர் அனீபா முடிவெய்தினார்

திராவிடர் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, தி.மு.க. மேடைகளில் தனது வெண்கலக் குரலால் இதயத்தை வருடும் இசைகளில் பாடல்களைப் பாடிய நாகூர் அனீபா, தனது 96ஆவது வயதில் முடிவெய்தினார். திராவிடர் என்ற அடையாளச் சொல் - இஸ்லாமியர்கள் உள்ளிட்ட அனைத்துப் பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட பிரிவினரையும் உள்ளடக்கியதோடு, வெகுமக்களுக்கான விரிந்த மேடையை உருவாக்கியது. பார்ப்பன மதவெறி சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சிகள் தலையெடுக்காமல் கட்டுக்குள் வைத்ததோடு, இஸ்லாமிய சமூகத்தை அரவணைத்தது. அதன் வெளிப்பாடாகத்தான் 1950களிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டு மேடைகளில் இசை முரசு அனிபாவின் இசையும் இஸ்லாமிய தி.மு.க. தோழர்களின் உரையும் ஒலித்துக் கொண்டிருந்தன.

திருப்பூர் மொய்தின், சிபி. சிற்றரசு இருவரும் இரட்டையர்களாக தி.மு.க. பரப்புரைக் கூட்டங்களில் தமிழகம் முழுதும் வலம் வந்தனர். அந்த பாரம்பர்யத்தின் அடையாளமாக இறுதிவரை வாழ்ந்தவர் நாகூர் அனீபா. அவர் முடிவெய்தினாலும் மேடைகளில் அவர் குரலெடுத்துப் பாடிய திராவிடர் இன உணர்வுப் பாடல்கள் என்றென்றும் அவர் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கும்.

# தென் மாவட்டங்களில் ஜாதிவெறி: துணைபோகும் காவல்துறை

***தென் மாவட்டங்களில் ஜாதி வெறி தலைதூக்கி ஆடுகிறது; கொலைகள் தொடர் கதையாகின்றன. காவல்துறையில் அந்தந்த பகுதி ஆதிக்க ஜாதியினரை அதிகாரிகளாக நியமிக்கக் கூடாது என்று திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கழகத்தின் கருத்தை உறுதி செய்து, காவல்துறையே ஜாதி உணர்வோடு செயல்படுவதை விளக்குகிறது இக்கட்டுரை.***

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்கள் மறுபடியும் இரத்தச் சகதியில் மிதக்கின்றன. கடந்த ஏழு மாதங்களில் நெல்லை மாவட்டத்தில் மட்டும் நடந்திருக்கும் கொலைகளின் எண்ணிக்கை 100; தூத்துக்குடியில் 70. ஒவ்வொரு நாளும் கொலையோடு தான் விடிகிறது. தென் தமிழக மாவட்டங்களில் பதற்ற நிலை பரவிக் கொண்டிருக்கிறது.

நடந்திருக்கும் கொலைகளில் சரி பாதிக்குக் காரணம்... ஜாதி. ஆனால், அந்தக் காரணங்கள் அனைத்தும் மிக அற்பமானவை. நாங்குநேரி அருகே இருக்கிறது பானாங்குளம், கரந்தநேரி ஆகிய இரு கிராமங்கள். கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பானாங்குளத்தைச் சேர்ந்த இரண்டு பேர் டி.வி. பழுதுபார்க்க கரந்தநேரிக்குச் சென்றுள்ளனர். இருவரும் இரு சக்கர வாகனத்தில் வேகமாகச் சென்றதாகவும், கரந்தநேரியைச் சேர்ந்தவர்கள் இதைக் கண்டித்ததாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக எழுந்த வாய்த் தகராறு, அடிதடியானது. இரு ஊர்களிலும் வசிப்பது வேறு வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால், இந்தச் சில்லறைத் தகராறு, ஊர்ப் பகையாக மூண்டது. விளைவு... பானாங்குளத்தைச் சேர்ந்த கும்பல் ஒன்று, ஊர் எல்லையில் உள்ள இரயில்வே கேட் ஓரத்தில் மறைந்து கொண்டு, கரந்தநேரியைச் சேர்ந்த யார் அந்தப் பக்கமாக வந்தாலும் வெட்டியது. வேல்சாமி என்கிற கட்டடத் தொழிலாளி கொடூரமாக வெட்டிக் கொல்லப் பட்டார். இரவில் வண்டியில் வீடு திரும்பிய ஜெயப் பிரகாஷை வளைத்துப் பிடித்து வெட்ட, இரத்தம் சொட்டியபடி அவர் தப்பி ஓடினார். கணேசன் என்பவர் வெட்டப்பட்டு கீழே சரிய, அடுத்து வந்த மாரிக்கனி என்பவரைக் கழுத்தை அறுத்துக் கொன்றது அந்தக் கும்பல். அடுத்த நாள் அவரது தலை இல்லாத உடல் ஓர் இடத்திலும், தலை வேறு ஓர் இடத்திலும் கண்டறியப்பட்டன. இப்படியாக இரண்டு பேர் உயிரைப் பறித்து, இரண்டு பேரைக் குற்றுயிராகப் போட்டுச் சென்றார்கள். சில வாரங்கள் கழித்து, இதற்குப் பழிக்குப் பழியாக, பானாங்குளத்தைச் சேர்ந்த கொம்பையா என்பவரின் உணவு விடுதியைச் சூறையாடி, அவரை வெட்டிப் போட்டு விட்டுச் சென்றது ஒரு கும்பல்.

வள்ளியூர் பக்கம் நம்பியான் விளைக்காரர் டேவிட் ராஜா, ஒரு பொறியியல் மாணவர். பைக்கில் கல்லூரிக்குச் சென்ற இவரை, பின்னாலேயே இரண்டு வண்டிகளில் துரத்திச் சென்ற கும்பல் வழி மறித்து நிறுத்தி வெட்டிக் கொன்றது. ஏழு பேர் இந்த விவகாரத்தில் சரண் அடைந்தனர். அவர்கள் கொடுத்த வாக்குமூலம் பயங்கரம். “பள்ளியில் படிக்கும் போதிருந்தே எங்களுக்குள் பிரச்சினை. டேவிட் ராஜா நண்பர்களுக்கும் எங்களுக்கும் அடிக்கடி சண்டை வரும். டேவிட் ராஜா எங்கள் பகுதிக்கு வந்து எங்கள் ஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை சைட் அடித்தார். இது எங்களுக்குப் பிடிக்கவில்லை. அவரை எச்சரித்த போது, அவரும் அவரது நண்பர்களும் சேர்ந்து எங்களை அடித்து உதைத்தனர். இதற்குப் பழி வாங்குவதற்காகத்தான் கொலை செய்தோம்” என்பது அவர்களின் வாக்குமூலத்தின் சாரம். பள்ளிக்கூட தகராறு படுகொலை வரை போயிருக்கிறது.

உண்மையில் இப்போது நெல்லை, தூத்துக்குடி பகுதியில் நடந்து கொண்டிருப்பவை ‘நம்பர் கொலைகள்’. யார் பக்கம் அதிகம் உயிர்ச்சேதம் ஆகிறது என்பதுதான் போட்டி. கொலை செய்பவர்களுக்கும் கொலை செய்யப்படுபவர்களுக்கும் எந்தவிதமான முன்விரோதமோ, முன் அறிமுகமோ கிடையாது. பெயர்கூடத் தெரியாது. குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்தவர்; குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர் என்ற காரணங்களே, கொலை செய்வதற்குப் போதும்.

நாங்குநேரி அருகே ஆடு மேய்க்கும் பெரியவரைக் கொலை செய்தது இப்படித்தான். இப்போது இந்தப் பகுதி கிராம மக்கள், வெளியில் நடமாடுவதற்கே அஞ்சும் அளவுக்குப் பதற்றமான சூழல். பானாங்குளத்திலும் கரந்தநேரியிலும் 10ஆம் வகுப்பு மாணவர்கள் போலீஸ் பாதுகாப்புடன்தான் தேர்வு எழுதுகின்றனர். திருமணங்கள், போலீஸ் பாதுகாப்புடன்தான் நடைபெறுகின்றன.

**காரணமற்ற கொலைகள்!**

சாத்தான்குளத்தைச் சேர்ந்த இளங்கோவன் என்கிற 56 வயது பெரியவர், ஏதோ வேலையாக தூத்துக்குடிக்கு வந்திருக்கிறார். தாகமாக இருக்கிறதே என ஒரு வீட்டின் கதவைத் தட்டி, தண்ணீர் கேட்டிருக்கிறார். அவரை திருடன் என நினைத்து வீட்டில் உள்ளவர்கள் அடிக்க, மயங்கிச் சரிந்து மரணம் அடைந்தார். தாகத்துக்குத் தண்ணீர் கேட்டது ஒரு குற்றமா? திருடன் என நினைத்து அடித்தாலும்கூட சாகும் அளவுக்கா அடிப்பார்கள்? அந்தப் பெரியவருக்கும் அடித்தவர்களுக்குமான அறிமுகம் சில நிமிடங்கள்கூட இருக்காது. அவர்களால் இவரது உயிர் பறிக்கப்பட்டுவிட்டது. இதைவிடக் கொடூரமானது கீழே உள்ள சம்பவம்.

சங்கரன்கோயில் அருகே உள்ள அழகனேரியைச் சேர்ந்தவர் செல்வா. 25 வயது இளைஞரான இவர், தனியார் பேருந்து ஒன்றின் நடத்துனர். கங்கைகொண்டான் பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டு திருநெல்வேலி நோக்கி பேருந்து புறப்பட்டது. அங்கு ஏறிய நான்கு பேர் குடிபோதையில், பேருந்தின் படியில் தொங்கிக் கொண்டு வந்தனர். ‘போதையில் கீழே விழுந்து செத்துத் தொலைத்தால், நம்ம உயிரை எடுப்பார்களே’ என நினைத்த செல்வா, அவர்களை உள்ளே வருமாறு எச்சரித்தார். அவர்கள் மறுக்க, பேருந்தை நிறுத்தி, நான்கு பேரையும் இறக்கிவிட்டு விட்டுக் கிளம்பினார். இறங்கிய நான்கு பேரும் வெறிகொண்ட நிலையில் அருகில் இருந்த பெட்ரோல் பங்கில் சென்று பாட்டில் நிறைய பெட்ரோல் வாங்கினார்கள். ஒரு ஆட்டோவைப் பிடித்து பாயைங்கோட்டை பேருந்து நிலையத்துக்குச் சென்றார்கள். அங்கு நடத்துனர் செல்வா, பயணிகளை இறக்கிவிட்டு அடுத்த ட்ரிப் செல்வதற்காக நின்று கொண்டிருந்தார். அவர் மீது பெட்ரோலை ஊற்றி தீ வைத்தனர். பட்டப்பகலில், ஒரு பேருந்து நிலையத்தின் மையத்தில் உடல் எங்கும் தீ பற்றித் துடித்துக் கதறினார் செல்வா. அருகில் இருந்த கடைக்காரர்கள் தண்ணீர் ஊற்றி அணைத்தனர் என்றாலும் அவரது உடலின் முக்கால்வாசி பகுதி எரிந்துவிட்டது.

இப்படி, இதற்குத்தான் என கணக்கு வழக்கு ஏதும் இல்லாமல், கொலைகள் விழுகின்றன. இப்படி கொலைகள் செய்வோரை, ஊரும் உறவுகளும் கைவிடுவதும் இல்லை; பழிச்சொல் கூறுவதும் இல்லை. மாறாக, அரவணைக்கின்றனர்; பாதுகாக்கின்றனர். பல கொலைகளில் சம்பந்தப்பட்ட ஜாதிச் சங்கத் தலைவர்கள் உடனடியாக நேரில் வந்து ஆறுதல் சொல்வதன் பெயரால், தூபம் போடுகின்றனர். குற்றவாளிகளைக் காவல் துறையிடம் இருந்து பாதுகாக்கின்றனர்.

**காவல்துறை என்ன செய்கிறது?**

எஸ்.பி.யை மாற்றுவது, ஏட்டய்யாவை மாற்றுவது என காவல்துறை தன்னால் முடிந்ததை செய்துதான் பார்க்கிறது. ஆனால், கொலைகள் குறைந்தபாடு இல்லை.

**“பல கொலைகளுக்கு காவல் துறைதான் உடந்தையாக இருக்கிறது. கொலையாளி தன் ஜாதியைச் சேர்ந்தவன் என்றால், பாதுகாக்கிறது. இந்தப் பகுதியின் காவல் நிலையங்களில் அதிகபட்சம் இருப்பது பெரும்பான்மை ஜாதியைச் சேர்ந்த போலீஸார்தான். அவர்கள் காக்கிச் சட்டை அணிந்திருந்தாலும், உள்ளே ஜாதி வெறியர்களாகவே இருக்கிறார்கள் அல்லது ஜாதி வெறியர்களுக்கு சல்யூட் அடிக்கிறார்கள். மேல்நிலை அதிகாரிகளை அடிக்கடி டிரான்ஸ்ஃபர் செய்வதைப் போல, அடிமட்ட காவலர்களையும் அடிக்கடி டிரான்ஸ்பர் செய்ய வேண்டும். அப்போதுதான் இது குறையும்”** என்கிறார், மனித உரிமை மீறல்கள் குறித்த இலவசச் சட்ட உதவி மையத்தின் அமைப்பாளரான வழக்குரைஞர் கிரிநிவாச பிரசாத்.

ஓர் ஊரில் ஜாதிப் பிரச்சினை நடக்கிறது என்றால், சம்பந்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த அதிகாரியையே அங்கே அனுப்பி நிலைமையைச் சமாளிப்பதை ஒரு டெக்னிக்காக காவல்துறை பின்பற்றுகிறது. முள்ளை முள்ளாலேயே எடுக்கிறார்களாம். சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் சாதிப் பற்றைப் பயன் படுத்திக் கொள்ளும் இந்தப் போக்கு, அந்த நேரத்துப் பதற்றத்தைத் தற்காலிகமாகத் தணிக்கலாம். ஆனால், அது ஊரின் ஜாதிப் பகையை இன்னும் இன்னும் இறுக்கமாக்கி, மேலும் மோசமாக்கவே உதவும்.

**கையில் கட்டும் கயிறு கூறும் ஜாதி அடையாளம்**

மின்சாரக் கம்பத்தில் அவரவர் ஜாதிக் கட்சியின் நிறத்தை வரைந்து வைக்கிறார்கள். அதில் அடுத்த தெரு நாய் சிறுநீர் கழித்தாலே, விவகாரமாகி தகராறு, கைகலப்பு, கத்திக்குத்து, பள்ளி, கல்லூரி மாணவர்கள் பேஸ்புக்கில் தன் ஜாதிக்கு எனத் தனித்தனி குழுக்கள் தொடங்கி, அதில் ‘ஆண்ட பரம்பரை’ பெருமை பேசுகிறார்கள். மற்ற ஜாதியினருக்குச் சவால் விடுகின்றனர். பள்ளிகளுக்கு தன் ஜாதிக் கட்சியின் நிறத்தில் கயிறு அணிந்து செல்கிறார்கள் மாணவர்கள். கையில் இன்ன நிறக் கயிறு அணிந்தால், அவன் இன்ன ஜாதிக்காரப் பையன் என அடையாளமாம். அரசியல் ஆட்கள், அவரவர் தலைவர்/தலைவியின் படத்தை சட்டை பாக்கெட்டில் வைத்துக்கொள்வதுபோல, இது ஓர் அடையாளம்.

“பயங்கர விளைவுகளை, விபரீதங்களை உண்டாக்கும் ஜாதி உணர்வு, இப்படி பள்ளி, கல்லூரிகளிலேயே வளர்க்கப்படுவது வேதனையானது. சில ஆசிரியர்கள் அவர்கள் செய்யும் தவறுக்காகத் தண்டிக்கப்படும்போது, மாணவர்களை ஜாதிய ரீதியில் தூண்டிவிட்டுத் தப்பிக்க முயற்சிக்கிறார்கள். ஜாதி அடிப்படையில் அணி திரளும் மாணவர்களை ஜாதிய அமைப்புகள் எளிதாகக் கையில் எடுத்துக் கொள்கின்றன. “அவ்வளவு பெரிய தலைவர் தன்னிடம் நெருக்கமாக இருக்கிறாரே” என்கிற மனநிலையில் மாணவர்கள் இதை ஒரு ஹீரோயிசமாக கருதிக் கொள்கின்றனர்” என்கிறார் வழக்குரைஞர் பிரம்மா.

வீட்டின் நல்லது - கெட்டதுக்கு உள்ளூர் கேபிள் டி.வி.யில் விளம்பரம் தந்தால், அதில், தன் ஜாதியின் பெருமையைப் பேசும் சினிமா பாடலை ஒளிபரப்புகின்றனர். ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு பாடல் தேசிய கீதம்போல இருக்கிறது. அதேபோல ஒவ்வொரு ஜாதியினரும் தங்கள் வீட்டின் காதுகுத்து, திருமணத்துக்கு போஸ்டர் அடிக்கும்போது, தன் ஜாதியை சார்ந்த நடிகரின் புகைப்படத்தைத் தவறாமல் அதில் அச்சிடுகின்றனர். இவர்கள் அச்சடிப்பதைப் பார்த்துதான், இன்ன நடிகர் இன்ன ஜாதியைச் சேர்ந்தவர் என்பதே நமக்கு தெரிய வரும். அந்த அளவுக்கு எல்லாவற்றிலும் கண்ணும் கருத்துமாக ஜாதி பார்க்கின்றனர்.

**நன்றி: ‘ஆனந்தவிகடன்’ 1.4.2015**

## ‘மதமற்றவர்கள்’ அதிகமாவார்கள்

உலகில் 2050ஆம் ஆண்டில் எந்த மதத்திலும் நம்பிக்கையில்லாதவர்கள் மக்கள் தொகை அடிப்படையில் இரண்டாவது இடத்தில் இருப்பார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவில் ‘வீப் ஆய்வு மய்யம்’ என்ற அமைப்பு கடந்த வாரம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2050இல் உலகிலேயே முஸ்லீம்கள் அதிகம் வாழும் நாடாக இந்தியா மாறும்; இந்தோனேசியா இரண்டாவது இடத்துக்குப் போகும். உலகம் முழுதும் வாழும் ‘இந்து’கள் எண்ணிக்கை உலக மக்கள் தொகையில் 34 சதவீதமாக அதிகரித்து, மூன்றாவது (14.9 சதவீதம்) இடத்துக்கு வரும். அடுத்த இடம், மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் (13.2 சதவீதம்) இருப்பார்கள் என்று அந்த ஆய்வு கூறுகிறது. இப்போது உலக அளவில் முஸ்லிம் அதிகமாக வாழும் நாடாக இந்தோனேசியாவும் இரண்டாவது இடத்தில் இந்தியாவும் இருக்கிறது. ஆனால், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு முஸ்லிம்கூட இல்லை.

DATE OF PUBLICATION 16.04.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# பெரியார் பெயருடன் ஜாதியை இணைப்பதா? கொளத்தூர் மணி கடும் கண்டனம்

“10ம் வகுப்பு தேர்வு வினாத் தாளில் பெரியார் பெயருடன் ஜாதிப் பெயரை இணைத்ததற்கு திராவிடர் விடுதலைக் கழகம் கடும் கண்டனம்.” இது குறித்து கழக தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டுள்ள அறிக்கை:

10-04-2015 அன்று நடந்த பத்தாம் வகுப்புக்கான பொதுத் தேர்வு நடைபெற்றது. அதில் சமூக அறிவியல் பாட வினாத் தாளில் 4 ஆவது கேள்வி, தமிழ்நாட்டின் தலைசிறந்த சமுதாய சீர்திருத்தவாதி பற்றியதாக உள்ளது. அதில் நான்கு தலைவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தலைவர்களில் ஒருவராய் உள்ள பெரியாரைக் குறிப்பிடும்போது, “ஈ.வே.ராமசாமி நாயக்கர்” என்று குறிப்பிடப்பட்டுள்ளதை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஜாதிப்பெயரை விகுதியாகப் போடும் போக்கு இருந்த 1927ஆம் ஆண்டின் இறுதியிலேயே ஜாதி விகுதியை நீக்கி, தன் பெயரை ஈ.வெ. இராமசாமி என தனது ஏட்டில் வெளியிட்டவர். தான் நடத்திய சுயமரியாதை மாநாடுகளில் ஜாதிப் பின்னொட்டை அகற்றுமாறு தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றியவர். அதனால்தான் இன்றைய தமிழ்நாட்டின் ஜாதிச் சங்கத் தலைவர்கள்கூட தங்கள் பெயருக்குப் பின்னால் ஜாதியப் பட்டத்தைக் கைவிட்டவர்களாக உள்ளனர். அதுவுமின்றி தமிழகத்தின் பாமர மக்களும்கூட அவரைப் பெரியார் என்ற பெயராலேயே அறிவர்.

பார்ப்பனர்களின் ஏடான ‘தி இந்து’ போன்ற சில ஆங்கில ஏடுகளும், தமிழ் பாசிசவாதிகள் சிலரும் மட்டுமே ‘பெரியாரை இராமசாமி நாயக்கர் என்று வலிந்து எழுதி வருகின்றனர்.

இவ்வாறான சூழலில் தமிழக அரசின் கல்வித்துறை நடத்தும் ஒரு பொதுத் தேர்வு வினாத்தாளிலேயே பெரியாரை “ஈ.வே.ராமசாமி நாயக்கர்” என்று குறிப்பிட்டுள்ளமை கடும் கண்டனத்துக்குரிய ஒன்றாகும்.

வினாத்தாள் தயாரித்தவர், தமிழ் நாட்டின் பொதுப்போக்குக்கு எதிராக தனது தனிப்பட்ட கொள்கையைத் திணிக்கும் திமிர்ப்போக்காகவே இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

தமிழக அரசும், குறிப்பாக கல்வி அமைச்சரும், கல்வித்துறை இயக்கு நரும் விரைந்து செயல்பட்டு இச் செயல்களுக்குக் காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அச்செயலுக்கு காரணமானவர் பெயரை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் எனவும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்!

## 20 தமிழர் படுகொலை: திருப்பூரில் கழகம் முற்றுகைப் போராட்டம்

20 தமிழர்களை படுகொலை செய்த ஆந்திர அரசை கண்டித்து ஆந்திரா வங்கியில் 13.04.2015 அன்று மதியம் முற்றுகையிடப்பட்டது. முற்றுகைப் போராட்டத்தை ஒட்டி ஏராளமான காவல்துறையினர் திருப்பூர் டவுன்ஹால் பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர். காவல்துறையின் கெடுபிடிகளை மீறி முற்றுகையிட முயன்ற 60 மேற்பட்ட தோழர்களை காவல்துறை கைது செய்தது.

இம்முற்றுகையில் திராவிடர் விடுதலைக் கழகம், விடுதலை சிறுத்தைகள், எஸ்.டி.பி.ஐ., இயற்கை வாழ்வகம் அமைப்பு, நேர்மை மக்கள் இயக்கம், திருவள்ளுவர் பேரவை, திருப்பூர் இணையதள நண்பர்கள் ஆகிய அமைப்புகளின் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## பசுவதை: காஞ்சி சங்கராச்சாரி ஆதரவு

பா.ஜ.க. ஆட்சிகள் பசுவை வெட்டுவதற்கு தடைச் சட்டங்கள் போட்டு வருகின்றன. பசு இந்துக்களின் புனித தெய்வம் என்கிறார்கள். இதுகுறித்து விரிவான கட்டுரையை கடந்த வாரம் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வெளியிடப்பட்டிருந்தது. ஆரியப் பார்ப்பனர்கள் யாகங்களில் பசுவை பலி கொடுத்ததை வேதங்கள் கூறுகின்றன. இப்போதும் யாகங்களில் பசுக்கள் கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றன. ஆனால், பலியிடப்படுவது இல்லை. அண்மையில் ஜெயலலிதா, ஊழல் வழக்கிலிருந்து விடுதலை பெற புதுக்கோட்டை மாவட்டங்களில் அ.தி.மு.க.வினர் 108 பார்ப்பனர்களைக் கொண்டு நடத்திய யாகத்தில் ‘பசு மாடுகள்’ கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருந்தன. இறந்து போன காஞ்சி சங்கராச்சாரியே பசுக்களை பலியிடுவதில் தவறு இல்லை என்று கூறியிருக்கிறார். ‘தெய்வத்தின் குரல்’ என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள அவரது கருத்துகளடங்கிய நூலில் அவர் இவ்வாறு கூறுகிறார்:

> “தர்மத்துக்காகச் செய்ய வேண்டியது எப்படி இருந்தாலும் பண்ண வேண்டும். ஹிம்சை என்றும் பார்க்கக் கூடாது. யுத்தத்தில் சத்ருவதம் பண்ணுவதை சஹல ராஜ நீதிப் புத்தகங்களும் ஒப்புக் கொள்ளவில்லையா? அப்படி பசு ஹோமம் பண்ணுவதிலே தப்பே இல்லை.”
>
> “பிராமணர்கள் செய்வதில் மிகவும் உயர்ந்ததான வாஜபேயத்துக்கும் 23 பசுக்களே கொல்லப்படுகின்றன. சக்கரவர்த்திகளே செய்கிற மிகப் பெரிய அசுவமேத யாகத்துக்குக்கூட 100 பசுக்கள் தான் சொல்லியிருக்கிறது.”
>
> (தெய்வத்தின் குரல் இரண்டாம் பகுதி)

இப்படி - காஞ்சி சங்கராச்சாரியே பசுவதையை நியாயப்படுத்துகிறார். சங்பரிவாரங்கள் சங்கராச்சாரியை இந்து விரோதி என்று கூறுவார்களா?

# ஜெயகாந்தனின் புதுமையும் - குழப்பமும்

நவீன தமிழ் இலக்கிய ஆளுமையாக, வாழ்ந்து காட்டிய ஜெயகாந்தன் முடிவெய்தி விட்டார். வாழ்க்கையின் நுட்பமான மனித உணர்வுகளை தனது எழுத்து வன்மையால் கதாபாத்திரங்களாக உலவவிட்ட பெருமை அவருக்கு உண்டு. இன்றைக்கு 50 வயதைக் கடந்தவர்களில் இலக்கிய ஈடுபாடு கொண்ட பெரும்பான்மையோர் அவரது எழுத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள் என்று கூற முடியும். தனது கதாபாத்திரங்களை உரத்தக் குரலில் விவாதிக்க வைத்தார். ‘ஆனந்த விகடனில்’ அவர் 1968இல் எழுதிய ‘அக்னி பரீட்சை’ கதை பலத்த விவாதங்களை எழுப்பியது. அப்பாவிப் பெண், ஒரு பணக்கார இளைஞனால் ஏமாற்றப்பட்டு, பாலியல் உறவுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அந்தப் பெண்ணின் தலையில் தண்ணீரைத் தெளித்து எல்லாம் சரியாகப் போய் விட்டது என்று கூறுகிறார், அவள் தாய். இது நிகழ்வது ஒரு பார்ப்பனக் குடும்பத்தில். ‘கற்பு’ என்ற ‘புனித’த்தை கட்டுடைத்த கதை அது.

கணவன், மனைவி மனப் போராட்டத்தை விவாதிக்கும், “கோகிலா என்ன செய்து விட்டாள்?”, ‘அக்னிப் பிரவேசம்’ சிறுகதையின் தொடர்ச்சியாக எழுதிய ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’ சேரிவாழ் மக்களின் வாழ்க்கையை இயல்பாக அவர்களது மொழியில் ‘கண்ண தாசன்’ இலக்கிய இதழில் அவர் எழுதிய ’சினிமாவுக்கு போன சித்தாளு’, செய்யாத ஒரு திருட்டுக் குற்றத்துக்காக பழி சுமந்து அழும் ஏழை தொழிலாளியின் அவலத்தை விளக்கிடும் ‘யாருக்காக அழுதான்!’

கலைகளின் நோக்கம், தத்துவம் குறித்து விரிவாக விவாதிக்கும் ‘பாரிசுக்குப் போ’ என்று எத்தனையோ பாராட்டுக்குரிய இலக்கியங்களை படைத்தவர் என்ற பெருமை அவருக்கு உண்டு.

அதே நேரத்தில், அவர் குழப் பத்தில் சிக்கித்தவித்த மனிதராகவே மாறிப் போனார் என்பதையும் சுட்டிக் காட்டியாக வேண்டும். இளம்வயதில் கம்யூனிஸ்டாக வாழ்க்கையைத் தொடங்கியவர். பொருள் முதல் வாதத்தையும், ஆன்மீகத்தையும் இணைக்கப்போய், மார்க்சியத்தை வேதாந்தங்களிலும் விவேகானந்தரிலும் தேடத் தொடங்கினார். ‘துக்ளக்’கில் அவர் தொடராக எழுதிய “ஒரு இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள்” தொடரில் இராஜ கோபாலாச்சாரி கொண்டுவந்த குலக் கல்வித் திட்டத்தை நியாயப்படுத்திய தோடு, ‘வர்ணாஸ்ரம’த்துக்கும் அது கட்டமைத்த சமூக அமைப்புக்கும் மகுடம் சூட்டினார். தன்னை ஒரு ‘சூத்திரன் என்று அழைத்துக் கொள்வதில் பெருமைப்படுவதாக அறிவித்துக் கொண்டார். இந்தக் குழப்பங்கள் அவரை பார்ப்பனியத் திடம் கொண்டு போய் சேர்ந்தது.

‘ஜெய ஜெய சங்கரா’வில் காஞ்சி மடத்தின் பெருமைகளை எழுதத் தொடங்கி விட்டார். கம்யூனிஸ்ட்டாக தொடங்கி, பிறகு ஈ.வெ.கி. சம்பத்தின் ‘தமிழ் தேசியத்தில்’ இணைந்து, கடைசியில் காங்கிரசின் தேசியத்தில் அடைக்கலமானார். தீவிர திராவிட இயக்க எதிர்ப்பாளராக அடையாளம் காட்டி, ஒரு கட்டத்தில் ‘சமஸ் கிருதத்தின்’ பெருமைகளைப் பேசினார். பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் அவர் பேசிய கூட்டங்களில் எதிர்கேள்வி கேட்கும் நிலை உருவானது. அவரது இறுதி காலத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர், அவரது மருத்துவத்துக்கு செய்த உதவிகள் காரணமாக அவரை தி.மு.க. தலைமையோடு நெருக்கத்தை ஏற்படுத்தியது. 81 வயது நிறை வாழ்வு வாழ்ந்திருக்கிறார். அவரது மறைவுக்கு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களோடு, இடதுசாரி இயக்கம், பா.ஜ.க., திராவிடர் கழகம், காஞ்சி ஜெயேந்திரன் என்று இரங்கல் அறிக்கைகள் வந்துள்ளன.


“மகா பெரியவரின் சிந்தனை மற்றும் செயல்பாடுகளை நான் கூறிய போது நாத்திகத்தை கைவிட்டு, ஆன்மீகத்தின் பாதையில் எழுத லானார்” என்று காஞ்சி ஜெயேந்திரன், இரங்கல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளலார் போன்ற ஆன்மிக வாதிகள்கூட தங்கள் ஆன்மிகத்துக்கு, சமுதாயக் கண்ணோட்டத்தை அடித் தளமாகக் கொண்டிருந்தபோது, காஞ்சி மடத்தின் பார்ப்பன ஆன்மிகத்துக்குப் பலியாகிப் போனார் ஜெயகாந்தன். இது ஒரு அவலம்தான்! சமூகப் பார்வையை முன்னிறுத்தாமல், தனது சுயஅடையாளப் பெருமைக் குள் சிக்கிக் கொள்வதால் நேரிடும் விபத்துகளே இவை!

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 17th April 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஏப்ரல் 23, 2015 | புரட்சி 14 | முழக்கம் 15 | விலை: ரூ.3.00


## 20 தமிழர்கள் கொடூரக் கொலை: தமிழக அரசு அலட்சியம்

# தலைமைச் செயலகம் முற்றுகை: கைது

20 தமிழர்கள் கொடூரக் கொலையில் தமிழக அரசின் அலட்சியத்தைக் கண்டித்து தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போராட்டம் ஏப்.16 அன்று பகல் 11 மணியளவில் நடந்தது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மீ.த. பாண்டியன் (தமிழ்நாடு மக்கள் கட்சி), வே.பாரதி (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்), செந்தில் (இளந்தமிழகம்), கோ. பாவேந்தன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), சதிஷ் (சி.பி.எம்.எல். மக்கள் விடுதலை), மா.சேகர் (தொழிலாளர் சீரமைப்பு), தெய்வமணி (அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்) ஆகியோர் தலைமையில் அந்தந்த அமைப்புகளைச் சார்ந்த 300 தோழர்கள் இந்த முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்றனர். தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.




போராட்டத்தில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள்:

**தமிழக அரசே!**

- தமிழர் இருபது பேர் படுகொலையில், ஏழு பேர் தமிழக எல்லைக்குள்ளிருந்துதான் ஆந்திர காவல்துறையால் கைது செய்யப்பட்டனர் என்பது வெட்டவெளிச்சமாகியுள்ளது. எனவே, தமிழக அரசு சார்பில் ஆள்கடத்தல், கொலை ஆகிய பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்க. மீண்டும் பிரேதப் பரிசோதனை செய்ய நீதிமன்றத்தில் உடனடியாக முறையிடுக.
- இது குறித்து இந்திய அரசிடம் சி.பி.ஐ. விசாரணை கோருக.
- தமிழக அரசு சார்பில் வழக்குரைஞர்கள், உயரதிகாரிகள் கொண்ட குழு ஆந்திரச் சிறைகளில் அடைபட்டுள்ள ஆயிரக்கணக்கான தமிழர்களின் நிலையையும், அவர்கள் பற்றிய முழு விவரங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கை ஒன்றை வெளியிடுக. இது தொடர்பாக சிறைகளில் வாடும் தமிழர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய ஆந்திர அரசை வலியுறுத்துக.
- செம்மரம் வெட்டுவதற்கென்று அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போனவர்கள் குறித்து வழக்குப் பதிவு செய்து மேல்நடவடிக்கை எடுத்திடுக.
- இருபது தமிழர் படுகொலை தொடர்பாக ஆந்திர அரசைக் கண்டித்தும், இது தொடர்பான கோரிக்கைகளை வலியுறுத்தியும் தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுக.
- தமிழகத்தில் வாழ வழியற்று கூலிக்கு மரம் வெட்ட மாநிலம் விட்டு மாநிலம் செல்லும் நிலைக்குத் தள்ளப்படாதவாறு வடதமிழ்நாட்டுப் பழங்குடியினர் உள்ளிட்ட அடித்தட்டு மக்களின் வாழ்வைச் சீர்செய்ய சிறப்புத் திட்டங்கள் வகுத்து உடனடியாக நடைமுறைப்படுத்துக.

**இந்திய அரசே!**

- இருபது தமிழர் படுகொலை தொடர்பாக ஆந்திர அரசுக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும். இக்கொலை குறித்து சி.பி.ஐ. புலனாய்வுக்கு உடனே ஆணையிடுக.
- செம்மரக் கடத்தல் குறித்தும் இது தொடர்பாக நடந்துள்ள மோதல் கொலைகள் குறித்தும் பொறுப்பில் உள்ள உச்சநீதிமன்ற நீதிபதியைக் கொண்டு முழுமையான நீதி விசாரணை நடத்துக.
- இந்திய அளவில் மோதல் கொலைகள் தொடர்பான தன் நிலைப்பாட்டை தெளிவு படுத்தும் வகையில் வெள்ளை அறிக்கை வெளியிடுக.
- உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், தேசிய மனித உரிமை ஆணையம் ஆகியவைப் பிறப்பித்துள்ள ஆணைகளுக்கு இணங்க மோதல் கொலைகளைத் தடுக்கவும் தண்டிக்கவும் ஒரு தனிச் சட்டமியற்றுக.

என்ற கோரிக்கைகள் போராட்டக் குழு சார்பில் வலியுறுத்தப்பட்டன.

# தமிழக அரசின் அலட்சியம்: கொளத்தூர் மணி கண்டனம்

*முற்றுகைப் போராட்டத்தின் நோக்கம் குறித்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி செய்தியாளர்களிடம் கூறியதாவது:*

ஆந்திராவில் 20 தமிழர்கள் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளதில் தமிழக அரசின் அலட்சியத்தைக் கண்டித்தே இந்த முற்றுகைப் போராட்டத்தை நடத்துகிறோம். திருவண்ணாமலையில் சுட்டுக் கொல்லப்பட்ட 12 பேரில் 10 பேர் உடல்களை நேரில் பார்த்தபோது, உடல் முழுதும் தீக்காயங்களாகவே இருந்தன. கை, கால்கள் வெட்டப்பட்டும், துண்டிக்கப்பட்டும், ஒருவருக்கு இரண்டு கால் வெட்டப்பட்டும், ஒருவரின் ஆண்குறி துண்டிக்கப்பட்டும், ஒருவருக்கு பற்கள் பிடுங்கப்பட்டும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட நிலையில் அந்த உடல்கள் காணப்பட்டன. படுகொலைகளை நியாயப்படுத்தும் ஆந்திர அரசையும் வாய் திறக்காமல் அமைதி காக்கும் மத்திய அரசையும் வன்மையாகக் கண்டித்து, போராட்டங்கள் நடக்கின்றன. அது நியாயமானதுதான். ஆனால், தமிழக அரசு காட்டும் அலட்சியத்தைக் கண்டிக்காமல், ஒதுங்கி நிற்க முடியாது. சடங்குக்காக ஒரு கடிதத்தை மட்டும் பிரதமருக்கு எழுதி, தனது கடமையை முடித்துக் கொண்டுவிட்டது. கண்துடைப்பு நடவடிக்கையாக வேலூரிலிருந்து மஞ்சுநாத் என்ற காவல்துறை அதிகாரியை மட்டும் ஆந்திராவுக்கு தமிழக அரசுஅனுப்பியது. அவர் அங்கே போய் சேருவதற்குள் பிரேதப் பரிசோதனைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டதால் அவர் ஊர் திரும்பி விட்டார்

சென்னை மவுலிவாக்கத்தில் அடுக்குமாடி கட்டிடம் இடிந்து வீழ்ந்தபோது, அதில் உயிரிழந்தவர்கள் ஆந்திர தொழிலாளிகள் என்பதால் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு உடனே அமைச்சர்கள் அதிகாரிகளுடன் தமிழகம் வந்தார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தொழிலாளர்களை நேரில் போய் பார்த்து மருத்துவமனையிலிருந்து அவர்கள் ஊர் திரும்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டுத்தான் திரும்பினார்.

மகாராஷ்டிரத்தில் பீகார் மக்களை வெளியேற்ற வேண்டும் என்று ‘நவநிர்மான் சேனா’ என்ற அமைப்பு, பீகார் ஓட்டுநர்ஒருவரை உயிருடன் எரித்துக் கொன்றவுடன், அம்மாநில முதல்வர் நித்திஷ்குமார், முன்னாள் முதல்வர் லல்லுபிரசாத் ஆகியோர் உடனே பிரதமர் மோடியைச் சந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 தொழிலாளர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார்களா? அல்லது கொலை செய்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்களா? என்பது தெரியாத நிலையில் கொடூரமான இந்தக் கொலை குறித்து எந்த பதைப்பையும் காட்டாத தமிழக அரசை வன்மையாகக் கண்டிருக்கிறோம்” என்றார் கொளத்தூர் மணி.


## பார்ப்பனர்கள் விரிக்கும் சூழ்ச்சி

# "இந்து"க்களின் நண்பர்கள் யார்?

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக அட்டவணைப்படுத்தப்பட்டவர்கள்தான் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர். இவர்கள் அனைவருக்குமே மதத்தின் அடையாளம்'இந்து'தான். விரும்பாதவர்களுக்கும் சட்டம் இந்த மதத்தின் அடையாளத்தையே சுமத்திக் கொண்டிருக்கிறது.

பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை சமுதாயத்தில் நிலைநிறுத்தவே பல்வேறு வழிபாடு, பழக்க வழக்கம், மரபுகளைக் கொண்டிருந்த வெகு மக்கள் மீது தங்களின் வேத மரபுகளை திணிக்க சூழ்ச்சிகரமாக திட்டமிட்டார்கள். பல்வேறு நம்பிக்கைகள், பண்பாடுகள் கொண்ட மக்களை 'இந்து' என்ற ஒற்றை அடையாளத்துக்குள் பிரிட்டிஷ்காரன், நிர்வாக வசதிக்காக அடைக்க முற்பட்டபோது, பார்ப்பனர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். காஞ்சிபுரம் சங்கராச்சாரி, 'வெள்ளைக்காரனால் நாம் தப்பித்தோம்' என்று வெளிப்படையாகவே எழுதினார். அதற்குப் பிறகு, வேத மதக் கருத்துகளே 'இந்து' மதக் கருத்து என்றார்கள் பார்ப்பனர்கள்.

அந்த நாளிலிருந்து பார்ப்பன வேத மதத்துக்குள் திணிக்கப்பட்ட வெகுமக்கள் உரிமைக்கான போராட்டம், பார்ப்பன அதிகாரத்துக்கு எதிராக தொடங்கிவிட்டது என்பதே வரலாறு. அந்தப் போராட்டத்தைத் தான் ஜோதிபாபுலே, அம்பேத்கர், பெரியார் முன்னெடுத்தார்கள்.



இந்த வெகுமக்களின் உரிமைகளுக்கும் அதை மறுத்த பார்ப்பனர்களுக்கும் எதிராக நடந்த போராட்டமே இந்தியாவில் சமூக நீதிக்கான ஜாதி எதிர்ப்புக்கான போராட்டங்கள். இந்தப் போராட்டத்தை 'இந்து'க்களுக்கும் "இந்து எதிர்ப்பாளர்"களுக்குமான போராட்ட மாக உருமாற்றம் செய்யும் சூழ்ச்சிகள் இப்போது வேகமாக நடக்கின்றன.

இந்த பார்ப்பன சூழ்ச்சி வலையில் 'விட்டில் பூச்சி'களாய் விழுந்து கொண்டிருக்கும் நமது ஒடுக்கப்பட்ட சகோதரர்கள் சிந்தனைக்கு சில கேள்விகளை முன் வைக்க விரும்புகிறோம்.

'இந்து'க்கள் உரிமைகளுக்காகப் போராடியது யார்? அந்த உரிமைகளை வரலாறு முழுதும் தடுத்து நிறுத்தியது யார்?

புத்தர் தொடங்கி வைத்த இந்த உரிமைப் போராட்டம், இடையில் சூழ்ச்சிகளால் ஊடுருவலால் சிதைத்து, புத்த மார்க்கத்தை இந்த மண்ணைவிட்டே விரட்டினார்கள் பார்ப்பனர்கள்.

மீண்டும் - பார்ப்பனரல்லாத மக்களுக்காக 18ஆம் நூற்றாண்டிலே அரசியல் - சமூக உரிமைப் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கின.

பார்ப்பனரல்லாத இந்துக்கள், "எங்களுக்கும் அரசுப் பதவிகளை வழங்கக்கூடாதா? எங்களுக்கும் கல்விக் கூடங்களின் கதவுகளைத் திறந்துவிடக் கூடாதா?" என்று உரிமைக்காக குரல் கொடுத்தனர். அப்போதெல்லாம் பார்ப்பனரல்லாத 'இந்து'க்களுக்கு எந்த அரசு சலுகைகளும் வழங்கக் கூடாது என்று எதிர்த்தவர்கள் பார்ப்பனர்கள்.

சமூகத்தின் ஆழக் குழிக்குள் புதைக்கப்பட்டு, மூச்சுத் திணறிக் கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட 'இந்து' மக்களை கைதூக்கிவிட அன்று உரிமைக்காக குரல் கொடுத்தவர்கள் பார்ப்பனரல்லாத 'இந்து'க்களின் தலைவர்கள்தான்!

பெரியார் இயக்கம் - மதங்களைக் கடந்து மனிதத்துவத்தை நேசிக்கும் இயக்கம். 'இந்து' உள்ளிட்ட எந்த மதத்தையும் ஏற்காத இயக்கம். ஆனால், உரிமை மறுக்கப்பட்ட எமது தமிழினத்தின் உறவுகளான தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட 'இந்து'க்களின் உரிமைகளுக்காக களம் கண்ட இயக்கம். சுயமரியாதை சமூக நீதிக்கான போராட்டக் களத்தில் ஒடுக்கப்பட்ட 'இந்து'க்களின் உரிமைகளை தடுத்தவர்கள் தான் இன்று 'இந்து'க்களின் காவலர்களாக நாடகமாடுகிறார்கள். இந்த 'மாய்மாலத்தில்' மயங்கும் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இந்துக்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

'சங்பரிவார்' கும்பல் பேசும் மொழிகளிலேயே கேட்க விரும்புகிறோம். **'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**

- காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே 'தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப் பட்ட' பார்ப்பனரல்லாத 'இந்து'க்களின் கல்வி, அரசுப் பதவி, அரசியல் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடியவர் பெரியார். அதை எதிர்த்து முறியடித்தவர்கள் பார்ப்பனர்கள். அதன் காரணமாகவே காங்கிரசில் செல்வாக்கான பதவிகளை உதறித் தள்ளிவிட்டு வெளியேறியவர் பெரியார். யாருக்காக? ஒடுக்கப்பட்ட 'இந்து'க்களின் உரிமைகளுக்காக! **இப்போது சொல்லுங்கள்; 'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**
- 1929இல் செங்கல்பட்டில் சுயமரியாதை முதல் மாநாட்டைக் கூட்டி, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட 'இந்து' மக்களுக்கு அவர்களின் மக்கள் தொகை விகிதாசாரத்துக்கேற்ப அனைத்துத் துறைகளிலும் இடஒதுக்கீடு கேட்டு குரல் கொடுத்தார் பெரியார். இதை எதிர்த்து பெரியார் கருத்துக்கு எதிராக கூக்குரலிட்டு வகுப்புவாரி உரிமைகளை எதிர்த்தவர்கள் 'இந்து' பார்ப்பனர்கள். **இப்போது சொல்லுங்கள்; 'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**
- 1947இல் தமிழகத்தில் ஓமாந்தூர் இராமசாமி (ரெட்டியார்) முதல்வராக இருந்தபோது, அவர்தான் பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கு (14 இடங்களில் 2 இடங்கள் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில்) 14.29 சதவீத கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகளை வழங்கி ஆணையிட்டார். அப்போது இந்த 'இந்து'க்களுக்கு தனி உரிமைகள் வழங்கக்கூடாது என்று எதிர்த்து, தமிழகம் வந்த காந்தியடிகளிடமே புகார் செய்தவர்கள், 'இந்து' பார்ப்பனர்கள். இந்த உரிமைகளை வழங்கக் கூடாது என்று கண்டித்து எழுதியவை 'இந்து' பார்ப்பனர்கள் நடத்திய பத்திரிகைகள். அப்போது ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியாரின் இந்த சமூக நீதியை ஆதரித்து களமிறங்கி செயல்பட்டவர் பெரியார்; பெரியாரின் இயக்கம். **இப்போது சொல்லுங்கள்; 'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**
- 1935ஆம் ஆண்டிலிருந்து அன்றைய சென்னை மாகாணத்தில் மட்டும் அஞ்சல் துறை, துறைமுகம் போன்ற மத்திய அரசு அலுவலகங்களில் பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட 'இந்து'க்களுக்கு அவர்களை 6 வகுப்புகளாகப் பிரித்து வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டிருந்தன. பார்ப்பன 'இந்து'க்களின் கண்களை இது உறுத்திக் கொண்டே இருந்தது. இந்தியா 'சுதந்திரம்' பெற்ற அடுத்த 45ஆவது நாளிலேயே நேரு ஆட்சிக்கு அழுத்தம் கொடுத்து, பிற்படுத்தப்பட்ட இந்துக்களின் இந்த வேலைவாய்ப்பு உரிமைகளைப் பறித்தவர்கள், 'இந்து' பார்ப்பனர்கள். அப்போது இதை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பியது பெரியார் இயக்கம். **இப்போது சொல்லுங்கள்; 'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**
- தமிழ்நாட்டில் நீண்டகாலமாக கல்வி, உத்தியோக உரிமைகளை உறுதி செய்ய தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்காக அமுல்படுத்தப்பட்டு வந்த வகுப்புவாரி உரிமையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தது யார்? 'இந்து' பார்ப்பனர்கள் செண்பகம் துரை ராஜன், சீனிவாசன். இவர்களுக்காக 'இந்து' பிற்படுத்தப்பட்டோருக்கு எதிராக நீதிமன்றத்துக்கு வாதாட வந்தது யார்? அரசியல் சட்ட வரைவுக் குழுவில் உறுப்பினராக இருந்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் என்ற இந்து பார்ப்பனர். அப்போது, பார்ப்பனரல்லாத 'இந்து'க்கள் உரிமைகளுக்காக வீதிகளில் இறங்கி போராடி, மீண்டும் உரிமைகளை உறுதி செய்ய அரசியல் சட்டத்தை முதன்முதலாக திருத்துவதற்கு காரணமாக இருந்தவர்தான் பெரியார். **இப்போது சொல்லுங்கள்; 'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**

(3 ஆம் பக்கம்)

# வலையில் 'விட்டில்பூச்சி' ஆகாதீர்!

# "இந்து"க்களின் எதிரிகள் யார்?

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

- பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த 'இந்து' பெண்களை கோயில்களில் 'பொட்டுக் கட்டி' அர்ப்பணித்து அவர்களை அர்ச்சகப் பார்ப்பனர்களுக்கும் இந்து மத உயர்ஜாதி செல்வந்தர் களுக்கும் 'சேவை' செய்ய வேண்டும் என்பதை 'சமூக தர்மமாக்கி' இந்த அபலைப் பெண்களின் வாழ்வை சிதைத்தவர்கள் பார்ப்பனர்கள். இந்த இழிவுகளை ஒழித்திட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் முயற்சியில் தடைச் சட்டம் கொண்டுவந்தபோது, அதை எதிர்த்து, 'இந்து' தர்மத்துக்கு எதிரானது என்று கூச்சல் போட்டது யார்? 'இந்து' மதத்தைச் சார்ந்த சத்தியமூர்த்தி அய்யர் என்ற "தேசியத் தலைவரும்", 'இந்து' சனாதன பார்ப்பனர்களும், 'இந்து' பார்ப்பனர்கள் நடத்திய ஏடுகளும்தான்! அப்போது 'இந்து' பெண்களை 'தாசி'களாக்கும் இழிச் செயல்களுக்கு எதிராக உறுதியாக குரல் கொடுத்து முத்துலட்சுமி ரெட்டிக்கு ஆதரவாக நின்றது யார்? பெரியாரும், பெரியார் இயக்கமும்தான். **இப்போது சொல்லுங்கள்; 'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**

- பிற்படுத்தப்பட்ட 'இந்து'க்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் 27 சதவீத இடஒதுக்கீட்டை (மண்டல் அறிக்கை) பிரதமராக இருந்த வி.பி.சிங் அமுல்படுத்தியபோது அதை எதிர்த்து நாடு முழுதும் கலவரத்தை உருவாக்கியதுயார்? 'இந்து' பார்ப்பனர்கள்; 'இந்து' பார்ப்பன ஏடுகள்; 'இந்து' பார்ப்பன உயர் அதிகாரிகள். அப்போது 'ராமன்' கோயில் பிரச்சினையை கையில் எடுத்துக்கொண்டு, அத்வானி தலைமையில் ரதயாத்திரையைத் தொடங்கி, பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கு உரிமை வழங்கும் உத்தரவையும் எதிர்த்து, வி.பி.சிங் ஆட்சிக்கு அளித்த ஆதரவையும் திரும்பப் பெற்று, ஆட்சியையே கவிழ்த்தது யார்? இப்போது இந்துக்களின் காவலனாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் பா.ஜ.க.வும், அதன் குடும்ப அமைப்புகளும்தான், அப்போது மண்டல் பரிந்துரைக்காக பிற்படுத்தப்பட்ட 'இந்து'க்களின் உரிமைகளுக்காக களத்தில் நின்று போராடியது பெரியார் இயக்கங்கள். இல்லை என்று மறுக்க முடியுமா? **இப்போது சொல்லுங்கள்; 'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**

- தாழ்த்தப்பட்ட 'இந்து'க்களின் கோயில் நுழைவு உரிமைகளை தடுத்தது யார்? மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் 'தாழ்த்தப் பட்டோர்' நுழைந்துவிட்டதால் "மீனாட்சியே" கோயிலை விட்டு, ஓடிவிட்டாள் என்று கூறி கோயிலுக்கு பூட்டு போட்டது யார்? இந்து பார்ப்பன அர்ச்சகர்கள்.

  குற்றாலம் நீர் வீழ்ச்சியில் தாழ்த்தப்பட்ட 'இந்து'க்கள் குளிக்கத் தடை போட்டது யார்? இந்து பார்ப்பனர்கள். காந்தியார் சிதம்பரம் வருகிறார் என்றவுடன், கோயிலுக்குள் இந்து தாழ்த்தப்பட்ட வர்களை அழைத்து வந்து விடுவார் என்று அஞ்சி, காந்தியார் திரும்பிப் போகும் வரை நடராஜர் கோயிலை பூட்டியது யார்? 'இந்து' பார்ப்பனர்கள்.

  இப்போதும் ஆறுமுகசாமி என்று சைவத்தில் ஊறிப் போன 'இந்து' முதியவர் அதே கோயிலுக்குள் 'தேவாரம்' ஓதியதற்காக அடித்து உதைத்து வெளியேற்றி தூக்கி வீசியது யார்? 'இந்து' பார்ப்பன தீட்சதர்கள்.

  தில்லை நடராசன் கோயில், கோயில் நிர்வாகத்தையும் வருமானத்தை யும் தங்களுக்கே சொந்தம் கோரி, உச்சநீதிமன்றம் வரை போய் வாதாடி வெற்றி பெற்றது யார்? பிற பார்ப்பனரல்லாத எந்தப் பிரிவு 'இந்து'க்களுடனும் கோயில் உரிமைகளை பகிர்ந்து கொள்ள முடியாது என்று 'இந்து'க்களை ஒதுக்கி வைப்பது யார்? 'இந்து' பார்ப்பன தீட்சதர்கள். இவர்களுக்காக உச்சநீதிமன்றத்தில் வாதாடி யது சுப்பிரமணியசாமி எனும் இந்து பார்ப்பனர். பார்ப்பனரல்லாத 'இந்து'க்களில், அவர்கள் 'ஓதுவார்களானாலும்', 'பண்டாரங் களானாலும்' - ஒதுக்கி வைப்பது யார்? இந்து பார்ப்பனர்கள்.

  இந்த இழிவுகளை எதிர்த்து, இவர்களின் சுயமரியாதைக்காகப் போராடுவது யார்? 'புரட்சிகர' முற்போக்கு இயக்கங்களும் பெரியார் இயக்கங்களும் மனித உரிமை அமைப்புகளும்தான். **இப்போது சொல்லுங்கள்; 'இந்து'க்களின் நண்பர்கள் யார்? 'இந்து'க்களின் எதிரிகள் யார்?**

- 'இந்து' தாழ்த்தப்பட்டவர்களை 'இந்து' பிற்படுத்தப்பட்ட ஆதிக்க ஜாதியினர் பல்வேறு பகுதிகளில் ஒடுக்கி வைத்து வன்முறைத் தாக்குதலுக்கு உள்ளாக்குவதை எதிர்த்து, இந்து மதக் காவலர்கள் போராடியது உண்டா? இந்த ஒதுக்குதலுக்குக் காரணமான ஜாதியையும், ஜாதியமைப்பையும் எதிர்த்து, 'இந்து' மக்களிடையே சமத்துவத்துக்காக போராடுவது யார்? எதிர் நீச்சல் போட்டு இயக்கம் நடத்துவது யார்? பெரியார் இயக்கம் தானே!

- கோயில் கர்ப்பகிரகத்துக்குள் பார்ப்பனர் மட்டுமே அர்ச்சகர் ஆக முடியும். பிற்படுத்தப்பட்ட 'இந்து'க்களோ, 'தாழ்த்தப்பட்ட இந்து'க்களோ, அவர்கள் முறையான பயிற்சி பெற்றாலும் அனுமதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் வரை சென்று தடை வாங்கியிருப்பது யார்? பார்ப்பன 'இந்து'க்கள் தானே? தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இந்துக்களின் சுயமரியாதைக்காக அவர்களை 'சூத்திரர்' என்று இழிவுபடுத்தாதே என்று இறுதி மூச்சு அடங்கும் வரை போராடி அதற்கான இயக்கம் நடத்திய ஒரே தலைவர் பெரியார் தானே! மறுக்க முடியுமா?

- கருவறைக்குள் 'தீண்டாமை'யை உறுதிப்படுத்தும் இழிவை ஏற்காதீர்கள்; கோயிலுக்குள் போகும் பார்ப்பனரல்லாத தமிழர்களே! நீங்களே தேங்காய் உடைத்து, 'கற்பூரம்' காட்டி, உங்கள் சுயமரியாதையை உறுதி செய்யுங்கள் என்று பக்தி உணர்வுள்ள இந்துக்களுக்கும் வேண்டுகோளை வைத்தது யார்? பெரியார் அல்லவா?

- பெரும்பான்மை 'இந்து'ப் பெண்களை 'சாஸ்திர ரீதியாக' அடிமைகளாக்கி, கணவன் இறந்தால் மொட்டை அடித்து விதவையாக்கி, மறுமண உரிமைகளை தடுத்து, குடும்ப வன்முறையை, குழந்தைத் திருமண முறைகளையும் சாஸ்திரங்களைக் காட்டி நியாயப்படுத்தியதை எதிர்த்தது, பெரியார் இயக்கம். பெரும் பான்மை 'இந்து' பெண்களின் உரிமைக்கும் சமத்துவத்துக்கும் போராடியது, போராடுவது பெரியார் இயக்கம்!

- கணவன் கட்டிய 'தாலி'க்காக கணவன் வன்முறைகளையும் குடும்ப சித்திரவதைகளையும் 'இந்து' பெண்கள் மீது பண்பாடு என்றும், 'புனிதம்' என்றும் சுமக்கச் செய்து, காலம் முழுதும் அவர்களை கண்ணீரில் மூழ்கச் செய்வது நியாயம் தானா? என்ற சிந்தனையி லிருந்து பிறந்ததுதான் 'தாலி எதற்கு?' என்ற கேள்வி! கணவனுக்கு இல்லாத அடையாளம் பெண்ணுக்கு மட்டும் ஏன்? என்ற நியாயத் தின் வெளிப்பாடுதான் - தாலியை நீக்கிக் கொள்வதற்கான உரிமை!

பெண்களுக்கான உரிமைக் குரலை, மதத்துக்கான எதிர்ப்பாக்கி மடைமாற்றம் செய்யும் பார்ப்பன சூழ்ச்சிகளை சகோதரிகளும் தாய்மார்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

'இந்து'ப் பெண்கள் மீதான வன்முறைகள்; 'வரதட்சணைக் கொலைகள்', 'பெண் கருக்கலைப்புகள்', 'பால்ய விவாகங்கள்' போன்ற எந்த ஒடுக்குமுறைக்கும் போராட முன் வராதவர்கள், 'தாலி'யை அகற்றும் பரப்புரையை மட்டும் முன் வைத்து, 'இந்து'க் காவலர்களாக வன்முறையை கையில் எடுக்கிறார்கள்.

'இந்துப் பெண்களை அடிமைகளாகவே நடத்த வேண்டும் என்ற மனு சாஸ்திரத்தை எதிர்க்காதவர்கள், அதன் அடிப்படையில் 'ஆர்.எஸ்.எஸ்.'சில் பெண்கள் உறுப்பினராகவே முடியாமல் தடைப்படுத்தி, இந்துப் பெண்களை இன்று வரை அவமதிப்பவர்கள் இவர்கள்தான்; மறுக்க முடியுமா? இந்த அநீதிகளுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வுக் கருத்துகளை விதைத்து, 'இந்து'ப் பெண்களின் உரிமைக்கான கருத்துகளை பரப்புவதுதான் பெரியார் இயக்கம்.

**இப்போது கேட்கிறோம்;**
**சொல்லுங்கள்;**
**இந்துக்களின் நண்பன் யார்?**
**இந்துக்களின் எதிரி யார்?**

– இரா

DATE OF PUBLICATION 23.04.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# திருவெறும்பூரில் கழகத்தின் பயிற்சி முகாமுக்கு தடை; தோழர்கள் கைது!

திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் ஏப்.18ஆம் தேதி திருவெறும்பூரில் பெரியார் கருத்துகளை விளக்கிடும் இளைஞர் பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தது. சிற்பிராசன், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி வழியாக மூடநம்பிக்கைகளுக்கான விளக்கம் தரவும், மதிமாறன், 'ஜாதி ஒழிப்பும் அம்பேத்கரும்' எனும் தலைப்பிலும், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'பெரியாரும் இடஒதுக்கீடும்' எனும் தலைப்பிலும், ஊடக வியலாளர் செல்லையா, 'ஊடகவியல்' குறித்தும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உணவு இடைவேளையில் மாட்டிறைச்சி உணவு வழங்கப்படும் என்று அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. சுமார் ஒரு மாத காலத்துக்கு முன்பாகவே நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. தி.மு.கவின் 'தொ.மு.ச.' கட்டிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இந்த பயிலரங்கம். இரு நாள்களுக்கு முன் வேறு நிகழ்ச்சிகள் இருப்பதாகக் கூறி நிர்வாகிகள் அனுமதி மறுத்துவிட்டனர். கடைசியாக, திருவெறும்பூர் அய்.என்.டி.யு.சி. தொழிற்சங்கக் கட்டிடத்தில் நிகழ்ச்சி நடத்த அனுமதித்தனர். காவல்துறையின் கெடுபிடியால் நிகழ்ச்சி தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு அவர்களும் அனுமதி மறுத்தனர். பகுதி முழுதும் காவல்துறை குவிக்கப்பட்டதோடு, நிகழ்ச்சி ஏற்பாட்டுக்கு வந்திருந்த மாவட்ட கழக பொறுப்பாளர்கள் புதியவன், குமார், குணாராஜ் ஆகியோரை திருவெறும்பூர் காவல்நிலையத்திற்கு அழைத்துப் போய், மாலை 6 மணியளவில் காவல் நிலையத்திலேயே வைத்திருந்தனர்.

நிகழ்ச்சிக்கு எதிராக பா.ஜ.கவினரிடமிருந்து புகார் வந்திருப்பதால், நிகழ்ச்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக காவல் துறையினர் தெரிவித்தனர். திருவெறும்பூரில் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி விற்பனைக் கடைகளில் போலீசார் நிறுத்தப்பட்டிருந்தனர். கெடுபிடி காரணமாக சில வியாபாரிகள் கடைகளையே மூடிவிட்டனர். தமிழ்நாட்டில் மாட்டிறைச்சி விற்பதற்கு தடையேதும் இல்லாத நிலையிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில மதவாத வன்முறையாளர்கள் மிரட்டலுக்கு தமிழக காவல்துறை அடிபணிந்து கருத்துரிமை, பேச்சுரிமைகளை நசுக்கி வருகிறது.

அரங்கிற்குள் பயிற்சிமுகாம்களை நடத்தவே அனுமதி மறுக்கும் தமிழக காவல்துறை, ஆர்ப்பாட்டங்கள் என்ற பெயரில் பெரியார் படங்களை எரிப்பதற்கும்,144 தடை விதிக்கப்பட்ட பகுதிகளில் மதவெறி வன்முறையாளர்கள் தாக்குதல் நோக்கத்தோடு வெடிகுண்டு மற்றும் ஆயுதங்களுடன் நுழைவதற்கும் அனுமதித்துக் கொண்டிருக்கிறது.

## வினாக்கள்... விடைகள்...!

+ 'மாட்டுக்கறி விருந்து' நடத்துவது வேலை இல்லாதவர்கள் நடத்தும் போராட்டம். **– அமைச்சர் பொன் இராதாகிருட்டிணன்**

  உண்மைதான்! மாட்டுக்கறிக்கு தடை போட்டதால் அம்மாநிலங்களில் அதன் காரணமாக வேலை இழந்தவர்கள்தான் போராட்டம் நடத்துகிறார்கள்.

+ இந்திய வானொலியில் சமஸ்கிருதத்தில் செய்திகளை மீண்டும் ஒலி பரப்பலாம். **– ஜெர்மனியில் மோடி**

  அந்த செய்தியை கோயில் கர்ப்பகிரகத்தில் கொண்டு போய் ஒலி பரப்புங்க. 'கடவுளுக்கு' மட்டும்தான் அது புரியும்!

+ அட்சய திருதியை நாளில் தங்க விற்பனையில் கலப்படம் அதிகம் நடக்கிறது. **– நுகர்வோர் சங்கம்**

  அன்றைய தினம் கலப்பட தங்கம் வாங்குவதே – அய்தீகம்னு அறிவிச்சுடலாம். அப்போதும் கூட்டம் முண்டியடிக்கும்.

+ காஷ்மீரில் பண்டிட்டுகளுக்கு (பார்ப்பனர்களுக்கு) தனி நகரம் உருவாக்கி, தனி குடியிருப்பு அமைக்கப்படும். **– காஷ்மீர் அரசு முடிவு**

  அங்கே பண்டிட்டுகளே தெரு கூட்டுவார்கள்; அவர்களே சாக்கடை அள்ளுவார்கள்!

+ கிரெடிட் கார்டு மோசடி: அமெரிக்காவில் இந்து சாமியாருக்கு 27 வருட சிறை. **– செய்தி**

  அமெரிக்காகாரன் இந்து 'துவேஷி'ன்னு காட்டிட்டான்; உடனே தூதரக உறவை முறிச்சு, சாமியார மீட்டுட்டு வாங்க.

+ மதமாற்ற தடைச் சட்டம் இயற்ற மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை. **– சட்ட அமைச்சகம்**

  அதனால் என்ன? ஆர்.எஸ்.எஸ்.சுக்கு அந்த அதிகாரத்தை வழங்கி, அவசர சட்டம் போடுங்க. குடியரசுத் தலைவர் உடனே ஒப்புதல் தருவார்.

+ பெரியார் சிலையில் உள்ள 'கடவுள் இல்லை' என்ற வாசகத்தை நாங்களே அழிப்போம். **– எச். ராஜா**

  'கடவுள் இல்லை' என்பதால் மனிதர்களாகிய நாங்கள் தான் அதை அழிக்க வேண்டியிருக்கிறது என்று இதன் மூலம் ஒப்புதல் தருகிறது இந்த வெட்கம் கெட்ட பூணூல் கும்பல்.

# பெங்களூருவில் மாட்டிறைச்சி உண்ணும் போராட்டம்

பெங்களூருவில் டவுன் ஹால் எதிரே கடந்த சில தினங்களுக்கு முன் மாட்டிறைச்சி உண்ணும் போராட்டம் நடைபெற்றது. இதில் நடிகரும், கன்னட எழுத்தாளரு மான கிரீஷ் கர்னாட், சாகித்ய அகாதெமி விருது பெற்ற கன்னட எழுத்தாளர் மரளுசித்தப்பா உள்ளிட்ட பல்வேறு முற்போக்கு சிந்தனையாளர்கள் பங்கேற்றனர். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாட்டிறைச்சி பிரியாணி மற்றும் வறுவலை சாப்பிட்டனர். பொது மக்களுக்கும் வழங்கினர்.

இதற்கு பாஜக, விஷ்வ இந்து பரிஷத், ஸ்ரீராம் சேனா, சிவசேனா உள்ளிட்ட அமைப்புகளும், பல்வேறு கன்னட அமைப்புகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. பொது இடத்தில் மாட்டிறைச்சி சாப்பிட்டு, இந்துக்களின் மனதை புண்படுத்திய கிரீஷ் கர்னாட், மரளுசித்தப்பா ஆகியோர் மீது வழக்கு தொடரப் போவதாக மிரட்டியுள்ளன.

இந்நிலையில் பாஜக முன் னாள் சட்ட அமைச்சர் சுரேஷ் குமார், "கிரீஷ் கர்னாட் மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிடில் பாஜகவின் அடுத்தக்கட்ட போராட்டத்தை விரைவில் அறிவிப்போம்" என்றார். இதுகுறித்து கிரீஷ் கர்னாட், 'தி இந்து'விடம் கூறியதாவது:

மகாராஷ்டிர மாநிலத்தில் மாட்டிறைச்சிக்கு தடை விதித்திருப்பது நகைப்புக்குரியது. தற்போது அதே சட்டத்தை நாடு முழுவதும் கொண்டு வர மத்திய அரசு முயற்சிக்கிறது. பாஜக அரசின் இந்த செயல்பாடுகளால் மாட்டிறைச்சி உண்போரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மாட்டிறைச்சி உண்பது தனி நபரின் உரிமை. அதை அரசே தடுப்பது ஜனநாயகத்துக்கு எதிரானது. பொதுமக்கள் எதை உண்ண வேண்டும் என்பதை அரசு எப்படி தீர்மானிக்க முடியும்? பெங்களூருவில் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. பாஜகவின் எதிர்ப்புக்கும், மிரட்டலுக்கும் பயந்து மாட்டிறைச்சி உண்ணும் போராட்டம் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படாது" என்றார்.

இது தொடர்பாக கர்நாடக முதல்வர் சித்தராமையா பேசும்போது, "சுதந்திர நாட்டில் ஒருவருக்கு விருப்பமான உணவை உண்பதற்கு முழு உரிமை உள்ளது. சைவம், அசைவம் என்பது அவரவரின் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது. இதில் அரசு தலையிட முடியாது" என்றார்.

# அம்பேத்கர் சிலைகளுக்கு கழக சார்பில் மாலை

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 14.4.2015 அன்று காலை 9.30 மணிக்கு பட்டினப்பாக்கம் அம்பேத்கர் மணிமண்டபத்திலுள்ள டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர்இருசக்கர வாகனத்தில் ஊர்வலமாக சென்று மந்தைவெளியிலுள்ள அம்பேத்கர் சிலைக்கும், இராயப்பேட்டை பத்ரிநாராயணன் படிப்பகத்திலுள்ள அம்பேத்கர் உருவ படத்திற்கும் மாலைகள் அணிவிக்கப்பட்டன. இந்நிகழ்வில் தென் சென்னை, வடசென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.


**விழுப்புரம் :** விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 14.4.2015 அன்று அம்பேத்கர் 125ஆவது பிறந்த நாளை சங்கராபுரத்திலுள்ள அம்பேத்கர் சிலைக்கு மாவட்டச் செயலாளர் பெரியார் வெங்கட் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. வடசிறுவள்ளூரில் அரிக்கிருஷ்ணன் தலைமையிலும் மூரார்பாளையத்தில் அதியமான் தலைமையிலும் அம்பேத்கர் சிலைக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் செ.நவப்பிள்ளை, க.ராமர், மு.நாகராசு, ம. குமார், குப்புசாமி உள்பட 30க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்செங்கோடு :** நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நரி பள்ளத்தில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாவட்ட செயலாளர் வைரவேல், திருச்செங்கோடு நகர செயலாளர் சதீஷ், மல்லசமுத்திரம் ஒன்றிய அமைப்பாளர் கண்ணன், இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், நித்தி, பெருமாள், மாணிக்கம், ஞான சேகர், கார்த்தி, மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர் .

**மன்னார்குடி:** சட்டமேதை புரட்சியாளர் அம்பேத்கரின் 125ஆவது பிறந்தநாளை ஜாதி ஒழிப்பு நாளாக திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அம்பேத்கர் அறிவாலயத்தில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு கழக சார்பில் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு மாலை அணிவித்தார். நிகழ்ச்சியில் மன்னார்குடி நகர செயலாளர் மணிகண்டன், ஒன்றிய செயலாளர் சேரன் ரமேஷ், நீடாமங்கலம் ஒன்றிய செயலாளர் நல்லிக்கோட்டை முருகன், வலங்கைமான் ஒன்றிய செயலாளர் செந்தமிழன், கோட்டூர் ஒன்றிய செயலாளர் தென்பரை பன்னீர்செல்வம், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் முரளிதரன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 23rd April 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஏப்ரல் 30, 2015 | புரட்சி 14 | முழக்கம் 16 | விலை: ரூ.3.00


# ஜாதி வெறியைத் தூண்டுவது யார்?

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

கோயில் கட்டுகிறவர்கள் – கல்லூரி வியாபாரம் நடத்துகிறவர்கள் – தங்கள் சுயநலனுக்காக ஜாதி வெறியைத் தூண்டி விடுகிறார்கள் என்று ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ பரப்புரை இயக்கத்தை 20-03-2015 அன்று சென்னை பெரம்பூரில் தொடங்கி வைத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையின் சில பகுதிகள்.

“எங்கள் தலைமுறைக்கு ஜாதிவேண்டாம்” என்ற பரப்புரை பயணம் சென்னை மாவட்டக் கழக தோழர்களால் நடத்தப்படுவது இது இரண்டாவது முறை. இந்த முறை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக தமிழகம் முழுவதும் ஆறு முனைகளில் இருந்து தொடங்குகிறது. தொடர்ச்சியாக இப்படிப்பட்ட செயல் திட்டங்களை நாங்கள் எடுத்து வந்த போதும், இன்றைய சூழலில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஓரிரு ஜாதியவாதிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, வளர்த்துக் கொள்வதற்காக பொதுமக்களிடம் ஜாதி உணர்வை தூண்டிவிட்டதை பார்த்து ஒவ்வொரு ஜாதியினரும் அவ்வாறு நடக்க தொடங்கிவிட்ட சூழலில் தான் இப்படிப்பட்ட ஒரு பயணத்தை நாம் நடத்தவேண்டிய தேவை வந்தது. இந்த பயணத்தின் வழியாக பெரியாரின் அடிப்படைக் கொள்கையான ‘ஜாதி ஒழிப்பை’ மக்களிடம் எடுத்துச் செல்வதுதான் நோக்கம்.

‘பறிபோகிறது எங்கள் நிலம்’ என்பது பற்றி திருமூர்த்தி விளக்கிப் பேசினார். இப்போது வந்திருக்கின்ற சட்டம் நிலத்தை எப்போது வேண்டு மானாலும் யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தாது மணல் கொள்ளை ஒருபுறம் நடந்துகொண்டிருக்கின்றது; மீத்தேனுக்காக தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மண் பாலைவனம் ஆக்கப்படுகின்றது; இப்படி பல வகையில் நமது கனிம வளம் கொள்ளைப் போகிறது. நமக்கான இட ஒதுக்கீடு அரசு துறைகளில் மட்டும்தான் என்ற சூழலில் வேக வேகமாக எல்லாவற்றையும் தனியார் மயமாக்கிக் கொண்டே போகிறார்கள். உலகிலேயே பெரிய தொழில் வாய்ப்பை வழங்குகின்ற நிறுவனம் நமது இரயில்வே துறையைக் கூட தனியாருக்கு கொடுக்க துணிந்துவிட்டார்கள் என்ற போக்கைப் பார்க்கின்றோம் இப்படி நமக்கான வேலைவாய்ப்புகள் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றை பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல் எல்லாவற்றையும் மறந்துவிட்டு, ஜாதி என்ற ஒன்றில் தனது கவனத்தை முழுதும் குவித்து, தான் மட்டுமல்லாமல் இந்த சமுதாயத்தையும் அதன் பக்கம் திருப்பி ஜாதிவெறியை ஓங்கச் செய்கின்ற முயற்சியை, தடுப்பதற்கான முயற்சி தான் இந்த பயணம்.

நாங்கள் பயணம் செய்யும் இடங்களில் பேசப் போவதெல்லாம் அங்கிருக்கும் இளைஞர்களைப் பார்த்துத்தான், பிற்படுத்தப்பட்ட ஜாதியினரிடம் தங்களை உயர்வான ஜாதியாக கருதிக் கொண்டிருக்கிற மக்களிடம் போய் இந்து மதத்தின்படி நீங்கள் பெரிய ஜாதி அல்ல என்பது ஒன்று; எப்படி இருந்தாலும் உங்களுடைய முன்னோர்கள் அறியாமையின் காரணமாக இந்த ஜாதியை கடைபிடித்திருக்கக் கூடும். ஆனால் நீங்களோ கல்வி பெற்றிருக்கின்றீர்கள் உயர் கல்வி பெற்றிருக்கின்றீர்கள் வேலை வாய்ப்புகளுக்காக மாநிலம் விட்டு மாநிலம் இந்தியா முழுவதும் பரவி செல்கின்றீர்கள்; இந்தியாவை விட்டு வெளிநாடுகளுக்கும் கூட செல்கின்றீர்கள்; உங்களுக்கு ஒரு பரந்து விரிந்த விசாலமான பார்வை கிடைத்திருக்கின்றது; நீங்களுமா இந்த ஜாதியை பேசிக் கொண்டிருக்க வேண்டும்? உங்கள் தலைமுறையிலாவது விட்டுத் தொலையுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்து பேசுவதுதான் எங்கள் திட்டம். ஆனால் இப்போது வந்திருப்பவர்களெல்லாம் ஒருபக்கம் ஜாதி வெறியையையும் மற்றொரு பக்கம் மத வெறியையும் தூண்டிவிடப் பார்க்கின்றார்கள்.

பி.ஜே.பி ஆட்சிக்கு வந்த பின்னால், அவர்கள் now or never என்ற ஒரு கொள்கையை வைத்திருக்கின்றார்கள்; இப்போது செய்தால் தான் இல்லா விட்டால் எப்போதும் முடியாது என்று வேக வேகமாக தொடங்கிவிட்டார்கள் தங்கள் வேலையை. எம்.ஜி.ஆர் வாரம், சிவாஜி வாரம், ரஜினி வாரம் என்று தொலைக் காட்சிகளில் வருவதைப் போல, இந்த வாரம் மாட்டுக்கறி வாரம் - சமஸ்கிருத வாரம் பத்து பிள்ளைகள் வாரம் என்று அதையே நாம் பேசிக் கொண்டிருக்கும்படி நம்மை செய்துவிட்டார்கள்; அவர்கள் செய்யும் கொடுமைகளின் பக்கம் நமது கவனத்தையே விடாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் என்னென்னவற்றையெல்லாம் மாற்றத் தொடங்கியிருக்கிறார்கள் எதிலிருந்து மாற்றத்தை கொண்டுவரத் துடிக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் விஷ்வ ஹிந்து பரிஷத் போன்ற சில அமைப்புகள் திரிசூலத்தை கொடுத்து மூன்று எதிரிகளை சொன்னார்கள்; முதலில் முஸ்லீம்கள் அடுத்து கிறிஸ்துவர்கள் அடுத்து மதசார்பின்மை பேசுபவர்கள் என்றான். இப்பொழுது அதை மாற்றி அமைத்துக் கொண்டான். Five Ms (ஐந்து எம்) என்கிறார்கள்; முதலில் மார்க்சிஸ்ட் இரண்டாவது மெட்டீரியலிஸ்ட் மூன்றாவது மெக்காலேயிஸ்ட் நான்காவது மிஷனரிஸ் கடைசியாக முஸ்லீம்ஸ் என்கிறான். முஸ்லீம் மீது உள்ள கோபம் போய் விட்டதாக யாரும் நினைக்க வேண்டாம்; முதலில் இருந்து சொன்னவை எல்லாம் மறந்தாலும் கடைசியாக சொன்னது மறக்காமல் மனதில் அழுத்தமாக நிற்கும் என்பதால் தான் முஸ்லீமை கடைசியாக சொல்கின்றார்கள்.

### மெக்காலே மீது கோபம் ஏன்?

இவர்களை நோக்கி நம்மை திருப்பிவிடுவதில் ஒவ்வொன்றாக நீங்கள் எண்ணிப் பாருங்கள்; மார்க்சியத்தின் மீதான கோபம் ஒரு வேலை பணக் காரனுக்கு வரலாம்; கடவுள் நம்பிக்கையாளர்களுக்கு மெட்டீரியலிஸ்ட் மீது கோபம் வரலாம்; மெக்காலே மீது என்ன கோபம்? கல்விமுறையை இந்த நாட்டிற்கு கொண்டு வந்தவர்மீது என்ன கோபம்? மெக்காலே கொண்டு வந்த கல்விமுறை தான் நம்மை அடிமையாக்கியது என்று நம்மவர்கள் சிலர் சொல்கின்றார்கள்; ஆங்கிலேயரிடம் அடிமையாக இருங்கள் என்றா சொல்லிக் கொடுத்தார்? கல்வி முறையில் என்ன கற்றுக் கொடுத்தார்? நம்ம ஆள் எதையுமே படிக்க மாட்டான்; எவனோ சொல்லி சென்றதை இவனும் சொல்லிக் கொண்டே இருப்பான்; இவன் படித்து தெரிந்து கொள்வதில்லை.

உதாரணமாக ‘தஞ்சை பெரிய கோவிலின் நிழல் கீழே விழாது’ என்று எவனோ சொல்லிவிட்டு போனதை இன்றும் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்; அங்கு போய் பார்த்தால் நிழல் விழுவதைப் பார்க்க முடியும். அரிஸ்டாட்டில் அவர்கள் ‘பெண்களுக்கு இரண்டு பல் குறைவு’ என்று சொல்லிக் கொண்டே இருந்தவர்; அவரின் மனைவி வாயைத்

( 3ஆம் பக்கம்)

## “சாமி சிலையை தொட உங்களுக்கு அருகதை இல்லை!”

***‘பூணூல் அறுப்பு’ குறித்து ‘நக்கீரன்’ (ஏப்.25–28) ஏடு வெளியிட்ட செய்தி கட்டுரையின் சில பகுதிகள்:***

ஆள் அரவமற்று இருந்தது முதியவர் தாக்கப்பட்ட அந்த சின்ன முண்டகக்கன்னி கோயில் தெரு. வரிசை வீடுகளின் வாசல்கள் வெறிச்சோடி கிடக்க, நாம் அப்படியே காரணீஸ்வரர் கோயில் நோக்கிச் சென்றோம். சில தேநீர் கடைகள், ஆட்டோ ஸ்டாண்ட் கண்ணுக்குத் தென்பட அங்கே விசாரித்தோம்.

“தாக்கியது பெரியார் கட்சிக்காரங்க இல்ல. வேற ஆட்கள் இங்க இந்த கோயில்ல குருக்களா இருக்குற அவங்க பையன் சண்முக குருக்களை குறி வச்சுதான் வந்தாங்க. அதுல விசுவநாதன் மாட்டிக் கிட்டாரு” என்றார் ஒருவர். ‘இது என்ன புதிய திருப்பமாக இருக்கிறதே?’ என்ற ஒருவரிடம் மேலும் பேச்சு கொடுத்தோம்.

“இங்க இந்த காரணீஸ்வரர் கோயிலுக்கு எதிர்க்க ஆட்டோ ஸ்டாண்டுல சின்னதா ஒரு பிள்ளையார் சிலை இருக்கு. ஆட்டோக் காரங்களே இதுக்கு பூஜை போடுவோம். அப்படிதான் ஒருநாள் காலையில ஒரு டிரைவர், சிலைக்கு சந்தனக் காப்பு போட்டுக்கிட்டு இருந்தார். அதை இங்க காரணீஸ்வரர் கோயில்ல உள்ள சண்முக குருக்கள் பார்த்துட்டு, ‘சாமி சிலையை தொட உங்களுக்கு அருகதையில்லை’ன்னு எல்லோர் முன்னாடியும் ரொம்ப மோசமா திட்டிட்டாரு. கோப மானாலும் அப்போ மாலை போட்டு இருந்ததால அந்த டிரைவர் அமைதியா போயிட்டாரு. பின்னாடி மலைக்கு போயிட்டு திரும்பியதும் ஆளுங்கள கூட்டிக்கிட்டு வந்து நியாயம் கேட்கப் போயிருக்காரு. அப்போதான் இந்த பெரிய குருக்கள் சிக்கவும் சண்முக குருக்கள்னு நினச்சு தாக்கியிருக்காங்க...” என்றார் விரிவாக. நாம் இதை அங்குள்ள கடைக்காரர்களிடம், அக்கம் பக்கத்தினரிடம் விசாரிக்க, ‘ஆமா இங்க ஒரு நாள் கோயில் முன்னாடி வாக்குவாதம் நடந்தது’ என்றனர்.

சண்முக குருக்களிடம் நம்மிடம் ஆட்டோ தோழர்கள் சொன்னதைப் பற்றிக் கேட்டோம்:

“காரணீஸ்வரர் கோயில் மட்டுமில்லாம வெளியே உள்ள பிள்ளையாருக்கு புரோகித பணி செய்வதும் நான்தான். சாமி விக்கிரகங்களை மத்தவா தொடக் கூடாது. நாங்க மட்டும்தான் தொட்டு பூஜை செய்ய முடியும்னு வேதம் சொல்லுது. இத நாங்க ஏத்துண்டு இருக்கோம். அப்படியிருக்க அன்னிக்கு மத்தவாளான அவா (ஆட்டோ டிரைவர்) பிள்ளையாரை தொட்டு சந்தனக் காப்பு செஞ்சதால ‘தப்பு’ன்னு சத்தம் போட்டேன். அவா அவாக்கு என்ன இந்துமதம் ஒதுக்கியிருக்கோ அத செய்றது தான் முறையான இறைப்பணி” என்றார்.

............... ............... ...............
............... ............... ...............

“கருப்பு சட்டைக்காரங்க இந்த ஸ்டேட்ல மொத்தம் நூறு, நூத்தம்பது பேர்தான் இருப்பா. பிராமணாள் நாங்க 40 இலட்சம் பேர் இருக்கோம். எல்லா உயர் பதவியிலியும் அதிகாரத்துலயும் நாங்க தான் இருக்கோம். நாங்க கோபப்பட்டா அவாளாம் தாங்க மாட்டா” என்றார் விசுவநாத குருக்கள் ஆவேசமாக.

**தலையங்கம்**

## திருநங்கைகள் உரிமை

திருநங்கைகளுக்கு சம உரிமை வழங்க வலியுறுத்தி தி.மு.க. உறுப்பினர் திருச்சி சிவா, மாநிலங்களவையில் கொண்டு வந்து தீர்மானம் நிறைவேற்றியிருப்பது வரவேற்கக்கூடிய வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும். இதை ஒருமித்த தீர்மானமாக நிறைவேற்றிட அவையின் முழுமையான ஆதரவைப் பெறுவதற்கு ஒத்துழைத்த மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லியையும் கருத்து மாறுபாடுகளுக்கு அப்பால் பாராட்ட வேண்டும்.

பிறப்பின் அடிப்படையில் சமூகத்தில் வேறுபாடுகளையோ, இழிவுபடுத்துதலையோ சகிக்க முடியாது. அதை ஒழித்தாக வேண்டும் என்பதே பெரியாரியல். திருநங்கைகள் உரிமைகளும் அவர்களின் சுயமரியாதையும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இப்போது மேலவையில் குரல் வாக்கெடுப்பு வழியாக நிறைவேற்றப்பட்டுள்ள 'திருநங்கைகள் உரிமைச் சட்டம்-2014' நாடாளுமன்றத்தின் விவாதத்துக்கும், வாக்கெடுப்புக்கும் அனுப்பி வைக்கப்படவிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாநிலங்களவை காட்டிய வழியில் வழிமொழிந்து திருநங்கைகளின் உரிமைக் கதவுகளை திறந்துவிட வேண்டும் என்பதே மனித சமத்துவம் பேணும் அனைவரின் எதிர்பார்ப்பும் ஆகும்.

45 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக தனிநபர் கொண்டுவந்த ஒருவரைவுத் தீர்மானம் ஒரு மனதாக ஏற்கப்பட்டு, சட்டமாக்கப்பட்டுள்ளது. இது தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவாவுக்கு கிடைத்துள்ள வரலாற்றுப் பெருமை. திருநங்கைகளுக்கு எதிராக உடலியல், கருத்தியல் அடிப்படையில் திணிக்கப்பட்டு வந்த வன்முறைகள் அதிகரித்த நிலையில் இப்படி ஒரு வரைவு நகலைக் கொண்டு வந்ததாக திருச்சி சிவா குறிப்பிட்டுள்ளார்.

பிறப்பில் ஊனமாகிப் போன இவர்களில் திருநங்கைகள் மட்டுமின்றி திருநம்பிகள் என்று இருபாலினத்தவர்களும் இருக்கிறார்கள். பெண், ஆண் பாலினத்தில் மாற்றுத் திறனாளிகளை வகைப்படுத்துவது போன்றே இவர்களையும் பெண்-ஆண் மாற்றுத் திறனாளிகளாகக் கருதப்பட வேண்டும் என்று, திருநங்கை லிவ்விங் ஸ்மைல் வித்யா கூறியிருக்கும் கருத்தை நாம் வரவேற் கிறோம். அதேபோல், 'மூன்றாம் பால் இனம்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதும் ஏற்க இயலாததேயாகும். அப்படியானால் முதலாம் பால் இனம், இரண்டாம் பால் இனம் என்ற படிநிலை ஏற்றத் தாழ்வுகளை மறைமுகமாக ஏற்பதாகிவிடும்!

ஜாதியமைப்பில் நிலை நிறுத்தப்பட்டுள்ள மேல், கீழ்படி நிலைகளே ஒடுக்குமுறைகளை திணித்துக் கொண்டிருக்கின்றன. திருநங்கைகள், திருநம்பி களையும் அதே நிலைக்குத் தள்ளிவிடக் கூடாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பெண்-ஆண் என்ற பிறப்பின் அடிப்படை யிலான அடையாளங்களானாலும் கருப்பு-வெள்ளை என்ற இன அடிப்படையிலான அடையாளங்களாலும் பாகுபாடுகளுக்கு உள்ளாக்கப்படக் கூடாது என்பதே உலகம் முழுதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற கொள்கை.

அய்க்கிய நாடுகள் இந்த மானுட சமத்துவத்தையே உரிமைகளாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழர் சமுதாயத்துக்கு 'சுயமரியாதை' என்ற பெயரில் பெரியார் முன் வைத்த சிந்தனைப் புரட்சியும் இதே நோக்கம் கொண்டதுதான்.

திருநங்கைகளை அவர்கள் பிறப்பின் அடிப்படையில் இழிவுக்கு உள்ளாக்கக்கூடாது என்ற அதே சமூக நியாயம், 'பிராமண', 'சூத்திர' பாகுபாடுகளுக்கும் பொருந்தக் கூடியதேயாகும். பிறவியின் அடிப்படையில் மானுட சமத்துவத்தை மறுக்கும் எந்த கொள்கையும் ஒழிக்கப்படவேண்டும் என்ற உயரிய நிலையை எட்டும்போது மட்டுமே மனிதகுலம் அதன் முழுமையான சிறப்பை அடையும். அதைத்தான் வள்ளுவர், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார். அந்த கொள்கை வழியில் 'திருநங்கை' உரிமைகளுக்கு ஏற்பு வழங்கிய மாநிலங்களவைத் தீர்மானத்தை வரவேற்கிறோம்.

### 'நாம் தமிழர் கட்சி' அறிவிப்பு

# பெரியார் மீது 'அவதூறு' கூறுவோர் கட்சி நீக்கம் செய்யப்படுவர்

*நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் சீரிய அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.*

தமிழ்ச்சமூகத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதி மத எதிர்ப்பு, பெண்ணடிமை தகர்ப்பு, போன்ற பல்வேறு தளங்களில் தந்தை பெரியார் ஆற்றியுள்ள பங்களிப்பினை என்றும் மிகவும் நன்றியுடன் நினைவு கூர்கின்ற நாம் தமிழர் கட்சி, அவரை தனது பெருமைமிக்க வழிகாட்டிகளில் ஒருவராக வைத்து போற்றுகிறது...

சமீப காலமாக இணைய வெளிகளில் பெரியார் தொடர்பான கண்டிக்கத்தக்க, அருவருக்கத்தக்க, அவதூறு மிக்க பதிவுகள் உலவி வருவதை நாம் கவனிக்கிறோம். மேற்கண்ட பதிவுகளில் நாம் தமிழர் கட்சியை சேர்ந்த சிலரின் பங்களிப்பினையும் நாம் கண்காணித்து வருகிறோம். இந்துத்துவா-காவி அபாயம் சூழ்ந்துள்ள இக்காலத்தில் தந்தை பெரியாரை இழிவுப்படுத்துகிற எச்செயலும் இந்துத்துவா-காவி கும்பலுக்கு வலு சேர்க்கிற செயல்களாகவே அமைந்துவிடும் என்பது உறுதி.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங் கிணைப்பாளர் சீமான் தமிழ்த் தேசிய இன விடுதலைப் பாதையில் மாபெரும் வழிகாட்டியாக தந்தை பெரியார் விளங்குகிறார் என்று நேற்று நடந்த அண்ணல் அம்பேத்கார் வீரவணக்க பொதுக்கூட்டத்திலும் தொடர்ச்சியாக பல்வேறு கூட்டங்களிலும் புகழாரம் சூட்டி வருகிறார். கட்சியின் பொது கருத்தியல் இவ்வாறு இருக்க, தந்தை பெரியார் குறித்த அவதூறு கருத்துக்களை வெளியிடும் எவரும் நாம் தமிழர் கட்சிக்கு தேவை இல்லை எனவும், அவர்கள் கட்சியில் இருந்து விலகிக் கொள்ளலாம் எனவும், இந்த அறிவிப்பினையும் மீறி தந்தை பெரியார் குறித்த அவதூறு செய்திகளை வெளியிடும், பரப்பும், கீழமை வார்த்தைகளால் விமர்சிக்கும் எவரும் நாம் தமிழர் கட்சியில் இருந்து நீக்கிட நாம் தமிழர் இணையத்தள பாசறை பரிந்துரைக்கும் எனவும் இதன் மூலம் கண்டிப்பாக அறிவிக்கப்படுகிறது.

கட்சியின் கட்டுப்பாட்டிற்கு, கட்சியின் பொது நோக்க கருத்தியலுக்கு விரோதமாக செயல்படு வோரை கண்காணிக்க இணையத்தள பாசறையின் நிர்வாகிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்கள், உறுப் பினர்கள், அனைத்துப் பாசறை பொறுப்பாளர்கள், செயல் வீரர்கள், ஆதரவாளர்கள் ஆகிய அனைவருக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும் என்று அக்கட்சியின் இணையத்தளப் பாசறை தலைமைப் பொறுப்பாளர்கள் மணி செந்தில், சேபாக்கியராசன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

## பூணூல் அறுப்பு நிகழ்ச்சி: கழகத்துக்கு ஏற்புடையதல்ல!

சென்னையில் சில பகுதிகளில் பார்ப்பனர்களின் பூணூல்களை அறுத்ததாக திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சார்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த பூணூல் அறுப்பு, திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு உடன்பாடானது அல்ல. இதை அவர்கள் செய்திருக்கக்கூடாது என்பதே திராவிடர் விடுதலைக் கழகத்தின் நிலைப்பாடு. 'பூணூல்' என்ற பிறப்பின் ஆதிக்க சின்னத்தை கருத்தியலாக மக்களிடையே எடுத்து விளக்கி வருகிறது, பெரியார் இயக்கம்.

இந்த நிகழ்வை -திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்கவில்லை என்றாலும் இதை தனித்துப் பார்க்காமல் அண்மைக்காலமாக பெரியாரை இழிவாக தரம் தாழ்ந்து விமர்சிக்கும் கருத்துகளோடு இணைத்துப் பார்க்க வேண்டும். எச். ராஜா போன்ற பார்ப்பனர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களில் பெரியார் படங்கள் கொளுத்தப்படுவதையும், செருப்பாலடிக்கப்படுவதையும் காவல்துறை தடுக்காமல் அனுமதித்து வருகிறது. தாலியகற்றிய பெண்களை சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று அதே பார்ப்பனர் பேட்டி தருகிறார். பெரியார் இயக்கம் நடத்தும் நிகழ்வுகளில் கலவரம் விளைவிப்பது, தடுக்க முயற்சிப்பது போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன. இந்த நிலையில் பெரியார் இயக்கத்தினரை ஆத்திரமூட்டி அவர்களின் செயல்பாடுகளை முடக்கிடும் பார்ப்பனிய சதிவலையில் இந்தத் தோழர்கள் சிக்கியிருக்கக் கூடாது.

**– தலைமைக் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம்**

### 'எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்'

# சேலம் நகரில் கழகத்தின் பரப்புரை



எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் சேலம் மாநகரில் ஏப்ரல் 17, 18 ஆகிய இரண்டு நாட்கள் சேலம் மாநகர செயலாளர் பரமேஸ் குமார் தலைமையில் தெருமுனை பிரச்சாரம் சிறப்பாக நடைபெற்றது. ஏப்ரல் 17 அன்று மாலை அன்னதானபட்டி டாக்டர் அம்பேத்கர் சமுதாய கூடம் அருகே பிரச்சாரம் நடை பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு அப்பகுதியில் உள்ள அம்பேத்கர் கல்வி இயக்கத்தைச் சார்ந்த தோழர் க.சந்திர கணேஷ் இலவசமாக மின்சார மளித்தார். ரா.ரஞ்சித் தோழர்களுக்கு இரவு உணவு வழங்கி, நிகழ்ச்சிக்கும் நன்கொடை வழங்கினார். இந் நிகழ்ச்சியில் திராவிடர் கழக சேலம் நகர பொறுப்பாளர் பூபதி கலந்து கொண்டு 100 ரூபாய் நன்கொடை வழங்கினார். இரண்டாம் நாள் நிகழ்ச்சி மூனாங்கரடு பகுதியில் நடை பெற்றது. ஆத்தூர் மகேந்திரன் இரண்டு நாள் நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி செய்துகாட்டி சிறப்புரை ஆற்றினார். மாநகர அமைப்பாளர் மோ. பாலு இரண்டு நாள் நிகழ்ச்சியிலும் சிறப்புரையாற்றினர். இரண்டாம் நாள் நிகழ்ச்சியன்று ஏற்காடு பகுதியிலிருந்து வந்திருந்த ஆசிரியர் அய்யா தேவதாஸ் சிறப்புரை யாற்றினார். நிகழ்ச்சி முடிந்தவுடன் அப்பகுதி இளைஞர்கள் ஆர்வமுடன் வந்து வாயில் கற்பூரம் ஏற்றிபார்த்து அறிவு விளக்கம் பெற்றனர். சரவணன் அனைவருக்கும் அவரது இல்லத்திலே இரவு உணவு ஏற்பாடு செய்திருந்தார்.

**–பரமேஸ்குமார், சேலம்**

# புராணங்களில் அறிவியலைத் தேடும் அவலம்!

**(கொளத்தூர் மணி உரை... முதல் பக்கத் தொடர்ச்சி)**

திறந்து பார்த்திருந்தாலே தெரிந்திருக்கும் அதைவிட்டு சொல்லிக்கொண்டே இருக்கிறாரே என்று அவரைப் பின்னால் கிண்டல் செய்தார்கள் என்பதாகச் சொல்வார்கள்.

யாராவது பரப்பிவிடும் கருத்தை உறுதிபடுத்திக் கொள்ளாமலேயே பல கருத்துகள் பின்பற்றப்படு கின்றன; அதில் ஒன்று தான் மெக்காலே பற்றியது. வேதம் புனிதமானது என்கிறார்கள்; கருப்பர்களை (நம்மவர்களை) அழிப்பதற்காக, மது மாமிசம் கொடுத்து இந்திரனைத் (கடவுளை) துணைக்கு அழைப்பதைதான் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக் கின்றது; அதை படித்து பார்க்காமலேயே புனித மானது என்று சொல்லி வருகிறார்கள். இதை யெல்லாம் பார்த்த மெக்காலே ‘மினிட் ஆன் எஜுகேசன்’ என்று எழுதுகிறார். அதில் சொல்லு கிறார் . ‘இந்த நாட்டில் இருக்கின்ற இலக்கியங்கள் அறிவுச் செல்வங்கள் (பாரசீக, அரேபிய, சமஸ்கிருத மொழிகளெல்லாம் அப்போது இருந்தது) என்று சொல்வதை எல்லாம் சேர்த்துப் பார்த்தேன்; இவைகள் சொல்லுகின்ற செய்திகள், ஐரோப்பிய தொடக்கப் பள்ளி மாணவனின் புத்தகத்தில் இருக்கும் செய்திகளின் அளவுக்குக் கூட இல்லை’ என்று.

இங்கிருந்த அறிவியல், வரலாறு, புவியியல் எல்லாமே வேடிக்கையாக இருக்கின்றது; இவனுடைய புவியியலில் பாற்கடல் எல்லாம் இருக்கின்றது. ஆயிரம் அடி உயர அரசர்கள் இவனுடைய வரலாற்றில் இருக்கின்றார்கள். அறிவியல் ஒன்றுமே இல்லை. எனவே இவர்களுக்கு நாம் அறிவியலை கொடுத்தாகவேண்டும் வரலாற்றை கொடுத்தாக வேண்டும் புவியலைப் பற்றிய செய்திகளை புரிய வைக்க வேண்டும் என்பதற்காக ஒரு கல்வி முறை வேண்டும் என்று சொன்ன மெக்காலேவை ஆங்கிலத்தை நம்மீது புகுத்தியவன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மெக்காலே சொல்கிறார் “எங்களில் சரிபாதி பேர் தாய் மொழியில் கல்வி வேண்டும் என்றார்கள்; நாங்கள் சரிபாதி பேர் ஆங்கிலத்தில் தான் வேண்டும் என்று சொன்னோம்; நாங்கள் எல்லாம் விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தோம்; முதலில் ஆங்கிலத்தில் கல்வியை கொடுப்பது, அதன் வழியாக அறிவை பெற்ற அந்தந்த மொழிக்காரர்கள் ஒரு இருபது - முப்பது ஆண்டுகளில் தங்கள் மொழியில் நூல்களை கொண்டுவந்து விடுவார்கள் என்று முடிவு செய்தோம்” என்று.

அரசின் தூண்களாக மூன்றைத்தான் சொல்வார்கள்; ஒன்று சட்டம் இயற்றுகின்ற துறை, அடுத்து நீதித்துறை, மற்றொன்று நிர்வாகம் செய்கின்ற அரசு அதிகாரிகள் துறை. இந்த மூன்றிலும் ஒன்றுகூட ஒழுங்காக இல்லை. இதன் மீதெல்லாம் நமது கவனம் செல்லவே விடுவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பற்று பேசுகின்றார்கள். கோட்சேவுக்கு சிலை வைக்க வேண்டும் என்று பி.ஜே.பி சொல்கின்றான். ஒரிஜனல் காந்தியை கொன்று வழக்கு நடத்தி, உயர் நீதி மன்றத்திற்கு போய், மேல் முறையீட்டில் உறுதி செய்யப்பட்டு, தூக்கில் போடப்பட்ட கோட்சேவை தேசபக்தன் என்கிறான்; ஆனால் இராஜீவ் காந்தியை கொன்றதாக வழக்கு ஏதும் நடத்தப்படாமலேயே, குற்றம் சாட்டப்பட்ட பிரபாகரனின் படம் வைத்தால் கூட கைது செய்கிறார்கள்; என்ன நிர்வாக துறை இது?

தமிழ்நாட்டை எப்படியாவது பிடித்தாக வேண்டும் என்று ஒவ்வொன்றாக செய்கிறார்கள். 1925 இல் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ் தொண்ணூறு ஆண்டுகள் கழித்து 2014 இறுதியில் தான் இட ஒதுக்கீட்டை ஏற்றுக் கொள்கிறோம் என்று அறிவித்திருக்கின்றார்கள். கடந்த ஆட்சியில் இட ஒதுக்கீடு பற்றிய சிக்கல் வந்த போது, தமிழ்நாட்டில் மட்டும் ஏற்றுக் கொள்வதாக, இங்கிருக்கும் பி.ஜே.பியினர் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டை எதிர்க்க முடியாது என்ற நெருக்கடியை உணர்ந்து பி.ஜே.பி சொன்னதை இப்போது ஆர்.எஸ்.எஸ்ஸும் சொல்கிறான். திருக்குறளை தேசிய நூல் ஆக்குவோம் என்று தருண்விஜய் சொல்கிறார். அவருக்கு பாராட்டு விழாவும் நடத்தியாகிவிட்டது. இப்படிப்பட்ட சூழலில் அவர்கள் சொல்கிறார்கள் எங்கள் பிரதமர் எப்போது வெளிநாட்டு தலைவர்களிடமெல்லாம் கீதையை கொடுத்தாரோ அப்போதே கீதை தேசிய நூலாக முடிவு செய்யப்பட்டதாக தான் பொருள் என்கிறார் சுஷ்மா சுவராஜ்.

### கீதை: விவேகானந்தர் கூறியது என்ன?

கீதையை பற்றி நாங்கள் கேட்கும் கேள்விகள் ஒருபுறம் இருக்கட்டும்; கீதையைப் பற்றி அம்பேத்கர் எழுதியதை கூட விடுங்கள். பார்ப்பனர்களின் ஹீரோ விவேகானந்தர் என்ன சொல்கிறார்? (காங்கிரசில் காந்தி, பி.ஜே.பி யில் மோடி என பார்ப்பன ரல்லாதவரை கொண்டுவந்து வைத்துக் கொண்டு உங்கள் ஆள் என்று நம்மிடம் காட்டுவார்கள்; அப்படிதான் விவேகானந்தரையும் இவர்கள் காட்டுகிறார்கள்.) போர் நடந்து கொண்டிருக்கும் போது கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு சொன்னது தான் கீதை; இவ்வளவு பெரிய புத்தகமாக இருக்கிறதே ! சண்டை நடக்கும் போது யார் சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்தது? என்று விவேகானந்தர் கேட்டார். இது ஒரு பித்தலாட்டம் என்ற பொருளில் விவேகானந்தர் சொன்ன கீதையை தான் தேசிய நூலாக்க வேண்டும் என்று சொல்கின்றான்.

விவேகானந்தர் மேலும் பலவற்றை கேட்டார். வயதான மாடுகளை பாதுகாக்க கோசாலை என்று நடத்துபவர்கள் நன்கொடை கேட்டு விவேகானந் தரிடம் சென்றார்கள்; (ஞான தீபம் என்று விவேகாந்தரின் நூல்களை தொகுத்து போட்டிருக் கிறார்கள் வாய்ப்பிருப்பவர்கள் படித்துப் பாருங்கள்) பீகாரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவாமல் இதை ஏன் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று விவேகானந்தர் கேட்டதற்கு, என்ன இருந் தாலும் கோமாதா நமது தாய் அல்லவா? என் கிறார்கள். ஆம் உங்களைப் போன்ற புத்திசாலிகளை வேறு யார் பெற்றிருக்க முடியும்? என்கிறார் விவேகானந்தர். இதை நாங்கள் பேசும் வீரமணியோ அம்பேத்கரோ எழுதவில்லை; பார்ப்பனர்கள் பாராட்டும் விவேகானந்தர் சொல்கிறார்.

### மோடியின் கண்டுபிடிப்புகள்

அறிவியலை பரப்புவதற்கு ஆய்வதற்கு பல நிறுவனங்கள் இருக்கின்றன; இப்போது மோடி புதுசா அறிவியலை கண்டுபிடிக்கின்றார். பிளாஸ்டிக் சர்ஜரி அந்த காலத்திலேயே - புராணத்திலேயே இருந்திருக்கின்றது; இல்லையென்றால் விநாயகரின் உடலில் யானையின் தலை எப்படி ஒட்டப்பட்டிருக்க முடியும்? என்று விஞ்ஞானிகள் மாநாட்டில் பிரதமர் மோடி பேசுகிறார். இந்த மடையன்களும் (விஞ்ஞானிகள்) கேள்வி கேட்காமல் - எதிர்ப்பு தெரிவிக்காமல் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். குழந்தையின் கழுத்தின் சுற்றளவு எவ்வளவு? யானையின் கழுத்தின் சுற்றளவு எவ்வளவு? என்ற சிறு கேள்வியை அன்று பெரியார் கேட்டார். எவரிடமிருந்தும் பதில் வரவில்லை

அந்த காலத்திலேயே புஷ்பக விமானம் இருந்ததாக மோடி பேசுகிறார்; அதே போல இங்கு வளவன் ஏவா வானவூர்தி (பைலட் இல்லாத ராக்கெட்), கைவிட்டகலா கால இயந்திரம் (ரிஸ்ட் வாட்ச்) இருந்தது என்று இங்கிருக்கும் புலவர்களும் புழுகி கொண்டிருக்கிறார்கள். இருவர் சொல்வதும் பொய்தான்; யார் பொய் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ‘தமிழ் படித்தாலே உனக்கு கண் பின்னால் போய் விடுகிறது’ என்றார் பெரியார். நாளைக்கு என்றே எந்த புலவரும் பேசுவதில்லை; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் என்பார்கள். இதைச் சொன்னால் பெரியாரை கோபித்துக் கொள்கிறார்கள்; ‘கடவுளையும் காதலையும் விட்டால் உன் இலக்கியங்களில் என்ன இருக்கின்றது? எடுத்துக் காட்டு’ என்றார் பெரியார். அப்படி காட்டுவதற்கு எதுவும் இல்லை. சிலர் பட்டிமன்றங்களில் பேசுவதற்கு மட்டும் பயன் பட்டிருக்கலாமே தவிர வேறு எதற்கு பயன்பட்டது?

துரியோதனன் மனைவியும் கர்ணனும் தாயம் ஆடிக்கொண்டிருந்தார்களாம்; துரியோதனன் வந்ததைப் பார்த்து எழுந்த அப்பெண்ணின் முந்தானையைப் பிடித்து கர்ணன் இழுத்தானாம்; முத்துகள் எல்லாம் உதிர்ந்து விட்டதாம். உடனே துரியோதனன் ‘பொறுக்கவோ, கோக்கவோ’ என்று கேட்டானாம்; “அதற்குப் பொறுத்துக் கொள்ளட்டுமா? கோபித்துக் கொள்ளட்டுமா? என்பதும், பொறுக்கிக் கொடுக்கட்டுமா? கோர்த்துக் கொடுக்கட்டுமா? என்பதும் பொருள்” என்று கூறுகிறார்கள்; வட இந்தியாவில் நடந்ததாகச் சொல்லபடும் கதை இது; துரியோதனன் தமிழில் எப்படி பேசியிருப்பான்? என்று யாரும் கேள்வி கேட்பதில்லை. இப்படித் தான் இவர்கள் தொடர்ந்து புழுகுகிறார்கள்.

பாரதப் போர் நடக்கிற போது, அரண்மனையில் இருக்கும் கண் தெரியாத திரிதராஷ்டரனிடம், சஞ்சயன் என்பவன் ஒரு கருவி மூலமாக பார்த்துப் போரின் நிலைமையைப் பற்றி சொல்லுகின்றானாம்; எனவே அந்த காலத்திலேயே தொலைக்காட்சி இருந்தது என்கிறார். இவை எல்லாவற்றையும் விஞ்ஞானிகளில் மாநாட்டிலேயே பேசுகிறார்கள். படிப்புக்காரன் யாரும் அங்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ‘ஆலிஸ் இன் தி வொண்டர் லேண்ட்’. அரேபியன் கதைகள் இதையெல்லாம் கடவுள் என நம்பாமல் கதை என்று படித்துக் கொண்டே போகிறார்கள்; ஆனால் இவர்கள் மட்டும் நம்மை நம்பச் சொல்கிறார்கள். அதன் மீது தன்னுடைய ஆட்சியை அறிவியலை எல்லாவற்றை யும் கட்டமைத்து விட எண்ணுகின்றார்கள்; எல்லாம் அதையொட்டி போகவேண்டும் என்கிறார்கள்.

ஹரியானாவில் செத்துப் போன மாட்டின் தோலை உரித்ததற்காக, ஐந்து பேரை கொன்றான். மனித உயிர்களைவிட, செத்த மாட்டை உயர்வாகக் கருதி கடந்த ஆட்சிக் காலத்தில் இப்படி செய்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். (ஈழ சிக்கல் வருகின்ற போதெல்லாம் அவ்வப்போது கிரிக்கெட் போட்டி வந்துவிடும்; பலரும் கிரிக்கெட்டில் கவனம் செலுத்தி அனைத்து பிரச்சனையையும் மறந்து விடுவார்கள்.) இப்படி பல சிக்கல்கள் நடக்கும்போதெல்லாம் நம் நாட்டில் அவ்வப்போது ஜாதி சிக்கல்கள் வந்துகொண்டே இருக்கின்றது. ஜாதி வாதம் பேசப்படுகின்றது. ஜாதியை உயர்த்தி பேசுபவர்கள் யார்? பலன் அனுபவிக்கும் ஜாதியா? இல்லையே பாதிக்கப்பட்டவன் அல்லவா பேசிக் கொண் டிருக்கிறான். அவர்களிடம் போய் அவர்களை விளங்கச் செய்வதற்குத் தான் இந்தப் பயணம்.

பெரியார் ஜாதியை பற்றி பல விளக்கங்களை சொல்லியிருக்கின்றார். சுயமரியாதை இயக்கம் தொடங்கும் முன்பே காங்கிரஸ்காரராக இருக்கும் போதே பேசத் தொடங்கிவிட்டார்; காங்கிரஸ் மாநாடுகளில் பேசுகிறார். காரைக்குடி ஜில்லா மாநாட்டிற்கு பெரியார் தான் தலைவர்; அந்த தலைமை உரையில், மனுதர்மத்தைப் பற்றி, சூத்திரன் என்பதற்கான அர்த்தம் பற்றி, தாழ்த்தப் பட்டவர்களை அவமதிக்கலாமா என்பதைப் பற்றி பல பிரச்சனைகளை பேசுகிறார். தீண்டாமை என்பதில் இருக்கும் மூடத்தனத்தையும், மூர்க்கத்தனத்தையும் பார்த்துப் பின்னால் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். இன்று என்ன அவசரம் என்று கருதுவதற்கு என் மனம் இடம் தர மறுக்கிறது என்று எழுதுகிற அளவிற்கு தீண்டாமையின் கொடுமையைப் பெரியார் உணர்ந்திருந்தார்; ஆனால் பாதிக்கப்பட்ட நாம் உணரவில்லை.

**(தொடரும்)**


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

DATE OF PUBLICATION 30.04.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

## பூணூல்: காந்தியார் எதிர்ப்பு

பூணூல் அணிவதை எதிர்த்து காந்தியார் பதிவு செய்த கருத்து:

"இலட்சக்கணக்கான இந்துக்கள் பூணூல் தரிக்காமல் இருக்கும் போது அது எனக்கு அவசியமென்று தோன்றவில்லை. ஆதலால் நான் அதை அணியவில்லை. பூணூலை அணிபவன் உயர்ந்த வாழ்வு, மாசற்ற வாழ்வு வாழ வேண்டும்., ஆத்மார்த்தீகமான புனிதத் தன்மையின் அறிகுறியாக இருக்க வேண்டும் இப்பூணூல். இன்றுள்ள இந்துக்கள், இந்து, இந்து மதம் உள்ள நிலையில், இப்பூணூலையும் அணிந்து கொள்வதற்குத் தகுதியுள்ளவர்களா என்பது எனக்கு சந்தேகம். இந்து மதத்திலுள்ள தீண்டாமை, உயர்வு தாழ்வு வேற்றுமை, இன்னும் பல கொடுமைகள், போலித்தனம், யாவும் ஒழிந்த பிறகுதான் இந்துவுக்கு பூணூல் அணியும் உரிமை உண்டு. ஆகையால் பூணூல் அணிவதை என் மனம் எதிர்க்கிறது. இந்து மதத்தை உயர்த்துவதற்கு இது ஒரு வழி என்று எனக்குத் தோன்றவில்லை". ('காந்தியார் சுயசரிதம்', பக்.480)

# ஜாதி எதிர்ப்பு: பல்கலை-பள்ளிகளில் கருத்தரங்கு

சென்னை தியாகராயநகரில் உள்ள நவபாரத் மெட்ரிக் பள்ளி அம்பேத்கரின் பிறந்த நாள் நிகழ்வில், ஜாதி எதிர்ப்பு கருத்துகள் வலியுறுத்தப்பட்டன. நிகழ்வில் பேசிய பேராசிரியர் தயானந்தன், உயிரியல் மூலக் கூறு வரலாற்றிலிருந்து ஒரு கருத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார். கடந்த 4200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து 1900 ஆண்டுகள் வரை பல்வேறு ஜாதி களிடையே கலப்புகள் அதிகமாக நிகழ்ந்துள்ளன. அதன் பிறகு, ஜாதி களுக்கிடையே 'கலப்பு' படிப்படி யாகக் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் வர்ணாஸ்ரம முறையும், அதனால் உருவான ஜாதிகளுமே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார். பார்ப்பனர்கள் புகுத்திய வர்ணாஸ்ரம அமைப்பே ஜாதிகளுக்கிடையிலான திருமண சமூக உறவுகளை தடுத்து நிறுத்தியிருக்கிறது என்பதற்கான அறிவியல் சான்று இது.

நிகழ்வில் பேசிய கல்வியாளர் மு.வசந்திதேவி, ஜாதி என்கிற அடையாளம் இருக்கும்வரை சமூக விடுதலை இல்லை என்று கூறிய தோடு, ஜாதியத்தை ஒழிக்க முடியாத நிலையில்தான் அம்பேத்கர் புத்த மார்க்கத்தைத் தழுவினார் என்று குறிப்பிட்டார்.

இதேபோல், சென்னை பல்கலையில் மானுடவியல் துறையும் பொதுப் பள்ளிக்கான மாநில மேடையும் இணைந்து அம்பேத்கர் பிறந்த நாள் கருத்தரங்கை நடத்தின. கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசிய பதிவாளர் டேவிட் ஜவகர், "தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டாலும், ஜாதியத்தின் அடிப்படைக் கூறுகள் மாறவில்லை. ஜாதிய அமைப்பு முறைக்கு எதிராக பெரும் மாற்றம் வேண்டும். அதற்கான இயக்கங்கள் அவசியம்" என்று வலியுறுத்தினார். ஜாதி ஒழிப்புக் குறித்து பல்வேறு சிந்தனையாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

## குழந்தை நலனைவிட 'பசு'வின் பாதுகாப்பே முக்கியமாம்!

உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், இந்தியாவின் எல்லை வழியாக வங்கதேசத்துக்கு மாடுகள் கடத்தப்படுவதை எல்லைப் பாதுகாப்பு படையினர் அனுமதிக்கக் கூடாது என்று கூறியிருப்பதோடு, வங்கதேசத்துக்காரர்களுக்கு மாட்டிறைச்சியே கிடைக்கக் கூடாது என்றும் கூறியிருக்கிறார்.

இந்தியாவில் எதற்கும் பயன்படாத அடிமாடுகள், வங்கதேசத்துக்கு கடத்தப்படுகின்றன. எல்லைப் பாதுகாப்புப் படையினரும் இதைத் தடுப்பது இல்லை. ஆண்டுதோறும் இப்படி கடத்தப்படும் மாடுகள் 25 இலட்சம். வங்க தேசத்தில் இந்த அடிமாடுகள் வெட்டப்பட்டு இறைச்சியாக பதப்படுத்தப்பட்டு, 'வளைகுடா' நாடுகளுக்கு வங்க தேசத்திலிருந்து ஏற்றுமதியாகின்றன. வங்க தேசத்தில் இதற்கான தேவை அதிகமாக இருக்கும். அதே நேரத்தில், இந்தியாவில் பயன்பாடு இல்லாத மாடுகளை பாதுகாக்க முடியாததால் விற்க வேண்டிய கட்டாயமும் இருக்கிறது. எனவே, எல்லையில் கடத்தல் 'கண்டும் காணாமல்' அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில் ராஜ்நாத் சிங், இப்போது கடுமை காட்டுமாறு கூறியிருக்கிறார்.

இதனால், பல்வேறு பசு பராமரிப்பு கொட்டடிகளில் மாடுகளை கூடுதலாக பராமரிக்க வேண்டிய நெருக்கடி உருவாகியுள்ளது. இதற்காக ரூ.31,000 கோடி கூடுதலாக செலவிட வேண்டியிருக்கும். இந்த செலவு, குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் ஊட்டச் சத்துக்காக செலவிடப்படும் தொகையை விட நான்கு மடங்கு அ திகம். குழந்தைகள் நலனுக்கு நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.8,000 கோடி அடிமாடுகளை வெட்டாமல் பராமரிக்க செலவிடப்பட வேண்டிய தொகை ரூ.31,250 கோடி ஏழைக் குழந்தைகள் நலனைவிட பசு மாடுகளின் நலன்தான். இந்த 'வேத புரோகித' ஆட்சியில் முக்கியத்துவம் தரப்படுகிறது.

## பம்பாய் அய்.அய்.டி.யில் கடவுள் நம்பிக்கையற்றோர் 52 சதவீதம்

பம்பாய் அய்.அய்.டி.யில் படிக்கும் மாணவர்களிடையே எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் கடவுள் நம்பிக்கை இல்லை என்று கூறியிருக்கிறார்கள். 22 சதவீதம் முழுமையாக நாத்திகர்கள் என்றும், 30 சதவீதம் பேர் கடவுள் பற்றி கவலைப்படாதவர்கள் என்றும் கூறியுள்ளனர். அய்.அய்.டி. நிறுவனத்துக்காக நடத்தப்படும் பத்திரிகைக்காக இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. பி.டெக். படிக்கும் மாணவர் ஒருவர் கூறுகையில், "நாங்கள் படிக்கும் பொறியியல் படிப்பு, அறிவியல் சார்ந்தது. அறிவியலை நம்பும் என்னைப்போன்ற பல மாணவர்கள், கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்பதை ஏற்கவியலாது" என்றார். 2014ஆம் ஆண்டில் அய்.அய்.டி.யில் சேர்ந்த 260 மாணவர்களிடம் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. **(தகவல்: 'டைம்ஸ் ஆப் இந்தியா', ஏப்.20 2015)**

## 4000 மனித உயிர்களை பலி கொண்ட இயற்கையின் சீற்றம்

நில நடுக்கத்தால் நேபாளத்தில் 4000 பேர் உயிரிழந்து விட்டனர். வட மாநிலங்களிலும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற்பட்ட பனிச் சரிவிலும் பலர் உயிரிழந்துள்ளனர். இயற்கையின் சீற்றத்தால் நிகழ்ந்துவிட்ட மனித உயிர் இழப்புகள் மிகுந்த துயரத்தையும் கவலையையும் தருகின்றன. நில நடுக்கத்தை முன்கூட்டியே அறியக்கூடிய அறிவியல் கண்டு பிடிப்புகள் இன்னும் வரவில்லை. அறிவியலின் முக்கியத்துவம், இப்போதுதான் புரிகிறது. ஒரே நேரத்தில் ஜாதி, மத வேறுபாடு ஏதுமின்றி மனித உயிர்கள் பலியாகிவிட்டன. இயற்கையோடு இணைந்த வாழ்விற்கோ, இயற்கையின் சீற்றத்துக்கோ, ஜாதியும் இல்லை; மதமும் இல்லை. இயற்கையின் முன் மனிதர்களின் அடையாளம் மானுடம் மட்டும்தான்! உறவுகளை, உடைமைகளை இழந்து தவிக்கும் மக்களின் துயரங்களில் நாமும் பங்கேற்கிறோம்!

## வினாக்கள்... விடைகள்...!

- சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாட தமிழக அமைச்சரவை நியமித்த பவானிசிங் நியமனம் செல்லாது.– **உச்சநீதிமன்றம்**

  அம்மாவுக்கு எதிராக அமைச்சரவையே இப்படி குழிபறித்துக் கொண்டு – இன்னொரு பக்கம் பிரார்த்தனைகளை நடத்துகிறார்கள் போலும்!

- பழைமை மாறாமல் இருப்பதற்கு பார்த்தசாரதி கோயில் – 'மார்பிள்' தரைகள் அகற்றப்பட்டு, கருங்கற்கள் பதிக்கப்படுகின்றன. – **செய்தி**

  அப்படியே மின்சாரத்தையும் சேர்த்து துண்டிச்சுடுங்க; பழைமை மாறாம இருக்கும்.

- பெரியார் திடலில் தாலி அகற்றிய பெண்களின் கணவர்கள் செத்துவிட்டதாகக் கருதி, திருவண்ணாமலையில் புரோகிதர்கள் 'கரும காரிய' புரோகிதம் செய்ய முடிவு. – **செய்தி**

  பொய்யும் புரட்டுமே புரோகிதம் என்பதை வெட்கம், மானம் இல்லாமல் நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள்!

- மதவிழாக்களுக்கு யானைகளை பயன்படுத்த தடை போடுக. – **உச்சநீதிமன்றத்தில் வழக்கு**

  யானைகளாக விரும்பி 'மதம்' பிடித்தால் பங்கேற்க அனுமதிக்கலாம்; அதற்கு தடை போட வேண்டாம்!

- இந்தியாவுக்கு 'பரதன்' பெயரை சூட்ட வேண்டும். – **உச்சநீதிமன்றத்தில் வழக்கு**

  'பரதன்' பெயர் சூட்டினால், பிரதமர் நாற்காலியில் 'ராமன்' செருப்புகளை வைக்கச் சொல்வீங்க; அந்த செருப்பு அயோத்தியில்தான் கிடைக்கும் என்பீங்க... நல்லாத்தான்பே போவுது!

- இந்தியாவில் குழந்தை திருமணம் செய்த 1.7 இலட்சம் குழந்தைகள் (தாலி அறுக்கப்பட்டு) விதவைகளாக உள்ளார்கள். – **ஆய்வு தரும் தகவல்**

  தாலி காக்கும் 'தாலி'பான்களே! இதற்கு என்னப்பா, பதில்?

- தமிழ்நாடு தகவல் ஆணைய தலைமை அதிகாரி, ஸ்ரீபதி ஓய்வு பெற்றார். – **செய்தி**

  தமிழ்நாட்டில் அப்படி ஒரு அமைப்பு இருந்தது என்பதை தனது ஓய்வின் மூலம் தகவலாக தந்திருக்கிறார், ஸ்ரீபதி; நல்ல சேவை போங்கோ!

- 'பெருமாள்' பன்றி அவதாரம் எடுத்ததை கேலி செய்யும் கமலகாசன் படத்துக்கு தடை கோரிய வழக்கு தள்ளுபடி. – **செய்தி**

  கவலைப்படாதீங்க; 'பெருமாளை', நீதிபதியாக மற்றொரு அவதாரம் எடுத்து வரச் சொல்லி தடை வாங்கிக்கலாம்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 30th April 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN